
பிரேம ரத்னம்

முல்லை முத்தையா



# மனம் போல் வாழ்வு

ரூ-1




முல்லை முத்தய்யா

9

பிரேமா பிரசுரம்
சென்னை—24.

பிரேம ரத்னம்

# 1

காலை முதல் மாலைவரை இரண்டரை ரூபாய்க்காகத் தன் இரத்தத்தையெல்லாம் வியர்வையாக்கி விட்டு அலுத்துப்போய் அலுவலகத்திலிருந்து வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த மகுடபதியால் வழியில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்த காட்சிகளைக் கண்டு ரசிக்கவே முடியவில்லை என்பதைவிட, ரசிக்கவே மனமில்லாமல் சென்று கொண்டிருந்தான் என்றே கூறலாம்.

அவன் சிந்தனை "இந்த மனித இனம் இப்படிக் காலமெல்லாம் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து கொண்டிருக்க வேண்டியதுதானு? உழைப்பிற்கேற்ற ஊதியமும் தேவைக்கேற்ற வசதியுமில்லாமல் சாகாமல் செத்துக் கொண்டிருக்கத்தான் வேண்டுமா? இதை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணமே இந்த மனித இனத்தின் மனதில் தோன்றுமல் இருப்பதற்கு என்ன காரணம்?"

வறுமைத் தொட்டிலில் கிடக்கும் மனித இனம் இல்லாமை, போதாமை என்ற பாடல்களைத் தாலாட்டுதலாகக் கேட்டுக் கொண்டே எப்படியோ கண்ணயர்ந்து விடுகிறது.

தூங்கித் தூங்கித்தான் இப்படி சோம்பேறியாக மாறியிருக்க வேண்டும்.

விதியின்மேல் பழியைப் போட்டுவிட்டு மதியிழந்து கிடக்கிறது மனித சமுதாயம். இதுதான் வாழ்க்கையா?

வாழ்க்கை என்பது என்ன? சரித்திரமா? நாடகமா? அல்லது நாவலா? மனிதன் பிறக்கிறுன், இறக்கிறுன், இடைப்பட்டக் காலத்தில், தான் அனுபவிக்கும் துன்பத்தின் நடுவில் ஏற்படுகின்ற சிறு சிறு இன்பம் இருக்கிறதே, அதுதான் வாழ்க்கையா?

சே......சே......! என்ன வாழ்க்கை என்று மனதிற்குள்ளாகவே அலுத்துக்கொண்டு நடந்து கொண்டிருந்தான். அவன் எண்ணம், தான் பார்த்துக் கொண்டிருக்கின்ற உத்தியோகத்தின் பக்கமாகத் திரும்பியது.

மகுடபதிக்கு அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்த அலுவலகத்தில் மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஊதியத்தை நம்பித்தான் அவனும் அவன் தாயும் தங்கள் வாழ்க்கை வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டியிருந்தது. ஆறு ஆண்டுகளுக்கு அதிகமாக, அலுவலகத்தார் மனமுவந்தளிக்கும் அந்த எழுபத்தைந்து ரூபாய் முடிப்பைக்கொண்டு தான் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டு இருந்தான் தன் தாயுடன்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று எத்தனையோ முறைகள் அவன் எண்ணியிருக்கிறான். அவன் எண்ணம் உயர்ந்து கொண்டிருந்ததே தவிர, சம்பளம் மட்டிலும் உயராமல் என்றும்போலத்தான் இருந்து கொண்டிருந்தது. அந்த அலுவலகத்தை விட்டு விலகிக் கொள்ளலாமென்றாலோ, பள்ளி இறுதி வகுப்புவரை மட்டுமே படித்திருந்த தனக்கு வேறு யார் கை நிறைய வாரி வழங்கிவிடப் போகிறார்கள்? பட்டதாரிகளே இதுபோன்ற வேலைக்கும் போட்டி போட்டுக்கொண்டு நடையாய் நடந்து கொண்டிருக்கும் காட்சிகளைக் கண்ட பின்னும் இந்த உத்தியோகமும் போய் விட்டால் என்ன செய்வது? என்ற எண்ணமும், அவன் அந்த அலுவலகத்தை விட்டு அசையாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருந்து அவனை அஞ்சவைத்துக் கொண்டிருந்தது.

வாழ்க்கை வானில் பறந்து கொண்டிருந்த எண்ணப் பறவைகளைப் பிடிக்க முடியாமல் மகுடபதி நடந்து கொண்டிருந்தான். எண்ணப் பறவைகள் வாழ்க்கை வானையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சாலையில் உல்லாசமாகச் சென்று கொண்டு இருந்த இளந் தம்பதிகள் மகுடபதியின் எண்ணத்தில் புதிய மாற்றத்தைப் புகுத்தி, அவன் பார்வையைத் தங்கள் பக்கம் இழுத்தனர்.

வாழ்க்கையைப் பற்றி எண்ணிக் கொண்டு சென்றவன், அந்தத் தம்பதிகளைப் பற்றி எண்ணத் தொடங்கினான். தம்பதிகள் புதுமணப் பூங்காவில் நடந்து கொஞ்ச நாட்கள்தான் ஆகியிருக்க வேண்டும்! சாலையில் நடக்கிறோம் என்ற நினைவு கூட இல்லாமல் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

மகுடபதி அந்தத் தம்பதிகளைப் பின் தொடர்ந்து செல்வது போலவே சென்று கொண்டிருந்தான். கடைவீதியை அடைந்ததும், அந்தப் பெண், பூ விற்றுக் கொண்டிருந்த ஒருத்தியிடம் பூ வாங்கினாள். அருகில் நின்று கொண்டிருந்த அவளது கணவன் மல்லிகை மலரையும், தன் மனைவியின் முகத்தையும் மாறி மாறிப்

பார்த்தான். அவன் மனதில் ஏதோ ஒரு வகையான மகிழ்ச்சி தோன்றி யிருக்கவேண்டும். உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியின் கோடுகள், உதட்டைத் திறந்து கொண்டு புன்சிரிப்பாக மலர்ந்தது.

வாங்கிய மலரை அவள், சீவிமுடிக்கப் பட்டிருந்த பிச்சோடாவில் வளையமாகச் சுற்றிக் கொண்டாள். அந்த மங்கையின் கருங்கூந்தலின் இடங்கொண்டதும், மல்லிகை மலருக்கு மதிப்பு அதிகரித்து விட்டது. கடையில் பந்துபோல் சுற்றி வைக்கப் பட்டிருந்ததை விட கன்னியரின் கருங்கூந்தலில் இடங் கொண்ட பின் தனி யழகுடன்தான் காட்சியளித்தது.

கரிய கூந்தலில், வெண்முத்தினைத் தொடுத்து ஆரமாகக் கட்டியது போன்று சூடப்பட்ட மல்லிகைமலர், இருண்ட வானத்தில் பிறைநிலவு உதயமாகியது போல் அழகாக விளங்கியது. ''மலர் இருக்கவேண்டிய இடம் மங்கையரின் கருங்கூந்தல்தான்.'' என்பது எவ்வளவு பொருத்தமானது.

அழகுக்கு அழகு செய்யும் மலரை, இந்த உலகத்து மனிதர்கள், அறியாமையாலோ என்னவோ ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கின்றோம் என்று எண்ணிக் கொண்டு, கல்லுக்கும்,—மரத்திற்கும் சூட்டி அதன் பெருமையைக் குறைக்கின்றார்களே.....! மலரின் பெருமையை மட்டுந்தானா குறைக்கிறார்கள்? அதைச் சூடிக் கொள்வதால். பெருமையும் அழகும் அடையும் பெண்களையும் தான் அவர்களுடைய பெருமைகளையும்தான் குறைக்கிறார்கள். "என் பாதி பிரியாத உயிர்" என்று போற்றப் படவேண்டிய பெண்ணைத்தானே "பெண்ணாகி வந்தவொரு மாயப் பிசாசு" என்று கூறுகிறார்கள். பெண்ணின் பெருமையை உணராத, உணர்ந்து கொள்ள முடியாத பித்து மனங் கொண்டவர்கள் என்று ஆடவரினத்தைப் பெண்கள் மன்னித்து விடுகிறார்கள் போலிருக்கிறது.

பெண்கள் உரிமை முழக்கமிடக் கிளம்பினால் நிலைமையே வேறானதாகி விடும். நவீன உலகத்தில் அல்ல! இதிகாச உலகத்தில்! அம்மைக்கும் அப்பனுக்கும் ஏற்பட்ட பூசல். சக்தி பெரிதா? சிவம் பெரிதா? என்ற சண்டை, அதன் முடிவு ஒரு புராணத்தையே உருவாக்கி விட்டதே!

பெண்ணுக்குத் தலை வணங்குவது இல்லை என்பது, அந்த முனிவனின் உறுதி. ஒவ்வொரு நாளும் அந்த முனிவன், ஐயனுக்கு மட்டுமே தன் வணக்கத்தைச் செலுத்தி வந்தான் பக்தனின் பக்தியைக்கண்டு காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமாகிய ஐயனின் மனம் பெருமை கொண்டது. தன்னை மறக்காமல் தன் நினைவாகவே சதாசர்வ காலமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பக்தனுக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்குத் தோடுடைய செவி

ளர் தயாராக இருந்தார். பக்தனுக்காக அவர் மனம் இளகி நின்றது.

இதையறிந்து அன்னை உமாதேவியின் மனம் வேதனைப் பட்டது. ஒரு மானிடன் தன்னை இழிவுபடுத்தி விட்டானே என்ற எண்ணம் சினத்தை வளர்த்தது.

நான் பெண்தான். ஆனால் பிறை சூடியவனின் பாதி உயிர் என்பதை அந்தக் கசடன் உணராமல் இருந்து விட்டானே! அவன் கிடக்கட்டும்! "உமா! பெண்ணல்ல நீ! என்பாதி பிரியாத உடல், உயிர் என்றெல்லாம் கூறிய மகேசன் மதியுமா மந்தமடைந்து விடவேண்டும்? பாதி உயிரை இழிவுபடுத்தும் அந்தப் பாதகனின் பக்தியை எப்படி இவர் ஏற்றுக்கொண்டார்?

என்னை இழிவு படுத்திவிட்டு, அவரை மட்டும் வழிபடுகின்ற ஆணவக்காரனுக்கு அருள்புரிய எப்படி இவர் மனம் துணிந்தது? ஏன் எண்ணிப்பார்க்க விழைகிலரோ?

'தூக்கிய திருவடியைத் துணையென நம்பினேன் தூய நடராசரே!' என்று பக்தனிடமிருந்து கிளம்பி வந்த இன்னிசைக் கீதம் இவர் அறிவை மயக்கி விட்டதா என்ன?

இந்த மலையரசன் மகளை, ஒரு மானிடன் இழிவுபடுத்தி விட்டான். மனைவியை இழிவுபடுத்திய கசடனுக்கு மகேஸ்வரன் அருள் புரிகிறார்.

பிறைசூடிய எம்பெருமானுக்குத் தானென்ற ஆணவம் தலைக்கேறி விட்டதுபோலும்! நானொருவள் இருக்கிறேன் என்பதையே மறந்து விட்டார் போலும். ஆம். அவர் மறந்துதான் இருப்பார், மறக்கக் கூடியவர்தான். இப்போது மட்டும்தானா? முன்பே பல தடவைகள் மறந்து விட்டிருக்கிறார்.

நானொருத்தி இருக்கிறேன் என்பதை மறந்து விட்டுத்தானே, தாருகா வனத்துப் பெண்களோடு கூடிக்குலாவ ஆசைகொண்டு மானத்தை மறந்து மதிப்பை மறந்து நிர்வாணப் பிச்சாண்டியாகத் தாருகா வனத்துப் பெண்களை வேறு நாடியலைய வேண்டும்?

ஆண்டவன் இப்படிப் பெண் பித்துக் கொண்டவராக அலைகிறாரே என்று உலக மக்கள் தூற்றுவார்களே என்ற எண்ணம் அவர் உள்ளத்தைத் தொட்டிருந்தால் அப்படி நடந்துகொண்டு இருப்பாரா?

இந்த முறை அவருக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும். இந்த உமாவின் சக்தியை அவர் உணர்ந்து கொள்ளும்படியாகச் செய்யவேண்டும்.

"நானென்ற உணர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ள பெண்ணுள் உள்ள ஆத்மாவும், ஆணுள் உள்ள ஆத்மாவும் ஒன்றை யொன்று கவர முனைகிறது! கவர்கிறது. இணைகிறது. அந்த இணைப்பில் நானென்ற உணர்ச்சி இருக்கிறது. இடம் தெரியாமல் மறைந்து போகிறது!"

"இந்தத் தத்துவத்தைத் தென்னுடைய சிவன் எப்படி மறந்தார். திரிசடையரின் அறிவு ஏன் இதை எண்ணிப் பார்க்கவில்லை? எண்ணிப் பார்க்க வைக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு ஐயன் இருக்குமிடத்தை நோக்கி சிவகாம சுந்தரி சினத்தோடு சென்றார்.

நந்தி கணங்கள், நாரதர், கின்னரர், கிம்புருடர், இன்னபிறரும் புடைசூழ வீற்றிருந்த சிவனார், எதிர்பாராத வகையில் சக்தியைக் கண்டதும் புன் சிரிப்பை வெளிப்படுத்திப் பேச ஆரம்பித்தார்.

"வா, உமா, திடீரென்று எங்கே வந்தாய்?" ஐயன் பேச்சில் அன்பைக் குழைய விட்டார்.

"ஒரு விஷயத்தைப்பற்றித்தீர்மானம் செய்துகொண்டு போக வேண்டும் என்று வந்தேன்!"

பார்வதியின் பேச்சிலிருந்த பதட்டத்தையும் சினத்தையும் சிவனார் அறிந்து கொண்டார்.

"என்ன பார்வதி? அவ்வளவு முக்கியமானது? சிரித்துக் கொண்டே கேட்டார்.

"மண்ணுலகிலுள்ள ஒரு முனிவன் சிவசக்தி தத்துவ லௌகீகத்தை உணர்ந்து கொள்ளாமல், என்னை நீக்கிவிட்டு, உங்களை மட்டும் வழிபட்டுக் கொண்டிருக்கிறான்!" சிவகாமிக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது.

உமாவின் நிலை கண்டு சிவன் சிரித்தார். அவரின் சிரிப்பு சிவகாமிக்கு மேலும் சினத்தை உண்டாக்கியது.

"அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று சிவன் கேட்டார்.

"சக்தி பெரிதா? சிவம் பெரிதா? என்று முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்"—பார்வதி.

"உன் விருப்பம் அதுவானால் அப்படியே செய்வோம்!"— இது சிவன்.

சக்திக்கும் சிவனுக்கும் இதுபோல் உரையாடல் நிகழ்ந்திருக்க வேண்டும். அம்மையும் அப்பனும், ஓர் உருவம் கொண்டனர்.

வழக்கமாக வழிபட வந்த முனிவன், தான் வழிபடும் தெய்வத்தின் உடல், பாதி பெண்ணுருவம் கொண்டிருப்பதைக் கண்டான்; பெண்ணைத் தான் வழிபடுவதில்லை என்ற எண்ணம் தவிடு பொடியாகி விடுமோ என்று தயங்கினான். அவன் எண்ணத்தில் புதியதொரு வழி தென்பட்டது.

வண்டுருவம் கொண்டு ஆண்பாதி பெண் பாதியாகவுள்ள அந்தச் சிலையை நடுவில் துளைத்துக் கொண்டு சென்று சிவனை மட்டும் வலம் வந்து வழி பட்டானாம் அந்த முனிவன்.

அர்த்த நாரீஸ்வர புராண லௌகீக பிரபதியவிப்பிலிருந்து, பெண்ணை இழிவு படுத்துகின்ற பண்பு, இன்று நேற்றல்ல ஆண் பெண் உற்பத்திக் காலத்திலிருந்தே வாழையடி வாழையாக வளர்ந்து வந்திருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறதல்லவா!

பெண்ணை இழிவு படுத்த வேண்டுமென்ற கொள்கை, மனிதனின் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து போய் விட்டது.

மலர், மங்கை! இரண்டையுமே மனித இனம் அறியாமையால் நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. நானென்ற உணர்வுகள் தான் இந்த நாசகாரியங்களுக்கெல்லாம் மூலமந்திரம்.

இருண்ட வானத்தில் பிறை மதியைப் போல் விளங்கிய அந்த மல்லிகை மலரின் சரத்தையும் குறையற்ற நெஞ்சத்தோடு கணவன் அருகில் அழகு தேவதையாக நின்று கொண்டிருக்கும் அந்த மங்கையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான் மகுடபதி.

"என்ன மகுடபதி, பொறுமையாக இருக்கிறதா?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். அவனுடன் வேலை பார்க்கும் வரதன் அருகில் நின்று கேலியாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"பொறுமைப் படவில்லை வரதன்! பொங்கிவரும் வேதனையை அடக்க முடியாமல் திண்டாடித் திகைத்து நின்றேன். ஆண்மை மிக்கவனாகிலும், பெண்மையில் மின்னி மறைந்திடும் பேரழகைக் கண்டு அவளுக்கு அடிமையாகி நிற்கிறானே என்று வேதனைப்படுகிறேன்." என்றான் மகுடபதி.

மகுடபதி பேசியதைக் கேட்ட வரதன் சிரித்தான். அந்தச் சிரிப்பு, "நீ சிந்திக்கத்தவறி விட்டாய் மகுடபதி!" என்று கூறுவது போல் இருந்தது.

"வாழ்க்கைத் தத்துவத்தின் உட்பொருள் என்னஎன்பதையே எண்ணிப் பார்க்காமல் தான் வேதனைப் படுகின்றாய். ஆண் பெண் ஐக்கியத் தொடர்பின் சங்கமத்தில் தோன்றிடும் இன்ப

உணர்வுகளுக்குப் பெயர்தான் நண்பா, 'வாழ்க்கை' என்பது! அதைக் கண்டு வேதனைப்படுவது என்பது விந்தையானதுதான்!'' என்றான் வரதன்.

''வாழ்க்கையாம் வாழ்க்கை! வாழ்க்கையா இது? வாழ்க்கை என்ற வார்த்தைக்கே இழுக்கு! ஒரு ஆண், தன் சுயமரியாதையையும் கௌரவத்தையும் மறந்து பெண்ணொருத்தியின் பின்னால் சுற்றிக் கொண்டிருப்பதற்குப் பெயர்தான் வாழ்க்கையா?'' என்று வேதனையுடன் கேட்டான் மகுடபதி.

''பெண்களுக்கு மதிப்பளிக்காத எந்த நாடும் என்றும் பெருமையடைவதில்லை. எதிர் காலத்திலும் அடையப் போவதில்லை. பெண்ணால்தான் ஆண் பெருமையடைகிறான். பெண்ணால்தான் உலகம் பெருமையடைந்து கொண்டிருக்கிறது. பெண்ணுக்காகத்தான் சந்திரனும் சூரியனும், இரவும் பகலும் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. இந்த உலகத்தில் ஆண் உயர்த்தப்படுகிறான் என்றால் அது பெண்ணின் கருணையால்தான்!'' என்று வரதன் பேசிக் கொண்டே இருந்தான்.

''வரதா! மனிதன் தானாகவே நிமிர்ந்து நிற்க வேண்டும், பிறரால் நிமிர்த்தி வைக்கப்பட்டான் என்ற இழிச் சொல்லுக்கு ஆளாகக் கூடாது.''

மகுடபதி ஏன் இப்படி பேசுகிறான் என்று வரதனால் புரிந்து கொள்ள முடியவில்லை சிரித்துக் கொண்டான்.

''மகுடபதி! நீ புரிந்துகொள்ளாமல் பேசுகிறாய். உன் எண்ணம் தவறானது என்பதற்காக நீ ஒரு நாள் வருந்தத்தான் போகிறாய். பெண்ணின் இருதயம் கருணையின் கோயில் அதற்கு இணையான வாஞ்சை, இந்த அகில உலகத்திலும் வேறு இருக்க முடியாது. அதனால்தான் புரட்சிக் கவிஞர் ''அன்னின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரருக்கு மாமலையும் ஒரு கடுகாம்,'' என்கிறார். பெண்கள் தவறான வழியில் நடக்காதவர்களா? என்ற சந்தேகம் உனக்குத் தோன்றலாம். தவறு செய்யக் கூடியவள்தான். நிச்சயம், தவறு தலை காட்டிடத்தான் செய்யும். ஆனால், பெரும்பாலகப் பெண்கள் செய்யும் ஒவ்வொரு தவறும் ஆணின் அசட்டுத் தனத்தாலும், முரட்டு கொள்கையாலும்தான் விளைகிறது.'' வரதன் பேச்சை மகுடபதியின் மனம் ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை. பெண்ணை உயர்வு படுத்த வேண்டும் என்றபிடிவாதத்தால், அவன் பேசுவதாக எண்ணினான் அதை வாய் விட்டும் கூறிவிட்டான்.

''பெண்களுக்குப் பெருமை உண்டாக்குவது ஆடவனின் அபிப்ராயம்தான். வியாபாரி இலாபத்தையும், வட்டிக் கடைக்காரன் வட்டியையும் எதிர்பார்த்து, தங்கள் வாடிக்கைக்காரர்

களிடம் பல் இளித்துப் பேசுவது போலவே, ஆடவர் இனமும் பெண்களிடம் இன்பத்தை எதிர்பார்த்து, அவர்களை உயர்த்தி வைத்திருக்கிறது. அவர்களைப் பற்றி உயர்வாகவே பேசிக் கொண்டிருக்கிறது. அதனால்தான், விக்டர் ஹ்யூகோ என்ற அறிஞர் "அழகிய பெண்களிடம் ஜாக்கிரதையாக இரு. அவர்களுடைய அன்பு தொடங்கி விட்டால், அடிமைத்தனம் கிட்ட வந்து விட்டது என்று பொருள்"! என்று ஆடவர் உலகத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்" என்றான் வரதன்.

வரதன் சிரித்துக் கொண்டான். மகுடபதியின் போக்கு அவனை மீண்டும் மீண்டும் சிரிக்க வைத்துக் கொண்டே இருந்தது. "ஏன் அவன் இப்படிப் பேசுகிறான்? ஏமாற்றம் காரணமாக இருக்குமோ? எந்தப் பெண்ணாவது இவன் வாழ்க்கையில் குறுக்கிட்டு இவன் எண்ணத்தை இப்படி மாற்றி, பெண்களைப் பற்றித் தவறாகக் கருதவேண்டிய எண்ணத்தைப் புகுத்தியிருப்பாளோ? சூடு கண்ட பூனை, பால் பாத்திரத்தைக் கண்டாலே விலகி ஓடுமாமே! அது போல் அல்லவா இருக்கிறது இவன் போக்கு!" என்றெல்லாம் வரதன் தன்னுள் நினைத்துக் கொண்டான்.

மகுடபதியின் கருத்தில் படிந்துள்ள மாசு ஏமாற்றத்தால் ஏற்பட்டதாகத் தான் இருக்க வேண்டும். அதை உடனடியாக மாற்ற முயல்வது, கருங்கல் பாறையின் மீது நஞ்செய் நெல் சாகுபடி செய்ய முனைவதைப் போல்தான் ஆகும். அவன் அறியாமல் பேசுகிறான். பெண்ணின் பெருமையை உணராமல் பேசுகிறான். தன்னையீன்றவள், தன் தந்தையை, பாட்டனை யீன்றவள், தன்னுடன் பிறந்தவள், தனக்கு வரக் கூடியவள், தனக்கு பிறக்கக் கூடியவள் பெண் என்பதையெல்லாம் உணராமல் பேசுகிறான். பெண்கள் இல்லை என்றால் உலகம் இல்லை, உன்னதக் கலைகள் இல்லை. அன்பு இல்லை, அழகில்லை. அறனில்லை, அவ்வளவு ஏன்? அவள் இல்லாவிடில் அவன் இல்லை, இந்த அவனியே இல்லை! என்பதை மறந்து விட்டுப் பேசுகிறான். காலப் போக்கில் நிச்சயம் அவன் கருத்து மாறி விடத்தான் செய்யும்" என்று நினைத்துக் கொண்டு சிரித்தபடி நின்றான்.

"என்ன வரதா?" என்றான் மகுடபதி.

"ஒன்றுமில்லை! துறவிகளுக்குத் தலைவனாக இருக்க வேண்டியவன், எப்படியோ தவறிப் போய், படித்துப் பணியிலும் அமர்ந்து விட்டாயே என்றுதான் ஆச்சரியப் படுகிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினான் வரதன்.

"என் கருத்துக்கள் உன்னையும் சிந்திக்க வைத்து விட்டதல்லவா?" என்றான் மகுடபதி.

"சிந்திக்க மட்டுமா வைத்தது? குருடனிடம் சென்று சித்திரக் கலையைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்தோமே என்று வருந்தவும் வைத்து விட்டது. சரி! வா போகலாம். இதைப் பற்றி பிறிதொரு சமயம் பேசிக்கொள்ளலாம்!" என்று கூறி மகுடபதியை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான்.

இருவரும் சிறிது தூரம் பேசிக் கொண்டே நடந்தார்கள்; வரதன் மனம், மகுடபதி போக்கிற்காக வருந்திக் கொண்டிருந்தது. அவன் மனம் மகுடபதி ஏன் இப்படி மாறினான் என்று ஆராயத் தொடங்கியது.

"மனிதன் ஒரு சந்தேகப் பிராணி!" என்று ஞானி அரிஸ்டாடில் கூறுகிறார். மனிதர்கள் சமூகமாகக் கூடி வாழும் போது, அவர்களிடையே பல சிக்கல்கள், மாற்றங்கள் தோன்றுகின்றன. சமூக அமைப்பு, வாழ்க்கை முறையின் பழக்க வழக்கங்கள்தான், அந்த மாற்றங்களையும்; சிக்கல்களையும் தோற்றுவிக்கும் கருவியாக அமைகின்றன!

சமூக அமைப்பில் தனி மனிதனுக்குரிய இடம் யாது? என்ற கேள்விக்கு விடை கூட்டுறவுதான் என்ற முடிவுக்கே வர வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி அறிந்து கொள்ள முனைந்தால், தனி மனிதனுக்குள்ள தத்துவம் என்ன வென்று ஆராய முனைந்தால் அவன் கூட்டுறவின் தொடர்பிலிருந்து விலகிக் கொண்டு ஓட விரும்பவே மாட்டான்.

நாம் யார்? நமது உள்ளம் எத்தன்மையுடையது? நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? எப்படி நடந்து கொள்ள வேண்டும்? நமக்கும் சூழ்நிலைக்குமுள்ள உறவுமுறை யாது? என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்த்து நடக்க முனைந்தால், எப்படி வாழ்வது என்று முறையை வகுத்துக் கொள்ளவும், நம்மை நாமே திருத்திக் கொள்ளவும், உலகத்தோடு ஒத்து வாழவும், அந்த எண்ணம் துணை புரியும்.

மனிதன் பிறந்ததன் கடமை, உரிமை ஆகிய இரு அம்சங்களையும் தெரிந்து பயனுள்ள வாழ்க்கை வாழ்வும், தனக்கு மட்டுமில்லாமல் பிறர்க்கும் பயன்படும் முறையில் நாம் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் முடியும். அதனால்தான் கிரேக்க நாட்டு சிந்தனையாளன் சாந்த சொரூபி, சாக்ரடீஸ், "உன்னையே நீ அறிவாய்" என்றார் போலும்.

சாதாரண மக்களுடைய கண்களுக்கு மனிதன், மனிதனாகக் காட்சியளிக்கிறான்! வேதாந்திகளின் கண்களுக்கு பஞ்சபூதங்களின் கூட்டுச் சேர்க்கையாகத் தோற்றமளிக்கிறான். உள நூலார் கண்களுக்கு தூண்டல் துலங்கல் கொண்ட ஒரு உயிரியாகக் காட்சியளிக்கின்றான்.

தூண்டல் துலங்கல் கொள்கையின் படி மனிதன் செயல்களில் ஈடுபடுவதற்கு, சில தூண்டல்களாக இருக்கின்றது. அவை அகத் தூண்டல், புறத்தூண்டல் என இருவகைப்படும். பசி, நீர்வேட்கை உறக்கம், அச்சம் காதல் ஆகியவைகள் அகத்தூண்டலாகும்: இவைகள் உள்ளிருந்து செயலாற்றும் படியாகச் செய்கின்றன இவை தவிர, மனிதனைச்சுற்றியுள்ள சூழ்நிலையில் சில தூண்டல்கள் இருந்துக் கொண்டு, மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. முன்னது மகுடபதி மனதிலிருந்து மறைந்து விட்டதோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

புறத்தூண்டலால்தான் மறைந்து கொண்டுள்ள அகத்தூண்டல் மீண்டும் அது இருக்க வேண்டிய இடத்தில் இழுத்துக் கொண்டு வந்து வைக்க வேண்டும்.

சூழ்நிலை மனிதனைத் தாக்குகிறது. மனிதன் சூழ்நிலையைத் தாக்கித் தகர்க்க முனைகிறான். போராட்டத்தில் யாருக்கு வெற்றி என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முடிவைப் பற்றிக் கவலைப்படாமல், முயன்று பார்ப்போம்: அகதூத்ண்டல் அவன் இதயத்தில் இடம் பெறும் படியாகச் செய் வோம்!'' என்று எண்ணிக் கொண்டே வரதன் நடந்தான்.

## 2

மகுடபதியும் வரதனும் நெருங்கிய நண்பர்கள். மகுடபதி தான் வேலை பார்க்கும் அலுவலகத்திலேயே மிகவும் நெருங்கிப் பழகியது வரதன் ஒருவனிடம்தான் மற்றவர்கள் அவனை, எதிலும் சேராதவன் என்று கருதி ஒதுக்கியே வைத்திருந்தார்கள். அவனும் மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதை விரும்பாதவனா கவே இருந்தான். வரதனிடம் மட்டும் எப்படியோ மனம்விட்டுப் பழகி விட்டான்.

மகுடபதியின் வருவாய் அவனையும், அவன் தாயையும் வயிற்றுக் கொடுமைக்கு ஆளாகாமல் பாதுகாக்க ஓரளவு போது மானதாக இருந்தது என்றாலும் சில பல வேளைகளில் திட்டத் திற்குக் கட்டுப்பட்டு செலவு செய்ய முடியாமல் திண்டாட வேண்டிய நிலைக்கு ஆளாகும் நிலையும் உண்டாகிக் கொண்டுதான் இருந்தது. அது போன்ற சமயங்களில் எல்லாம், ''உடுக்கை

இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.' என்ற வள்ளுவனின் குறள்படி, வரதன், மகுடபதி வாய்திறந்து கேட்கும் முன்பாகவே, தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தான். அந்த சம்பந்தத்தின் அடிப்படைக் காரணமோ என்னவோ மகுடபதி வரதனிடம் தனி மரியாதை காட்டி வந்தான்.

மகுடபதியைப் போலத்தான் வரதனின் வருமானம் என்றாலும், அவனுக்குப் பணமுடங்கல் ஏற்படுவதில்லை. மகுடபதியைப் போல், தனி மனிதனும் அல்ல! மனைவி மக்களும் இருக்கிறார்கள். காலம் வரதன் தலையில் இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பன் என்ற பட்டத்தைச் சூட்டி இருந்தது. இருந்தாலும் அவனுக்குப் பணத்தட்டு ஏற்படுவதில்லை.

வரதனின் தந்தை மகன் கேட்டு எழுதும் போதெல்லாம் தவறாமல் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். தவிரவும் அவன் திருமணம் செய்து கொண்ட இடத்திலிருந்தும் அவனுக்குத் தேவையான சலுகைகள் அவன் எதிர்பார்க்காமலேயே கிடைத்துக் கொண்டிருந்தன.

தன்னிச்சையாகத் திரிந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் அந்தக் காட்டுப் பறவையை எப்படியாவது, 'குடும்பம்' என்றகூட்டுக்குள் பிடித்து அடைத்து விடவேண்டும் என்று, வரதன் செய்யாத முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தான்.

மகுடபதியின் போக்கு, வரதனுக்கு வியப்பையும் வேதனையையும் அளித்துக் கொண்டிருந்தது. பெண் என்ற பேச்சைக் கேட்டாலே, பேரிடி கேட்ட நாகம் போல் அடங்கி விடுகிறான். அஞ்சாத வேங்கையின் ஆவேசங்கொண்டு, பெண் இனத்தையே தாக்கிப் பேசுகிறான். இயந்திரம் போல் உழைத்து, பற்றற்றவன் போல் வாழ்ந்து கொண்டிருந்தான்

தன் மகனின் போக்கைக் கண்டு மகுடபதியின் தாயின் பெற்ற மனம் வேதனைப்பட்டது. உலகத்தில் உள்ள எல்லோரையும் போல் அவனும், குடியும் குடித்தனமுமாக வாழவேண்டும் என்று அந்தத் தாயுள்ளம் ஆசைப் பட்டது. ஆனால், அவனோ பிடிவாதமாகத் திருமணம் என்ற பேச்சையே எடுக்க விடாமல் தடுத்துக் கொண்டிருந்தான்.

உற்றார் உறவினர்களையெல்லாம் வெறுத்து ஒதுக்கித் தன் மகன் வாழ்வே பெரிது என்று நம்பியிருந்ததால், அவன் பிடிவாதம் செய்வது அந்த அம்மாளுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

தன் மகன் நன்றாகப் படிக்க வேண்டும், நல்ல பணியில் அமர வேண்டும். நல்ல விதமாக வாழ வேண்டும். நல்ல பெண் ஒருத்தியை மணந்து இல்லறத்தை நல்லறமாக விளங்க வைக்க

வேண்டும், அவனை சான்றோன் என்று இந்தவுலகம் புகழ வேண்டும் அதைக் கேட்டு, அவனைப் பெற்ற மனம் மட்டிலா மகிழ்ச்சியடைய வேண்டும், என்றுதானே உலகிலுள்ள எல்லா தாயுள்ளங்களும் ஆசை கொள்ளும்? அதைப் போலவேதான் மகுடபதியின் தாயின் மனமும் ஆசை கொண்டது.

தாயுள்ளம் கண்டு கொண்டிருந்த ஆசைக் கனவுகளை அழித்தொழிக்க முனைந்து கொண்டிருந்தான் மகுடபதி. தேவைக்கேற்ற பொருள் இல்லாத போது திருமணம் வேறு ஒரு கேடா என்று எண்ணியிருக்க வேண்டும். அவன் தன் குடும்பத்திலுள்ள வறுமை நிலை தன்னைப் பாதிப்பதோடு இருக்கட்டும். வறுமைத் தொல்லையின் பிடிப்பு வாழ்க்கைத் துணையாக வேறு வந்து சேர வேண்டாம். தன் வருமானம் இரண்டு உயிர்களையே நிம்மதியாக வாழ வைக்க முடியாமல் இருக்கின்ற போது, இன்னும் ஒரு உயிர் வேறு ஏன் அதில் பங்கு கொள்ள வேண்டும். இன்னும் ஒரு உயிர் மட்டும் தானா? இரண்டோர் ஆண்டுகள் போனால், அதன் வம்சா வழி வேறு வளர்ந்து விடுமே!

குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை வளருமே தவிர தனக்குக் கிடைக்கும் ஊதியம்மட்டும் குன்றாமல், குறையாமல், முன் இருந்தது போலவேதான் இருந்து கொண்டு இருக்கும். வறுமை சூறாவளி வீசுகின்ற போது, அதில் இல்லறப்படகு நிம்மதியாகச் செல்லவே இயலாது.

வறுமை! அப்பப்பா! அதன் அட்டகாசந்தான் எவ்வளவு? அதன் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிந்து போன குடும்பங்களின் எண்ணிக்கைதான் எவ்வளவு? வறுமைப் பேய் ஆடுகின்ற ஊழிக் கூத்தை சகித்துக் கொள்ள முடியாமல் ஆற்றிலும், குளத்திலும் ஒரு முழம் கயிற்றிலும் ஆவியைப் போக்கிக் கொண்டவர்களின் தொகைதான் குறைவானதா!

வறுமை, நெறியுள்ளவனை நெறியற்றவனாக்குகிறது. பண்பின் பாதையிலிருந்து தவறி நடக்காதவனை அந்தப் பாதையை விட்டுத் தவறி நடக்கும்படிச் செய்கிறது. அமைதியின் அணைப்பில் அகமகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவனை, வெறியனாக்குகிறது. ஒழுக்கமுள்ளவனை, அது குறைந்தவனாக ஆக்கி மகிழ்கிறது. எதற்கும் இல்லாத ஆற்றல், வறுமைக்கு இருக்கிறது. அறிவாளிகளையே அது சிரிக்கவும் வைக்கிறது, சிந்திக்கவும் தூண்டுகிறது. அவர்கள் வாழ்வைச் சிதைத்தும் விடுகிறது. எதையும் எண்ணிப் பார்த்துச் செயலாற்றுகின்ற அவர்களுக்கே அந்த நிலை என்றால், சாதாரண மனிதர்களை எண்ணிப் பார்க்காதவர்களை, எண்ணிப் பார்க்க முடியாதவர்களை, எண்ணிப் பார்க்க நேரமில்லாதவர்களை என்ன பாடு படுத்தும்!

ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் வெளியாகின்ற செய்திகளைக் கண்ட பின்னும், வறுமையில் வாடிக் கொண்டிருப்பவளை வாழ்க்கைத் துணையை வேறு தேடிக் கொள்ள விரும்புவான்?

ஒருதாய், சந்தையில் கீரையோ கீரை என்று விலை கூறுவதைப்போல், வறுமையின் கொடுமை தாங்கமுடியாமல், தான் பெற்ற செல்வத்தை, பத்து மாதம் சுமந்து பெற்ற பாலகனை, பிள்ளையோ பிள்ளை என்று விலை கூறினாளாம். கொடுமைக்காரியென்று அவளைக் குறை கூறுவதற்குமுன், வறுமை அவளை எவ்வளவு தூரம் வாட்டி வதைத்து விரட்டியிருந்தால், அவள் இந்த முடிவுக்கு வந்திருப்பாள் என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இன்னொரு பெண்ணொருத்தி, நவீனகால நல்ல தங்காளாக மாறியிருக்கிறாள். இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரலாறு கண்டபுதுமை! தனக்குள்ள மூன்று குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கிணற்றடிக்குப்போய், ஒவ்வொன்றாகக் கிணற்றினுள் தூக்கி வீசியெறிந்து விட்டு, தானும் கிணற்றுக்குள் குதித்து விட்டாளாம். அவள் குதித்தபோது வழி போக்கர் ஒருவர் கண்டு விட்டாராம். அவரின் முயற்சியால் மூன்று குழந்தைகளும் தாயும் கரையேற்றப் பட்டிருக்கிறார்கள். அந்த இடத்திலேயே மூன்று குழந்தைகளும் சவமாகக் கிடந்தனவாம். இந்தத்தாய் மட்டும் பிழைத்துக்கொண்டாள். அவள் செய்கைக்குக் காரணம் கண்டு பிடிக்கக் குழுமிய பஞ்சாயத்தார். வறுமைதான் காரணம் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள்.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கி ஒவ்வொரு நாளும் சாகாமல் செத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் ஒரேயடியாகச் செத்து விடலாம் என்ற எண்ணம்தானே அந்தத் தாயுள்ளத்தில் புகுந்து, இத்தகையச் செயலினைச் செய்யத் தூண்டியிருக்க வேண்டும்? தான் பெற்ற குழந்தைகளைத் தன் கையாலேயே கொல்ல முனைவதென்றால்......?

இப்படிப்பட்ட வறுமையைத் தொலைக்க வழி என்ன என்பதைப் பற்றி ஒருவரும் கவலைப்பட்டதாக கவலைப் படுவதாகக் காணோம்! வாலிபன் ஒருவன் தனியாக இருந்தால் அவனைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் இல்லறக் குகையில் தள்ளி, அங்கு மனைவிளக்கு ஏற்றி வைத்து, மகிழ மட்டும் கவலை கொண்டுள்ளவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

மனைவிளக்கு ஏற்றிவைத்து மகிழவேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருப்பவர்கள், அந்த மனைவிளக்கு என்றென்றும் சுடர்விட்டு எரிவதற்கு வழியென்ன என்பதைக் கண்டறிய வேண்டாமா?

இதைப் பற்றிக் கேட்டால், எதைப் பற்றியோ பதில் சொல்லுகிறார்கள். சாதாரண மக்கள் மட்டுமல்ல. கற்றறிந்த மேதைகள் கூட அப்படித்தான் பேசுகிறார்கள். "ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு விளக்கேற்றி வைக்கவேண்டுமாம்!" இந்தப் பாட்டிக் காலத்தின் பழமொழி, எல்லா மக்களின் மனதிலும் நன்றாக ஊறிப்போய் இருக்கிறது.

ஆயிரம் பொய்யைச் சொல்லி முதலில் விளக்கேற்றி வைப்பார்கள். பிறகு, அவளை, கட்டியவனை வைத்துக் காப்பாற்ற முடியாத கோழை என்று வசைபாடுவார்கள். அதன் பிறகு...!

இப்படியெல்லாம் மருடபதி எண்ணியெண்ணிப் பார்த்து மனம் புண்ணாகிப் போயிருந்தமையால்தான், திருமணத்தையும் பெண்களையும் வெறுத்துக் கொண்டிருந்தான்.

இது மட்டுமல்லாமல், அவன் கேள்விப்பட்ட ஒரு நிகழ்ச்சி, ஏன்? கண்கூடாகப் பார்த்து கேட்டறிந்துகொண்ட நிகழ்ச்சி, பெண்களையும், திருமணத்தையும் அவன் வெறுப்பதற்கு வித்தாக அமைந்துவிட்டது. அதுமட்டுமல்ல, ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு விளக்கேற்றி வைக்கவேண்டும் என்ற பாட்டி பழமொழியைச் சொல்பவர்களைக் கண்டாலே, ஓங்கி அவர்கள் கன்னத்தில் அறைய வேண்டும் போன்ற உணர்வு துடித்தெழும்!

மருடபதி மீண்டும் ஒரு முறை அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தான். அவன் உள்ளம் நடுங்கியது. அவனையறியாமல் அவன் வாய், பாதகர்கள், பாதகர்கள் என்று முணுமுணுத்தது.

வடிவேலன் என்ற வாலிபனுக்கு உறவினர்கள் ஒன்றுகூடி, ஆயிரம் பொய்யைச் சொல்லி, அவன் வாழ்க்கையில் ஒரு விளக்கேற்றி வைத்தனர். வடிவேலனின் குணப் பண்புகள் நன்றாகத் தெரிந்திருந்தும் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். ஆயிரம் பொய்யையும் அஞ்சாமல் சொல்லி வைத்தனர். அதன் விளைவு!

நினைத்தாலே நெஞ்சம் புண்ணாகும் நிகழ்ச்சிதான். உறவினர்கள் ஆயிரம் பொய்யைச் சொல்லி ஏற்றிவைத்த விளக்குதான், அவன் வாழ்வைச் சுட்டெரிக்கும் பெருந்தீயாகியது. அதன் பெருந்தீயில் சிக்கி, அதிலிருந்து மீளமுடியாமல் அவன் வெந்து கருகிப்போனான். ஆயிரம் பொய்யைக் கூறி விளக்கேற்றி வைத்தவர்களால் அவன் வாழ்வு கருகிப் போகாமல் காப்பாற்ற முடியவில்லை! காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அல்லவா அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட்டிருப்பார்கள்! அவர்களுக்கு அந்த எண்ணமே இருந்ததில்லை. அவர்களிடம் இருந்ததெல்லாம் 'ஆயிரம் பொய் சொல்லி, ஒரு விளக்கேற்றி வைத்து விட்டோம்' என்ற பெருமைதான்.

வடிவேலன் இளமையிலிருந்தே தன்நடத்தையில் நாட்டம் செலுத்தாதவன். கூடாத பழக்கவழக்கங்கள் அவனிடம் இள வயதிலிருந்தே குடிகொண்டிருந்தது. சூதாடுவது அவனுக்கு பொழுதுபோக்களிக்கும் இன்ப விளையாட்டு.

காலையில் எழுந்து வீட்டை விட்டு வெளியே சென்றான் என்றால், நடு இரவு வரையில்கூட சில நாட்களில் வீடு திரும்ப மாட்டான். அவன் பெற்றோர்கள் அவனை எவ்வளவோ கண்டித்துப் பார்த்தார்கள். அவனை திருத்த முடியவே இல்லை. இந்த நிலையில் தான், ஆயிரம் பொய்யைச் சொல்லி, விளக்கேற்றி வைத்தனர். சூதாடிக்குக் குடும்பம் உண்டாகி விட்டது. திருமணத்திற்குப் பின்னும் அவன் திருவிளையாடல்கள் குறையவில்லை. காலப்போக்கில் சூதாட்டத்தோடு குடிப்பழக்கமும் சேர்ந்து கொண்டது. பெற்றோர்களின் வேண்டுகோளோ, மனைவியின் கண்ணீரோ அவன் மனதை மாற்றவில்லை, மாற்ற முடியவில்லை.

வடிவேலனின் பழக்கம், அவன் தந்தையிடம் இருந்த செல்வத்தைத் தேய்க்கும் படையாகியது. அவர் ஊரார் மதிக்க நல்ல விதமாக வாழ்ந்தவர். மகனின் போக்கால், அவர் மனம் புண்ணாகியது. கடன்காரர்களிடம் பல்லைக்காட்டி மானம் கெட்ட வாழ்வு வாழ அவர் மனம் இடந்தரவில்லை. எண்ணினார், எண்ணினார். எண்ணிக்கொண்டே இருந்தார். அந்த எண்ணத்தின் முடிவு இருதய நோயைத் தேடிக் கொடுத்தது. அதன் பலன் நீண்ட நாள் இந்த நீள் வையத்தில் அவர் வாழவில்லை. அமைதியின் அடிவாரத்தில் நிம்மதியாக இருப்பதற்குச் சென்றுவிட்டார். சாவுதான் அவருக்கு சாந்தியளித்தது.

தந்தை இறந்த பிறகு வடிவேலனின் போக்கு கேட்பாரற்றதாகி விட்டது. மனைவி ஏதாவது கேட்டால் அவளை நையப் புடைத்து விடுவான்.

இருந்த சொத்துக்களில் சிலவற்றை விற்று சூதாடினான். மனைவியின் மார்பகத்தில் மறைந்து தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய தாலி, மார்வாடிக் கடையின் இரும்புப் பெட்டியிலுள் சென்று மறைந்து கொண்டிருந்தது. தாலிக்குப் பதிலாக அவள் கழுத்தில் தொங்கிய மஞ்சள் கயிற்றில் ஒரு துண்டு மஞ்சள் இடம் கொண்டது.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. ஒன்று, இரண்டு, மூன்று என்று அந்தக் குடும்பத்தின் எண்ணிக்கையும் ஏறிக் கொண்டே இருந்தது. மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன் என்ற முத்திரையை அவன் தலையில் சூட்டிவிட்டது. ஆனாலும் வடிவேலன் தீராத விளையாட்டுப் பிள்ளையாகத்தான் இருந்தான்.

வடிவேலனின் மைத்துனன் வந்து வடிவேலனையும், தன் தங்கையையும் தங்களோடு வந்து இருக்கும்படிக் கூறி, இருந்த சொத்தை விற்று சுமார் நான்கு ஆயிரம் ரூபாய்களோடு கூட்டிக் கொண்டு வந்தான்.

மாமனூர் ஊருக்கு வந்த பிறகுதான் வடிவேலன் தன் வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்க்க ஆரம்பித்தான். இருந்த பணத்தைக் கொண்டு எப்படியாவது பிழைக்கலாம் என்றால், அந்தப் பணமும் மைத்துனன் கையில் சிக்கிக்கொண்டது. மைத்துனன் ஊரிலிருந்து அழைத்து வந்த தன்னை, தனிக்குடித்தனமாக வைத்துவிடுவான் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை!

மைத்துனன் மனமிரங்கிக் குடும்பத்திற்கு வாங்கிக் கொடுத்திருந்த சாமான்களை வைத்துக் கொண்டுதான் அவர்கள் நாட்களை நடத்திக் கொண்டிருந்தனர். கைச்செலவுக்குக்கூட அவனிடம் பணம் இல்லை. எல்லாம் மைத்துனனிடம் அகப்பட்டுக்கொண்டது. பணம் வேண்டும் என்று கேட்டதற்கு, மைத்துனனிடமிருந்து வந்த பதில் வடிவேலனைச் சிந்திக்க வைத்துவிட்டது.

இருதயமற்ற கொடியவனாகத் தன் மைத்துனன் மாறுவான் என்று வடிவேல் எண்ணியது கூட இல்லை. இப்படிப்பேச அந்த மாபாவியின் மனம் எப்படித்தான் துணிந்ததோ?

""உனக்கும், என் தங்கைக்கும் எந்த வகையுமான தொடர்பும் இல்லை'' என்று எழுதிக்கொடு! உனக்கு இருநூறு ரூபாய்கள் தருகின்றேன்'' என்றான் அந்தக் கொடியவன்.

மறுத்தான் வடிவேலன். அதன் பலன், வடிவேலனை மட்டரகமாக நடத்தினான் மைத்துனன்.

மறைந்து கிடந்த மானவுணர்வு, உயிரின்மேல் இருந்த ஆசையை விரட்டியடித்தது.

சாவை சந்திக்க, அதனோடு சல்லாபங் கொண்டாட அதன் அணைப்பிலே சாந்தியடைய மனிதன் சில வேளைகளில் தயாராகி விடுகிறான். சாவைக் கண்டால் சஞ்சலங்கொண்டு அஞ்சி நடுங்குகின்ற மனிதனுக்கு இயற்கை எப்படியோ ஒருசில வேளைகளில் அந்த சக்தியை ஊட்டி விடுகிறது.

வடிவேலன் சாவதற்குத் துணிந்துவிட்டான். மனைவி மக்களை மறந்து, மற்றும் உலகில் உள்ள இன்பங்கள் அத்தனையும் துறந்து, சாவுப்பெண்ணோடு சல்லாபம் செய்யத் துணிந்து விட்டான்.



அதே அவுனக அக்கினித் திராவகம் அவன் ஆவியைக் குடிக்கும் அரும் மருந்தாக அமைந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாப்பாள் குளத்தில் அருகிலுள்ள பாழடைந்த மண்டபத்தில் வடிவேலனின் உடல் கிடந்ததைக் கண்டு பிடிக்கப் பட்டது; பிரேத விசாரணை நடந்தது. பிணத்தைப் பரிசோதனை செய்தார்கள்.

வடிவேலன், தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையெல்லாம், சுருக்கி, குறிப்பாக ஒரு கடிதம் எழுதி இருக்கும்போது தன்னிடம் வைத்திருந்தான். ஆதாரமாக, சுகபோகியாக வாழ்ந்தவன் தான் என்றாலும், அவன் கடிதத்தில் கண்ணியத்தின் சாயல்தான் நிறைந்து இருந்தன.

தன்னை அவமானப்படுத்தி, தான் சாவதற்குக் காரணமாக இருந்தவன் இன்னவன்தான் என்றும், ஆனால் அவனை ஒன்றும் செய்யாமல் மன்னித்து விடும்படியாகவும், கடிதத்தில் எழுதிக் கேட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் மைத்துனன் என்ற மாபாவியிடம் உள்ள பணத்தைத் தன் பகுதி மக்களுக்குக் கிடைக்கும் விதமாகவும் ஏற்பாடு செய்யவேண்டும், என்று கேட்டு எழுதி வைத்திருந்தான்.

"தற்கொலை!" என்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் கண்ட பண்ணும், 'பணம் இல்லாமல் இந்த உலகில் திருமணம் செய்து கொள்வது கூடாது' என்ற முடிவைத் தவிர வேறு என்ன முடிவு தோன்றும்?

திருமணம் செய்து கொண்டால் சாவு தன்னை வந்து அணைத்துக் கொள்ளுமே என்ற அச்சத்தால் அவன் திருமணத்தை வெறுக்கவில்லை.

வாழ்க்கை என்ற வண்டியின் சக்கரம், உருளுவதற்குப் பணம் என்ற கடையாணிதான் மிகமிக முக்கியமானதாக இருக்கிறது.



தேவைக்கேற்ற பணம் என்ற கடையாணி இல்லையென்றால், வாழ்க்கை வண்டியை, இந்த உலகில் நடத்திச் செல்லவே முடியாது.

வாழ்க்கை—பணம்! ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த இரண்டு சொல்லும் மகுடபதியின் மனத்தைப் படாதபாடு படுத்தி விட்டது.

இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் பணத்திற்குத்தான் பாத பூஜை நடத்துகிறார்கள்.

நேர்மை, நாணயம், ஒழுக்கம், இவைகள் எல்லாம் பணத்திற்கு முன்னால், பணம் படைத்திருப்பவர்களிடமுள்ள ஆதிக்கத்திற்கு முன்னால், படுதோல்வி கண்டு விடுகிறது. ஆதிக்க வெறியர்கள் இந்தப் பணம் என்றென்றும் தங்களிடமே சாசுவதமாகக் குடிகொண்டு விட்டதாக எண்ணி, அற்ப ஆசையால் மனம் போனபடி நடந்து கொண்டிருக்கின்றனர்.

என்றாவது ஒரு நாள் அது தங்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, தங்களை ஆதரவற்ற அநாதையாக்கி விடும் என்ற அறிவை இழந்து விட்டக் காரணத்தால்தான், பணம் படைத்த மனிதர்கள் பண்பை மறந்து, பகுத்தறிவை மறந்து, பரிதாபத்திற்குரியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நேற்று, இன்று, நாளை, நாளைக்கு மறுநாள் ஆகியவைகளை ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படாமல் இருப்பதில்லை.

இன்று வாழ்கின்ற வாழ்க்கைத் தரத்தை மட்டும் மனதிற்கொண்டு நேற்று இருந்த நிலையை மறந்து விடுகிறான். இன்று உல்லாச வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவன், தன்னுடைய நேற்றைய வாழ்க்கை எப்படி இருந்தது என்று எண்ணிப் பார்ப்பானேயானால் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கையில் மறைந்து கொண்டுள்ள இடர்கள் நிச்சயம் அவன் கண்களுக்குத் தெரியாமல் போகாது.

அது போலவே, நாளை எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றியும் மனிதன் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இன்றுள்ள இன்ப வாழ்வு என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது என்று எண்ணி இறுமாந்து கொண்டிருக்கின்றான். அவன் எண்ணத்தில் மண் விழுந்து விடக்கூடிய நிகழ்ச்சிகள், சம்பவங்கள், அவனுக்கே தெரியாமல் உருவாகிக் கொண்டிருக்கும் என்பதை இன்றைய மகிழ்ச்சியில் மறந்து விடுகிறான். அதன் பயனாகத்தான் கண்மூடித்தனமாக நடந்து கொள்கிறான்.

கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் இவை மூன்றையும், ஒவ்வொரு மனிதனும் முறையாக வைத்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எண்ணிப் பார்த்து அதன்படி எழில் குன்றாமல், பூத்துக் குலுங்கும் புதுமலராகக் காட்சியளிக்கும்.

நேற்றிருந்தார், முன்பிறந்தார், மானிடத்தில் நெடு நாளையத் தூணவராய் வீற்றிருந்தார், அவர்கள் வாழ்க்கை யெல்லாம், எண்ணிப் பார்க்காமல் வாழ்ந்த காரணத்தால், காற்றாகக் கனவாகப் போய் விட்டது. கருகிய மலராகி மண் மாதாவின் மடி மீது உதிர்ந்து விட்டது.

பணம்தான், மனிதனை எண்ணிப் பார்க்காமல் தடைசொல் கின்ற பகைவன். ஆழ்ந்த சிந்தனையும், ஆற்றல் மிக்க சொல் வன்மையும் கொண்ட மனிதன், பணம் என்ற அந்த மூன்றெழுத் துக்களுக்குள், தன் அறிவை அடமானம் வைத்து விடுகின்ற காரணத்தால், நேற்று தான் இருந்ததை மறக்கிறான், நாளைக்கு எப்படி இருக்கப் போகிறோமோ என்பதையும் எண்ணிப் பார்க் காமல் இருந்து விடுகிறான். இன்று வாழ்கின்ற வாழ்க்கையில் தான் இன்பம் இருக்கிறதென்று கருதுகிறான். உலகிலுள்ள மற்றைய உயிர் பிராணிகளுக்கில்லாத, எண்ணிப் பார்க்கும் அறிவு மனித னுக்கு இருந்தும் அதைப் பயன் படுத்திக் கொள்ளாமலேயே தன் வாழ்க்கை வண்டியை வேக வேகமாக விரட்டிக் கொண்டோடு கிறான். அதன் முடிவு...!!

நேற்றைய மொட்டு, இன்று மலர்ந்து, நாளை மணம் பரப்ப வேண்டும். அப்போதுதான் அற வாழ்க்கை வாழ்ந்தவனாக மனிதனை இந்த உலகம் மதிக்கும்

அறவாழ்வு வாழவேண்டும். அதனையும் படிப்படியாகச் செய்ய வேண்டும்.

அறவாழ்வுப் பாதையில் நடந்து வந்தவர்களின் அடிச் சுவட்டை நாம் திரும்பிப் பார்ப்போமேயானால், அது இன்றைய மனிதனுக்கு, இந்த அறிவுக் கதையைத்தான் சொல்லும்.

வாழ்க்கை— பணம்— அறிவு, முரண்பட்ட இவை மூன்றும், அடுத்தடுத்துத் தோன்றி மகுடபதியின் மனதைக் குழப்பிக் கொண்டே இருந்தது. மனச்சோர்வு உண்டாகும் வரையில் அவன் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சிந்தித்துக் கொண்டிருந்தானே தவிர, அந்தச் சிந்தனையில் எந்த விதமான தெளிவும் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

## 3

அலுவலகத்தின் படிக்கட்டுக்களை மிதிக்கின்ற போதே மகுடபதியின் மனம் குழம்பிப்போய் இருந்தது. எண்ணற்ற கவலைகளும் ஏழ்மையும் இதயத்தை அரித்துக் கொண்டிருந்தாலும் அலுவலகத்தில் நுழைந்த நாள் முதற்கொண்டு இது நாள்வரை தன் கடமையில் தவறியதே இல்லை. அவனைப் பொறுத்த வரையில், அவன் வேலையைப் பொறுத்த வரையில் யாருமே குறை கூறியது கிடையாது.

தொட்டதற்கெல்லாம் சீறி விழுகின்ற அதிகாரி கூட அவன் வேலையைப் பார்த்து, அவனிடம் கொஞ்சம் அன்பாகவே நடந்து கொண்டார். ஆனால், அவனுக்கென்னமோ அவரைக் காண்பதென்றால் சிம்ம சொப்பனம்தான்.

அலுவலகத்தினுள் சென்று இருக்கையில் அமர்ந்தபின் அவனால் வேலைகளைக் கவனிக்க முடியவில்லை. முகம் வாட்டமாகக் காட்சியளித்தது. அடிக்கடி நெற்றிப் பொட்டுக்களைப் பிடித்து விட்டுக் கொண்டான். வழக்கத்திற்கு மாறாக மகுடபதி இருப்பதை, உடன் வேலை செய்பவர்கள் கவனிக்காமல் இல்லை.

மகுடபதி இருந்த இடத்திற்கு, வரதன் வந்து "என்ன மகுடபதி? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்" என்று அன்பாகக் கேட்டான்.

"காலையில் இருந்து பொறுக்க முடியாதபடி தலை வலித்துக் கொண்டு இருந்தது!"

"விடுமுறையாவது எடுத்துக் கொண்டு வீட்டிலேயே இருந்திருக்கக் கூடாது?"

"அப்படித்தான் எண்ணினேன். உன்னிடம் விடுமுறைக் கடிதத்தைக் கொடுத்தனுப்பலாம் என்று இருந்தேன். நீயும், இன்று வீட்டுக்கு வராமல் நேராக வந்து விட்டாய்!"

"அதனால் என்ன? இப்போதுதான் விடுமுறை கேட்டுக் கொண்டு வீட்டிற்குப் போய் விடுவதுதானே!"

மகுடபதிக்கும், வரதனுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் முற்றுப் பெறுவதற்குள்ளாகவே தலைமைக் குமாஸ்தா கனைத்தார். அதற்கு மேலும் அங்கு நிற்கக் கூடாதென்பதைக் குறிப்பாலுணர்ந்து கொண்ட வரதன் அங்கிருந்து நழுவினான்.

சிறிது நேரம் சென்றது. மகுடபதியால் அன்று வேலையே செய்ய முடியாது என்ற முடிவுக்கு வர வேண்டியதாயிற்று. விடுமுறை கேட்கலாம் என்று எழுந்து அதிகாரியின் அறையை நோக்கி நடந்தான்.

அதிகாரியின் அறையினுள் நுழைவதற்குள் உள்ளிருந்து வந்த சத்தம் அவனை வெளியே நிறுத்தி வைத்து விட்டது. தன்னைப் போல், ஒரு எழுத்தரை அதிகாரி காரசாரமாகத் திட்டிக் கொண்டிருந்தார்; இந்த நிலையில் அவரிடம் சென்று ஓய்வு கேட்டால் நிச்சயம் கிடைக்காது என்றுணர்ந்து கொண்டு, வந்த வழியே திரும்பி, தன் இருக்கையில் போய் தொப்பென்று சாய்ந்தான்.

சோதனையைப் போல், அன்று அவசரமாகக் கவனிக்க வேண்டுமென்ற குறிப்போடு, அதிகமான வேலைகளை அனுப்பி வைத்திருந்தார் தலைமைக் குமாஸ்தா. மகுடபதிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. மாலை யென்று மகிழ்வோடு எடுக்கச் சென்றவன் பாம்பைப் பற்றி விட்டவனை போல் விழித்தான்.

அவன் மனம் எழுத்தர் வேலையைச் சபித்தது. "மனை கூட லாம், மனம் எடுக்கலாம் எழுத்தன் வேலைக்கு மட்டும் மனிதன் வரவே கூடாது. அப்படி வருகிறான் என்றால், அவனுக்கு மனம் என்ற ஒன்று இருக்கக் கூடாது. இதயம் கூடாது. அவ்வளவு ஏன்? அவன் உடல் இரும்பால் ஆக்கப் பட்டதாக இருக்க வேண்டும். இரத்தமும் சதையும், நரம்பும் எலும்பும் கொண்டதாக இருக்கவே கூடாது. இரும்பு போல் உடல் உள்ளவன் கூட, தொடர்ந்தாற் போல் ஒரு பத்தாண்டு எழுத்தனாகப் பணியாற்றினால் துரும்பாகி விடுவான். இன்னும் என்னென்னமோ எண்ணி மகுடபதியின் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது.

எவ்வளவுதான் தலைவலியும் வேதனையும் தன்னைத் தாக்கித் தகர்த்துக் கொண்டிருந்தாலும், அலுவலகத்தில் வேலையை அரை குறையாகத்தான் பார்க்க முடியும் என்று வாய்விட்டுக் கூற முடியாதே! சிறிது நேரம் எண்ணிப் பார்த்தபின், வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல், முடிந்தவரை வேலையைக் கவனிக்கலாம் என்ற முயற்சியோடு வேலையை பொறுமையாகச் செய்யத் தொடங்கினான். எவ்வளவுதான் முயன்று வேலை செய்தாலும் விரைவில் முடிக்கமுடியாது. அயராமல் பார்த்தாலும்,

மாலைவரையில் அந்த வேலை குறையாமல் இருக்கும் என்று கண்டபின், சற்றுமுன் சமாதான அறிவுரையைக் கேட்டு அடங்கிய ஆத்திரம் மீண்டும் வெளியில் மெல்லத் தலைகாட்டத் தொடங்கியது. ஒரு கடிதத்திற்கு பதில் எழுதி முடித்துவிட்டு சலிப்புடன் தலை நிமிர்ந்தான்.

மகுடபதிக்கு எதிர்ப்பக்கத்தில் டைப்பிஸ்ட் செந்தாமரை தன் வேலையை மும்முரமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். மகுடபதிக்கு மனத்தில் மூண்டெழுந்து குமுறிக் கொண்டிருந்த ஆத்திரத்தை யெல்லாம் வெளியில் கக்கவேண்டும் என்பது போன்றதொரு உணர்வு தோன்றியது. யாரிடம் தன் ஆத்திரத்தைக் காட்டுவது? அங்குள்ள ஒவ்வொருவரும் தன்னைப் போல் தான் வேதனையோடு வேலைசெய்து கொண்டிருப்பார்கள் என்பதை அவன் அறியாதவனல்லவே!

பதில் எழுதிய கடிதத்தைக் கையில் ஏந்தியபடி, எதிர் புறத்திலுள்ள டைப்பிஸ்ட் செந்தாமரையைப் பார்த்து, "இந்தாருங்கள்! இதற்கு அவசரமாக நாலு பிரதிகள் எடுங்கள்!" என்றான். அவள் தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையை நிறுத்தாமலேயே, "அதுவும் அவசரவேலைதானே! நான் பார்த்துக் கொண்டிருப்பதும் அவசர வேலைதான்! அதைக்கொண்டு வந்து இங்கே வைத்து விட்டுப் போங்கள்!" என்று நிமிர்ந்து கூடப்பார்க்காமல் கூறினாள்.

செந்தாமரை கூறிய பதிலும் அவள் எழுந்து வாராமல் இருந்ததும் மகுடபதிக்கு, அவள் தன்னை அவமானப்படுத்துகிறாள் என்பதுபோன்ற உணர்வைத் தட்டி எழுப்பியது. ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த ஆத்திர உணர்வும் சேர்ந்து அவனை வெறியனைப்போல் ஆக்கிவிட்டது. இல்லையென்றால் அதுபோலக் கத்துவானா!

"இப்போது வருகிறாயா? இல்லையா?" மகுடபதியின் கோபம் வார்த்தைகளாக வெளிவந்தது.

அவன் குரலொலி கேட்டு செந்தாமரை நடுநடுங்கிவிட்டாள். டைப்மிஷின் மீது விளையாடிக் கொண்டிருந்த அவளது சின்னஞ்சிறிய விரல்கள், ஆடாமல் அசையாமல் நின்று வேலை நிறுத்தம் செய்து விட்டன.

அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அனைவரும், மகுடபதி பக்கம் பார்வையைத் திருப்பினர். தலைமைக் குமாஸ்தா கூட ஓரக் கண்ணால் மகுடபதியைத் திரும்பிப் பார்த்தார்.

உரிமையுள்ள மனைவியைக் கூட ஒருவன் இப்படி அதட்டிக் கூப்பிடமுடியாது. இன்று ஏதாவது புதுமை நிகழப் போகிறது.

செந்தாமரை அதிகாரியிடம் சென்று, தன்னை அவமானப் படுத்தி விட்டதாகப் புகார் செய்து முறையிடுவாள் என்றுதான் எல்லோரும் எதிர் பார்த்தனர்.

ஆனால் நடந்தது அவர்கள் அனைவரையுமே வியப்பில் ஆழ்த்தி விட்டது.

செந்தாமரைத் தன் இடத்தை விட்டு எழுந்து சென்று மகுடபதியின் மேசையருகில் நின்று. அங்கு அவனும் எழுதி வைக்கப் பட்டிருந்த காகிதத்தை எடுத்துக் கொண்டு, பதுமைபோல் திரும்பிவந்து தன்னிடத்தில் அமர்ந்து கொண்டு விட்டாள்

அதிகாரி கூட இவ்வளவு சத்தமாகப் பேசியதை அந்த அலுவலகத்திலுள்ளவர்கள் இதுவரை கண்டதில்லை. அவன் அப்படிப் பேசியும் ஒன்றும் புதுமை நிகழாததுபோல எப்போதும் போலவே அலுவலகம் நடந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. டைப் மிஷின் சத்தத்தைத் தவிர அலுவலகத்தில் வேறு எந்தவிதமான ஓசையும் கேட்கவில்லை. தலை குனிந்தவண்ணம் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான் மகுடபதி. மகுடபதி இருப்பிடத்தை நோக்கி வரதன் மெதுவாக எழுந்து வந்தான். அன்பாக அவன் முதுகில் கைவைத்து, "என்ன மகுடபதி? ஏன் இப்படி? இது அலுவலகம் என்பதை மறந்து விட்டாயா?", என்று கேட்டான். திடுக்கிட்டு மகுடபதியின் முகத்தைப் பார்த்தான்.

மகுடபதியின் உடல் நெருப்புபோல் கொதித்துக் கொண்டிருந்தது. அவன் முகம் வாடியிருந்தது.

சிறிது நேரத்தில் அதிகாரி அறையிலிருந்து வெளியில் வந்து, வேலை செய்பவர்களைக் கவனித்துக் கொண்டே நடந்தார், அதிகாரி தன்னருகில் நெருங்கி வரும்போது, மகுடபதி தட்டுத் தடுமாறி எழுந்து நின்றான். அவன் கால்கள் வெடவெடவென்று ஆடியது.

"என்ன" என்று கேட்டு விட்டு நின்றார் அதிகாரி.

"உடல் நிலை சரியில்லை. தலைவலியும் காய்ச்சலும் தாங்க முடியாத நிலையில் இருக்கிறது இன்றும் நாளையும் ஓய்வு தேவை!" என்று பயந்துடன் மெதுவாகக் கூறினான்.

அதிகாரி தலைமைக் குமஸ்தா பக்கம் திரும்பிப் பார்த்தார். அதிகாரியின் பார்வைக் குறிப்பையுணர்ந்து கொண்ட தலைமைக் குமாஸ்தா, "கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது" என்றார்.

மகுடபதி பக்கம் திரும்பி, "அதை முடித்துவிட்டுப் போ! என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

மருடப்திக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இயற்கை இப்படிச் செய்து விட்டதே என்று வருந்தினான். "தனக்கு நோய் வந்ததற்கு ஏற்றாற்போல் சூழ்நிலையுமா இப்படிச் சதி செய்ய வேண்டும்!"

மனிதனுடைய வாழ்க்கை சூறாவளியில் அகப்பட்ட ஒரு சிறு துரும்பு! அது எந்த வினாடியில் எந்தப் பக்கம் போகும் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. உலகம் என்ற கடலில் சிக்கிய வாழ்க்கைத் துரும்பு. சாதாரண அலைகளுக்கே தப்ப முடியாமல் இருக்கின்றபோது சூறாவளியின் மோதல் அந்தத் துரும்பைத் தொட்டு பார்க்காமலா விட்டுவிடும்?

இயற்கையைக் கண்டு மனிதன் அஞ்சி வாழவேண்டியிருக்கிறது. இயற்கையை எதிர்த்துப் போராடியே நலிவு அடைய வேண்டியிருக்கிறது. போராட்டத்தில் தான் வாழ்க்கையின் பூரணத்துவம் அடங்கியிருக்கும் போலிருக்கிறது.

உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் வாழத் தூண்டுவதும், வாழச் செய்வதும் இயற்கை! வாழ்வோரை வாழ வேண்டும் என்று விரும்புகின்றவரை துன்பத்துக்குட்படுத்தி வேடிக்கை பார்ப்பதும் இயற்கை! அவர்கள் வாழ்க்கையில் புகுந்து விளையாட்டுக் காட்டுவதும் இயற்கை! அதன் ஆற்றலின் அருகில் நிற்க மனிதனால் முடியுமா?

இயற்கை? அது உலகத்தைப் படைத்து, அதில் உன்னதமான காட்சிகளையும் உண்டாக்கி, கதிரவனின் அதிக்க வெறியைக் காட்டிடச் செய்து, அந்த வெப்பத்தை நீக்கிடத் தென்றலைத் தவழ விட்டு பவனி வரச் செய்து, தேன் நிலவைச் சிரிக்க வைத்து, வெய்யோனின் கோபத்தைத் தணித்து குளிர்ச்சியடையச் செய்து, வானப்படுதாவில் தன் ஓவியத் திறமையின் கைவண்ணம் காட்டி, நீலவானும், நிலவுப் பெண்ணும் சிரித்துப்பேசி சிங்காரப் பண்பாடும், காதற் காவியத்தை உலகத்தின் முன் விரித்து வைத்து இரவின் அமைதியில் இன்பக் கதைகள் கூறுவதோடு நின்றிருக்கக் கூடாதா?

நல்ல காரியத்துடன் நின்று விட்டால் நாடு தன்னைப் புகழாது என்று எண்ணி விட்டது போலிருக்கிறது. தீமை புரியவேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டுவிட்டது போலிருக்கிறது.

தன்னால் அழகு செய்யப்பட்ட வானத்தின் அழகைக் கெடுக்க மேகத்தை அனுப்பி மின்னலை நெளிய விட்டு இடி முழக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்து, கடல் நீரைக் குடித்து விட்டுக் ககனத்தில் பவனி வந்து கொண்டிருந்த கரிய மேகத்தின் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கருமேகம் சிந்துகின்ற கண்ணீரை, மழைத்துளியாக மண் மாதாவின் மடிமீது தெளித்து நிலவை, தன் ஒளி முகத்தை வெளிக் காட்டாமல் தடையும் சதியும் செய்கிறது.

இத்துடன் அதன் திருவிளையாடல் முடிந்துவிடுகிறதா என்றால் அதுதான் இல்லை.

தென்றலைப் புயலாக்கி, மின்னலைப் பேரிடியாக மாற்றி, மழைத் துளியை மண்மாரி போல் கொட்டச் செய்து, நாச வேலைகளையும் செய்த பின்னர் தான் அது அமைதியடைகிறது.

இவ்வளவுக்கும் காரணமாக இருக்கும் அந்த இயற்கைக்கு மட்டும் உருவம் இருந்தால் அதை சித்திரவதை செய்து பழி தீர்த்துக் கொள்ளலாம் போல் மகுடபதிக்குத் தோன்றிற்று.

உருவமற்ற ஒன்றுக்கு இவ்வளவு ஆற்றல் எப்படி ஏற்பட்டது? என்ற கேள்வி தோன்றி மகுடபதியைச் சிந்திக்க வைத்தது. தனக்கு முன்னால் வேலை குவிந்து கிடப்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

மனதில் நிம்மதி இல்லாத போது எந்த வேலையையும் பார்க்க நினைத்தால் முடியவே முடியாது. இந்த நியதிக்கு மகுடபதி மட்டும் எப்படி விதி விலக்காக இருக்க முடியும்?

வேதனையோடு அன்று முழுவதும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வேலைகளைக் கவனித்தான். அலுவலகம் மூட அரை மணி நேரம் இருக்கும் போதே அலுவலகத்தை விட்டு வெளியேறி விட்டான்

வெளியில் வந்த மகுடபதியால் அடியெடுத்து வைத்து நடக்கவே முடியவில்லை. கால்கள் தடுமாறின. குடிகாரன் கண்கள் போல அவன் கண்கள் சிவந்திருந்தன. கண் எரிச்சல் வேறு தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தது.

வாடகை வண்டியொன்றை அமர்த்திக் கொண்டு, அதில் ஏறி வீட்டுக்குச் சென்றான்.

மகுடபதி வண்டியை விட்டிறங்கி வீட்டுக்குள் சென்றதும், அவனைக் கண்ட அவன் தாய் பதறிப் போய் விட்டாள். பதட்டம் அந்தத் தாயுள்ளத்தைப் பற்றிக்கொண்டு விட்டது. அவசர அவசரமாக மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்தக் கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டு, அதன் மீது விரிப்பு விரித்து தலையணை வைத்துத் தன் மகனை அதில் படுக்க வைத்தாள்.

அன்னையின் அன்பு உபசரிப்பைக் கண்டதும் மகுடபதிக்குப் பாதி நோய் தீர்ந்து விட்டது போல் இருந்தது.

இந்த உலகில், ஈன்றெடுத்த அன்னையின் அன்புக்கு நிகர் வேறு எங்கு காணமுடியும்? தாயன்பு வேறு எவரிடம் நிலைத்து நிற்க முடியும்? மற்றவரிடம் இருப்பதாகக் கூறினால், அது எப்படிக்

குன்றாமல் குறையாமல் அழியாத் தன்மை கொண்டதாக இருக்க முடியும்?

அன்னைக்கு நிகரான அன்புடையவர்கள் இந்த உலகில் வேறு ஒருவருமே இருக்க முடியாதென்று உறுதியாகக் கூறலாம். பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி, தோள்மீதும், மார்மீதும் சுமந்து வையகத்தின் இன்பங்களைக் காணும் பெரும் பேற்றை உருவாக்கிய அன்னையின் தியாகச் சுடருக்கு மீறிய அன்பு ஒன்று இருக்குமானால், அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியாகத்தான் இருக்க முடியும்.

மனிதன் கருவாக உருக் கொள்ளும் போதே வயிற்றில் சுமக்கிறாள். அவன் பிறந்து வளர்ந்து இந்த வையகத்தை உணர்ந்து வாழத் தொடங்கும் வரை தோள்மீதும், மார்மீதும், தொடைமீதும், கைகள்மீதும் ஏந்தி சுமந்து கொண்டே இருக்கிறாள். மற்றவர்கள் அவனை மனிதன் என்று கருதி இந்த உலகில் வாழ அனுமதியளிக்கின்ற போது, அவனுக்கு ஏற்படுகின்ற நன்மை தீமைகளை இதயத்தில் சுமக்கிறாள்.

அன்னை என்ற மூன்றெழுத்துக்களில் முடங்கிக் கொண்டிருக்கின்ற தியாகத் தன்மைதான் என்னே! அதற்கு இணையேது இந்த உலகத்தில்?'' கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த மகுடபதியின் மனம் இதுபோல் எண்ணிக் கொண்டிருந்தது. அந்த எண்ணத்தினால் தோன்றிய இன்ப உணர்வுகள் அவனை அப்படியே உறங்க வைத்து விட்டது.

எவ்வளவு நேரம் தன் நிலை மறந்து தூங்கிக் கொண்டிருந்தானோ? அவன் கண் விழித்துப் பார்த்த போது அவனுடைய அன்னை, கையில் கசாயப் பாத்திரத்தை ஏந்திய வண்ணம் நின்று கொண்டிருந்தாள். மெல்ல எழுந்து தாய் கொடுத்த அந்த வீட்டு மருந்தை வாங்கி மடக் மடக் என்று இரண்டு வாய் குடித்தான். நன்றாகத் தூங்கி விழித்ததினாலேயே பாதிக் குணமாகி விட்டது போன்ற தெம்பு அவனுக்குத் தோன்றியது.

தலையணையை முதுகுக்கு அணை கொடுத்துக் கொண்டு சாய்ந்த படியே உட்கார்ந்து கொண்டான்.

அவன் தாய் உடல் நலமில்லாத மனிதன் இரவு உணவுக்காக அடுக்களையில் மிளகு ரசமும், பருப்பை வறுத்து அரைத்துத் துவையலும் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

அன்று இரவை மகுடபதி கொஞ்சம் சிரமத்துடன்தான் கழித்தான்.

பொழுது புலர்ந்தது. உலகத்தைச் சூழ்ந்து கொண்டிருந்த இருளும் அகன்றது. மகுடபதியின் மன இருளும் கொஞ்சம் குறைந்து இருப்பது போல் தோன்றியது.

மெல்ல எழுந்து நடக்கலாம் என்று முனைந்தான் கால்கள் வெட வெட என்று நடுங்கின. நிற்க முடியாமல் திண்டாடும் நிலையில் இருப்பதை உணர்ந்து மீண்டும் கட்டிலின் மேலேயே அமர்ந்து கொண்டு விட்டான்.

அன்று முழுவதும் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டுமே என்று எண்ணியதும் அவன் மனம் துணுக்குற்றது.

உழைப்புக்கு ஓய்வு என்னவோ அவசியம்தான். ஆனால், அந்த ஓய்வு மன நிம்மதியில்லாமல் இருப்பவர்களுக்கும், வறுமையில் வாடிக் கொண்டிருப்பவர்களுக்கும், வசதி குறைந்த நிலையில் வாழ்க்கை நடத்துகின்றவர்களுக்கும் ஒரு வியாதியாகத்தான் இருக்கிறது.

அந்த ஓய்வின் போதுதான் "தேவையற்ற' என்று ஒதுக்கி வைக்கப்பட்ட குப்பைகளைக் கிளறுவது போன்ற சிந்தனை தோன்றுகிறது.

அன்று மாலை வரதன் மருடபதியைக் காண வந்தான். வெகு நேரம் வரையில் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். உடல் நிலையைப் பற்றி ஆரம்பமான பேச்சு எந்தெந்த வழியாகவெல்லாம் சுற்றிக் கொண்டு, திருமணம் செய்து கொள்வது என்பதில் வந்து முடிந்தது.

அறிவின் வழியில் மனிதர்கள் நடக்க வேண்டும் என்று ஆசையுள்ள அந்த நண்பர்களின் உரையாடலை நாமும் சிறிது கேட்போம்.

"நீ நேற்று அலுவலகத்தில் நடந்து கொண்ட முறை மிகமிக தவறானது மருடபதி"

"எதனால் அப்படிக் கூறுகிறாய்?"

"அலுவலகத்தில் இருக்கிறோம் என்பதையே மறந்து விட்டல்லவா பேசி விட்டாய். நான் பயந்தே போய் விட்டேன்."

"பயப்படும்படியாக அப்படி என்ன நடந்து விட்டது?"

"பொறுமைசாலியின் கோபத்தையும், கோபக்காரனின் பொறுமையையும் கண்டால் பயம் தோன்றாமல் எப்படி இருக்க முடியும்?"

"பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு, அதைக் கடந்து விட்டால் அவன் கோபக்காரனாக மாறுவதில் தவறென்ன?"

"அதனால் ஏற்படுகிற பலாபலன்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாயா?"

"நேர்மையான வழியிலிருந்து தவருமல் இருக்கிறேம் என்ற நம்பிக்கை நமக்கிருந்தால், பலாபலன்களைப் பற்றி நாம் ஏன் பயப்பட வேண்டும்!"

"நேர்மைக்கு இந்தநாடு மதிப்பளிக்கும் என்று எண்ணு கிருயா?"

நாட்டைப் பற்றியோ அதிலிருந்துகொண்டு நாளுக்கொரு யுத்தியும் வேளைக்கொரு எண்ணமும் கொண்டுள்ள நயவஞ்சகர்களைப் பற்றியோ நமக்கென்ன கவலை? நமக்கு மனம் இருக்கிறது. நல்லது கெட்டது பற்றி எண்ணிப் பார்த்து நடத்துகொள்ளும் அறிவு இருக்கிறது அந்த அறிவின் வழியில் செல்வோம். இந்த உலகத்தைப் பற்றியோ, அதில், உழைக்காமல் பிறர் உழைப்பால் ஊதி உப்பிக் கொண்டிருக்கின்ற உலுத்தர்களைப் பற்றியோ நமக்கு கவலையில்லை.

"மனிதன் எப்போது தன் நிலை மறக்கிருன்!"

"உருண்டோடும் பணம் தன் கையில்வந்து சேர்ந்தவுடன், மனிதன் தன்னை மறக்கிருன், தான் இருக்கும் இடத்தை மறக்கிருன். தான் முன்பு இருந்த நிலையை மறக்கிருன். தனக்கு நிகர் இந்தத் தரணியில் வேறு எவரும் இல்லை என்ற தலைக்கனம் அவனிடம் குடிபுகுந்து கொண்டு விடுகிறது. ஆனல், அவன் ஒன்றை மட்டும் எண்ணிப் பார்க்க மறந்து விடுகிருன்."

"என்ன அது?"

"தன்னிடம் வந்து சேர்ந்துள்ள பணம், பொருள் கொடுப்போர்களுக்கெல்லாம், போக பூமியைக் காட்டும் விலைமகளுக்கு ஒப்பானது, என்பதை மறந்து விடுகிருன். விலைமகள் நேற்று ஒருவனுடன் கொஞ்சிக் குலாவி, 'உன்னைத் தவிர வேறு ஒருவரையுமே உள்ளத்தாலும் நினைக்கமாட்டேன்' என்று உறுதிகூறி, இன்று இன்னொருவனுடன் கூடி, அவனுக்கு இன்ப போதையை ஊட்டி, நாளை வேறொருவன் வரும் வழியில் விழி வைத்துக் காத்து நின்று, அவனையும் ஓட்டாண்டியாக்கவே பார்ப்பாள். பணமும் அது போன்றதுதான்!"

"மனிதன் எப்போது வெறியனுக மாறுகிருன்!"

"ஏழையாக இருப்பவன் கையில் பணம்சேர ஆரம்பித்ததும், அவன் வெறியனுக மாறி விடுகின்றுன். எண்ணிப் பார்க்கும் திறனில்லாதவன் நல்லவைகளைக் கேட்கும்போது வெறியனுக மாறுகிருன். கண்ணியத்தின் இருப்பிடமாக வாழ்பவனைக் காதல் தோல்வி வெறியனுக்குகிறது."

"இந்நிலை எங்கே உற்பத்தியாகிறது!"

"மனித மூளையிலேதான். உற்பத்தியின் அளவு கொஞ்சம் அதிகரித்தவுடன் அது, இருதயத்தின் உணர்ச்சிகளை ஏளனம் செய்யக் கிளம்பி விடுகிறது."

"மனிதன் எப்போது தன்னைப் பணக்காரன் என்று எண்ணிக் கொள்கிறான்?"

"மனதில் வறுமையில்லாதபோது நல்லவர்கள் பணக்காரர்களாக மாறுகிறார்கள். தானென்ற ஆணவமும் தலைக்கனமும் தன் இதயத்தில் இடங்கொள்கின்றபோது, நயவஞ்சகர்கள் பணக்காரர்களாக மாறுகிறார்கள். தான் இருந்த நிலையை எண்ணிப் பார்க்கத் துணியாத மூடனும் தான் பணக்காரனாக மாறி விட்டதாகத்தான் எண்ணுகிறான்."

"சொல்லாமற் கொல்லும் வியாதிகள் யாவை?"

"அகம்பாவம்! ஆணவம்! அதிகவெறி!"

"பணக்காரர்கள் மறந்து விடுவது எதை?"

"பண்பை! தனக்குமுன் வாழ்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை! ஆணவக்காரர்களுக்கு நேர்ந்த அழிவை!"

"நல்லவர்கள் மனம் எப்போது புண்படுகிறது?"

"அற்பர்களின் ஆணவப் பேச்சைக் கேட்கின்றபோது!"

"ஒருவன் இன்பமாக வாழ்வதற்கு இந்த உலகில் தேவையானது என்ன?"

"அறிவு குறைந்தவர்கள் பணம் என்று முடிவு கட்டுகிறார்கள். அவசரக்காரர்களோ பெண் இன்பம் என்று எண்ணுகிறார்கள். அறிஞர்கள், தானும் வாழவேண்டும்—பிறரும் வாழவேண்டும் என்ற நல்லெண்ணம்தான் என்னுகிறார்கள்."

"மனிதன் வாழ்நாள் முழுவதும் நல்ல விதமாக வாழவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்?"

"அன்பு, அறம், பண்பு, பகுத்தறிவு ஆகியவைகளைக் கொல்லும் கொலைக்காரனாக மாறாமல் இருக்க பழகிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அவன் வாழ்க்கை நல்லவிதமாக அமையும்."

"நன்றி கெட்டவன் இந்த உலகில் முன்னேறுவதற்கு வழியுண்டா?"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்பது வள்ளுவர்வாக்கு!"

"மனிதன் இடைவிடாமல் இன்பக்கனவு காண்கின்றானே, அது எதனால்? கனவு எப்படித் தோன்றுகிறது?"

"கனவு என்பது நினைவுகளின் தொகுப்பு. ஒவ்வொரு மனிதனும் தான் இன்பவாழ்வு வாழ வேண்டுமென்றுதான் நினைக்கிறான். அந்த நினைவுதான் கனவாக உருப்பெற்று விடுகிறது."

"காதலைப் பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?"

"இலட்சிய வாதிகளாக இருப்பவர்களுக்கு காதல் ஒரு தத்துவம்! அனுபவசாலிகளுக்கு அது ஒரு கலை! அறிவாளிகளுக்கு அது ஒரு விளையாட்டு! வறுமையில் வாடுபவர்களுக்கு அது உயிர் பறிக்கும் எமன்!"

"வாழ்நாள் முழுவதும் மனிதன் தனியாகவே வாழ்ந்து விட முடியுமா?"

"முடியும். எதையும் தாங்கும் இதயம் இருந்தால்!"

அவர்கள் பேச்சு முடியாமல் இருக்கும்போதே மகுடபதியின் தாயார் இரண்டு டம்ளர்களில் காபி எடுத்துக்கொண்டு அங்கு வந்தாள்.

இருவரும் காபியை வாங்கிப் பருகினர். அவர்களுக்கு எதிரில் தரையில் மகுடபதியின் தாயார் உட்கார்ந்து கொண்டாள்.

வரதன் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான். "மகுடபதி! நீ ஏன் திருமணம் வேண்டாம், வேண்டாம் என்று கூறி மறுத்துக் கொண்டே இருக்கிறாய்?"

மகுடபதி பதில் கூறுவதற்குள், அவன் தாயார் இடைமறித்துப் பேசினாள்.

"ஊர் உலகத்தில் எல்லாம், பிள்ளைகளானவர்கள், காலா காலத்தில் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாக இருந்து, அவர்கள் தாய் தந்தையரை நிம்மதியாக இருக்கச் செய்கிறார்கள்!..." அதற்குமேல் மகுடபதி தன் தாயைப் பேச விடவில்லை.

"அம்மா! நீ கொஞ்சம் சும்மா இரு! நான் சம்பாதிக்கிற சம்பாதனைக்குக் கல்யாணம் இல்லாததுதான் ஒரு குறையா?" திருமணம் தேவையில்லை என்று தான் கொண்டிருந்த எண்ணத்திற்கு உருவம் கொடுத்து வார்த்தைகளாக்கினான்.

மறுபடியும் அவன் தாய் வரதனைப் பார்த்தபடி பேசினாள். "இப்படித்தானப்பா நான் எதைப் பேச முனைந்தாலும் பேச விடாமல் தடுத்து விடுகிறான். ஏழைகள் என்றால் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதென்று இருக்கிறதா என்ன? பணக்

காரர்கள் திருமணம் செய்து கொண்டு படாடோபமாக வாழ்கி றார்கள். நாம் நமது சக்திக்கு ஏற்றபடி வாழ்வோம். விரலுக் குத் தக்க வீக்கம். நம்மிலும் மோசமானவர்கள் வாழவில்லையா? இவனைப் போலவே ஒவ்வொருவரும் நினைக்க ஆரம்பித்திருந்தால் இந்த உலகில் பணக்காரர்களைத் தவிர வேறு ஒருவருமே இல்லா மல் அழிந்து போக வேண்டியதுதான்!'' என்றார்கள்.

வரதன் அமைதியாக அந்த அம்மாளுக்குப் பதில் கூறுவது போல் கூறினான், ''இவன் பிடிவாதமெல்லாம் என்றும் நிலைத்து நிற்கக் கூடியதா அம்மா? இவனை விடப் பிடிவாதமாக இருந்தவர் களெல்லாம் எப்படி எப்படியோ மாறி விட்டார்கள்!''

வரதன் ஆறுதலுக்காகத்தான் கூறினான் என்றாலும், அது மருடபதிக்கு என்னவோ போல் இருந்தது.

''ஆமாம்பா, எதெது எப்படியெப்படி நடக்க வேண்டுமோ. அப்படி நடந்தால்தானே நன்றாக இருக்கும். மூன்றாவது வீடான மனோரஞ்சிதத்தின் வீடு இப்போது எவ்வளவு கலகலப்பாக இருக் கிறது பார்த்தாயா? அவளும் என்னைப் போல் ஒரு மகனைத்தான் பெற்றாள். அந்தப் பிள்ளையும் காலாகாலத்தில் ஒரு திருமணத் தைச் செய்து கொண்டான், வீட்டுக்கு விளக்கு ஏற்றி வைக்க வேண்டிய பொறுப்பை மருமகளிடம் ஒப்படைத்து விட்டு, மன நிம்மதியோடு மனோரஞ்சிதம் இருக்கிறாள்'' என்றார்கள்.

''மனோரஞ்சிதத்தின் மகனுக்குப் பெண்ணைக் கொடுத்து, பொன்னையுமல்லவா மூட்டையாகக் கட்டிக் கொடுத்திருக் கிறார்கள்!'' என்றான் ஆத்திரமாக மருடபதி.

''உனக்கு மட்டும் மாட்டேன் என்று சொல்லுகிறார்களா. நீ தான் திருமணமே தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருக் கிறாயே!'' என்றாள் அவன் தாய்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வரதன், "காலம் மனிதனுடைய கருத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல் இருப்பதில்லை, என்று நினைத்துக்கொண்டு மருடபதியைப் பார்த்து, ''உன் உடல்நிலை இருப்பதைப் பார்த் தால் நாளையும் அலுவலகம் செல்ல முடியாது போலிருக்கிறதே! வேண்டுமானால் இன்னும் இரண்டு நாட்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்!'' என்று கூறி, ஓய்வுக்கடிதம் எழுதி அதில் மருடபதியின் கையொப்பம் வாங்கிக் கொண்டு அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

சாலையில் நடந்து கொண்டிருக்கையில் மருடபதி பேசிய பேச்சுக்கள் அவன் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டே இருந்தன. அதிக நேரம் அவனை அந்த நினைப்புக்களிலேயே நிற்க

விடாமல், சாலையின் ஓரத்தில் கூடி நின்ற கூட்டம் அவன் கருத்தைக் கவர்ந்தது.

என்ன கூட்டம் என்று அறிந்து கொள்ள அவன் மனம் ஆவல் கொண்டது. அவன் அனுமதியின்றியே அவன் கால்கள் கூட்டம் இருந்த பக்கமாகச் சென்றது

கூட்டத்தின் அருகில் சென்று என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்த வரதன், "சாண் வயிற்றைக் வளர்த்துக் கொள்ள சக்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் செய்து கொண்டிருந்த வயிற்றை நிம்மதிப் படுத்துவதற்காக என்னென்ன கொடுமைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது!" என்றெண்ணி மனம் வருந்தினான்.

"நெருப்பின்றி, புகையின்றி எரிந்து கொண்டிருப்பது இந்த வயிறுதான்!" என்று ஒரு படத்தில் சொல்லப்பட்ட அந்தக் கருத்தை நினைத்த பொழுது, நகைச்சுவை மன்னனின் நினைவு அவன் சிந்தனையில் பளிச்சென்று தோன்றியது.

நகைச்சுவை மன்னன் கூறிய ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு மாணிக்கம். நச்சுமணங்கொண்ட இந்த சமூகத்தில் மண்டிக் கிடக்கும், அறியாமை என்ற நோயை அகற்ற சிரிப்பு என்ற தேனில் அறிவு என்ற மருந்தைக் குழைத்து ஒவ்வொரு மனிதனுடைய நாவிலும் படாதபாடு பட்டுத் தடவினார். அதைச் செய்து முடிக்க அவர் எவ்வளவு பாடு பட்டிருப்பாரோ?

எல்லோரையுமே சிரிக்க வைத்தார். நாட்டைச் சிரிக்க வைத்தார். அதில் வாழ்கின்ற நல்லவர்கள் உள்ளங்களையெல்லாம் சிரிக்கவைத்தார். நச்சு நினைப்புக் கொண்ட நய வஞ்சகர்களையும் சிரிக்கவைத்தார். எத்தனையோ ஆண்டுகளாய் முயன்றும், எந்த மருத்துவராலும் முடியாது என்று கைவிடப்பட்ட அறியாமை என்னும் நோயை அவரால் தயாரித்துத் தரப்பட்ட அறிவு என்ற மருந்தும், சிரிப்பு என்ற தேனும் சிறிது சிறிதாக அகற்றியது.

சமூகத்திலிருந்த நோயை அகற்றிய அந்தச் சிந்தனைச் சிற்பியை, சிரிப்புக் கலையை கண்டுபிடித்த செம்மலை காலம் நம்மிடமிருந்து பிரித்து விட்டது.

சாவு இந்த உலகிலுள்ள எல்லோரையுமே ஒருநாள் ஆரத் தழுவி, கோரமாக அவர்கள் உயிரைக் குடித்துத் தீராத தன் பசியைத் தீர்த்துக் கொள்கிறது என்றாலும், அவரது பிரிவை நம்மால் தாங்கவே முடியவில்லை.

இன்னும் கொஞ்சகாலம் அவர் நம்மோடு இருந்திருந்தால், உரிமையற்றுக் கிடக்கும் அருமைத் தமிழகத்திற்கு நல்ல உதவியாக இருந்திருக்கும்.

இல்லை நிகரென்று, அல்லும்பகலும் போன்று சலியாது உழைத்து கலைப்பணி புரிந்த கலைமன்னன் தனக்குச் சிலையொன்று வைத்துத் தொலைவிலுள்ள மக்களும் அதைக்கண்டு தொழுது வணங்கிடச் செய்ய வேண்டுமென்று வரதன் எண்ணினான்.

ஒரு சாண் வயிறே இல்லாட்டா, இந்த உலகத்திலேது கலாட்டா என்ற பண்ணொலி வரதனின் சிந்தனையைக் கலைத்தது. கூட்டத்தினுள் பார்வையைச் செலுத்தினான்.

கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டிருந்தார் ஒரு மனிதர். நடுத்த வயதினர்தான். அவர் அருகில் ஐந்துவயது கூட நிரம்பாத பாலகன் ஒருவனும் நின்று கொண்டிருந்தான்.

"தம்பி! ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டுவிட்டு அந்த மனிதர், தான் கற்ற வித்தையைக் காட்டத் தொடங்கினார்.

கூட்டத்தின் நடுவில் இரண்டு மண்பானைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்றில் நிறைய தண்ணீர் இருந்தது. மற்றொன்றில் பாதியளவு தண்ணீர் இருந்தது. அந்த பண்பானையிலிருந்து. தவளைகள் தாவித்தாவி வெளியே விழுந்து கொண்டிருந்தன. சிறுவன் அதைப்பிடித்துப் பிடித்து மீண்டும் தண்ணீர்ப் பானைக்குள் போட்டுக் கொண்டு இருந்தான்

இன்னொரு பக்கத்தில் ஒரு சிறிய பெட்டி வைக்கப் பட்டிருந்தது. பெட்டிக்குமுன் விரித்துப் போடப் பட்டிருந்த காகிதத்தில் உடைந்த கண்ணாடித் துண்டுகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

மீண்டும் ஒரு முறை, "ஆரம்பிக்கலாமா தம்பி?" என்று கேட்டு விட்டு, தவளைகள் இருந்த பானைக்குள் கையை விட்டு, அவர் தவளையொன்றை வெளியில் எடுத்துக் காட்டினார் அது உயிருடன் துள்ளிக் கொண்டிருந்தது கூடிநின்றவர்கள் அனைவரும் காணும்படியாக அதைக் காட்டிவிட்டு, தன் வாயைத் திறந்து, உள்ளே போட்டுக் கொண்டு, மற்றொரு பானையிலிருந்த தண்ணீரிலிருந்து இரண்டு குவளைகள் எடுத்துக் குடித்தார்.

தொடர்ந்து ஒன்று. இரண்டு மூன்று என்று எண்ணிக் கொண்டே அவர் தவளைகளை விழுங்கிக் கொண்டே இருந்தார். சிறுவன் தண்ணீரை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இருபத்துமூன்று தவளைகளை அவர் வயிறு எப்படித்தான் ஏற்றுக் கொண்டதோ! இரண்டு பானைகளில் இருந்த தண்ணீரும் அல்லவா அவர் வயிற்றில் இடம் பெற்றிருந்தது?

அதுடன் நிறுத்திக் கொண்டாரா? பெட்டிக்கு முன் குவித்து வைக்கப்பட்டிருந்த கண்ணாடித் துண்டுகளையும் எடுத்து எண்ணிக் கொண்டே விழுங்கினார். குழுமி நின்றிருந்தவர்கள் வியப்படைந்தனர். கூட்டத்திலிருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர், "இதெல்லாம் கண் கட்டி வித்தை" என்றார்.

பெரியவர் கூறியது அந்த மனிதரின் காதில் விழுந்திருக்க வேண்டும். கண்ணாடித் துண்டுகளை விழுங்குவதை நிறுத்திக் கொண்டு கூட்டத்தினரை நோக்கி "இது கண் கட்டி வித்தையல்ல, உடற்பயிற்சி! விழுங்கிய பொருள்கள் அனைத்தையும் வாந்தியெடுத்து ஒன்று கூட குறையாமல் எண்ணிக் காட்டுகிறேன். அந்த வகையில் நான் என் உடலை வளர்த்து வைத்திருக்கிறேன். எல்லாம் உடற்பயிற்சிதான்! கண்கட்டி வித்தையோ, ஏமாற்றுச் செயலோ இதில் என்னளவும் இல்லை!" என்றார்.

கூட்டத்தில் நின்ற ஒருவர் தன்னிடமுள்ள ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்து அதை விழுங்கும்படிக் கூறினார். அந்த மனிதர் அதை வாங்கி, கூட்டத்தினர் அனைவரும் பார்க்கும்படியாகக் காட்டிவிட்டு, நடுவில் போய் நின்று கொண்டு "இதை விழுங்கப் போகிறேன். விழுங்கி வெளியில் எடுத்த பின், இதை விழுங்கச் சொன்னவர் இந்த ஒரு ரூபாயை எனக்கே கொடுத்து விடுவார்" என்றார்.

நாணயத்தைக் கொடுத்தவர், "ஒரு ரூபாய் என்ன? ஐந்து ரூபாய் தருகிறேன்!", என்றார்.

"அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி! இன்று நான் நரி முகத்தில் தான் விழித்துவிட்டு வந்திருக்கிறேன் போலிருக்கிறது" என்றார்.

அப்போது கூட்டத்தினுள் ஒரு பக்கமாக உட்கார்ந்திருந்த பெண் ஒருத்தி "என் முகத்தில்தான் முழிச்சே!" என்றாள். கூட்டத்தினர் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

"எப்படி இருந்தால் என்ன? இன்று என்னைப் பொறுத்த வரையில் ஆண்டவன் கொஞ்சம் தயாள சிந்தையுடன் இருந்திருக்கிறான். அவருக்கு நன்றி செலுத்துகிறேன்!" என்று கூறிவிட்டு அந்த நாணயத்தை வாயில் போட்டுக் கொண்டார். சிறுவன் குவளையில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தான். தண்ணீரோடு சேர்த்து நாணயத்தையும் விழுங்கினார்.

சிறிது நேரம் சென்றது. வயிறு வளர்ப்பதற்காகத்தான் இப்படியெல்லாம் தான் செய்வதாகக் கூறினார். நீங்கள் மனமிரங்கிக் கொடுக்கும் காலணா, அரையணாக்களை நம்பித்தான் நாங்கள் மூன்று உயிர்கள் வாழவேண்டியிருக்கிறது. இந்த உடற்பயிற்சி வித்தையைத் தவிர, வேறு எந்த விதமான சொத்தும்

எனக்குக் கிடையாது. நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு காசும் எங்கள் உடலை, உயிரை வளர்க்கிறது" என்று கூறி கூட்டத்தில் அமர்ந்திருந்த பெண்ணையும் சிறுவனையும் தன்னையும் சுட்டிக் காட்டினார்.

சிறுவன் கையில் ஒரு தட்டைக் கொடுத்து, கூட்டத்தில் சுற்றி வரும்படியாகக் கூறினார். "காசு போடாதவர்கள், போட முடியாதவர்கள், போட மனமில்லாதவர்கள் போய் விடாதீர்கள். நின்று, என் வயிற்றினுள் உயிருடன் முண்டிக் கொண்டிருக்கும் தவளைகளையும் கண்ணாடித் துண்டுகளையும், ஒரு ரூபாய் நாணயத்தையும் நான் வெளியில் எடுப்பதைப் பார்த்து விட்டுப் போங்கள்" என்றார்.

சிறுவன் கூட்டத்தைச் சுற்றிக்கொண்டு வந்தான். அதை எண்ணிப் பார்த்து "இரண்டு ரூபாய் ஆறு அணாதான் சேர்ந்திருக்கிறது. தயவு செய்து இன்னும் பத்து அணாவையும் கொடுத்து விடுங்கள். இல்லையேல் தவளையும், கண்ணாடித் துண்டுகளும் என் வயிற்றை விட்டு வெளியே வராது!" என்று கேலியாகக் கூறினான். சிறுவன் மீண்டும் ஒருமுறை சுற்றிவந்தான். அவர்கள் எதிர்பார்த்த அந்தப் பத்து அணாக்களும் கிடைத்து விட்டன.

தான் விழுங்கிய பொருட்களை யெல்லாம் வெளியே எடுக்க ஆரம்பித்தார். தன் வயிற்றின் பக்கவாட்டில் ஓங்கி இரண்டு பக்கமும் குத்துவிட்டுக் கொண்டு கைகளை முறுக்கேற்றிக் கொண்டு வாந்தியெடுத்தார். முதலில் ரூபாய் நாணயமும், சில கண்ணாடித் துண்டுகளும் வெளியில் வந்து விழுந்தன. மறுமுறை கண்ணாடித்துண்டுகளும், தவளைகளுமாக வந்து விழுந்தன. அவர் விழுங்கிய பொருள்கள் அத்தனையும் ஒன்றுகூடக் குறையாமல் எல்லாம் வெளிவந்து விட்டன. தவளைகள் எல்லாம் உயிருடன் துள்ளித் தத்தித் தத்தி ஓடின. சிறுவன் அவைகளைப் பிடித்து மண் பானைக்குள் போட்டான்.

ஐந்து ரூபாய் தருவதாகக் கூறியவர், சொன்னபடியே ஐந்து ரூபாய்களைக் கொடுத்தார். கூட்டம் கலைந்தது. சிறிது நேரத்தில், உடற்பயிற்சியாளரும் அவரது குடும்பத்துடன் அங்கிருந்து நகர்ந்தார்கள். சிறிது தூரத்தில் இருந்த ஒரு மரத்தடியில், தன் குடும்பத்தையும் தன் வயிற்றுப் பிழைப்புக்கு மூலப் பொருளான தவளைகளையும், கண்ணாடித் துண்டுகள் நிறைந்த பெட்டியையும் வைத்துவிட்டு ஒரு குவளையை மட்டும் எடுத்துக் கொண்டு அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலைக்குள் சென்றார். சிறிது நேரத்தில் தோசை, காபியுடன் வந்தார்.

மரத்தடியில் அமர்ந்தே அந்த மூவரும் உண்டனர். பிச்சை யெடுத்து வயிறு வளர்ப்பவர்கள்தான் என்றாலும் அவர்கள் அன்பாகவே வாழ்ந்தார்கள்.

இந்தக் காட்சிகளையெல்லாம் கண்ட வரதனின் மனம் பணம் இல்லாதவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று பிடிவாதமாகப் பேசுகிற மருடபதியை எண்ணி நகைத்துக் கொண்டது.

அவர்களுக்குப் பணம் இல்லை. பங்களா இல்லை, பட்டுத் துணியோ, பகட்டான ஆடையணிகளோ இல்லை. அவர்களிடம் இருந்ததெல்லாம், இரண்டுமண்பானை, அதில் இருபத்தாறு நவளைகள், ஒரு சிறு தகரப்பெட்டி அது நிறையக் கண்ணாடித் துண்டுகள், வேறொரு ஓட்டைப் பெட்டி, அதில் கொஞ்சம் பழந்துணிகள், இரண்டு தகரக் குவளைகள், ஒரு அலுமினியக்குவளை. இரண்டு தட்டுகள் ஆகியவைகள்தான். மரத்தடிதான் அவர்கள் மாளிகை, சாலையோரம்தான் அவர்களுக்குப்பஞ்சணை. இருந்தும் அவர்கள் அன்பாக வாழ்கிறார்கள். குடும்பமாக வாழ்கிறார்கள் மருடபதியோ 'பணம் இல்லாவிட்டால் திருமணம் செய்யக் கூடாது' என்று கூறுகிறான்' என்றெண்ணியபடியே அங்கிருந்து நகர்ந்தான் வரதன்.

## 4

மறுநாள் மாலை ஆறு மணியளவில் வரதன் மருடபதியின் வீட்டுக்கு வந்தான்...அவனுடன் அலுவலகத்தில் டைப்பிஸ்டாக வேலை பார்க்கும் செந்தாமரையும் வந்தாள்.

வந்தவர்கள் இருவரையும் வரவேற்றான் மருடபதி. அவன் தாய் இருவருக்கும் தேநீர் தயார் செய்து கொண்டுவந்து கொடுத்தாள் செந்தாமரையின் வருகை மருடபதிக்கு வியப்பைக் கொடுத்தது. அலுவலகத்தில், தான் அவ்வளவு முரட்டுத்தனமாகப் பேசியும், தன் வீடுதேடி செந்தாமரை வந்திருப்பது கண்டு மருடபதியின் மனம், தான் நடந்துகொண்ட நிலைக்காக வருந்தியது.

"உன்னைப்பற்றி செந்தாமரை விசாரித்து விட்டு என் வார்த்தையில் நம்பிக்கையில்லாமல் நேரில் உன்னைப் பார்த்து, உடல் நிலை பற்றி விசாரித்துக் கொண்டு போவதற்காக வந்திருக்கிறாள்!" என்றான் வரதன்.

வரதனின் வார்த்தைகளைக் கேட்டு செந்தாமரையின் முகம் நாணத்தால் சிவந்தது.

நாணமென்ற போர்வையால் தன்னை மூடி மறைத்துக் கொண்டிருந்த செந்தாமரை, தன் பவளவாய் திறந்து பேச ஆரம்பித்தாள். அது தேனின் பெருக்கோ செந்தமிழின் நறுஞ் சுவையோ, காய்ச்சிய பாலின் இனிமையோ, அல்லது கன்னல் சாற்றின் தித்திப்புத்தானோ என்றெண்ணும் விதமாக இருந்தது.

"நம்பிக்கையில்லாமல் இல்லை. நேரில் பார்த்து விட்டுப் போகலாமே என்றுதான் வந்தேன்" என்றாள்.

பெண்களைக் கண்டாலே சீறி விழுகின்ற மகுடபதி என்ன பதில் கூறுவாரோ என்ற அச்சத்துடன் வரதன் காத்திருந்தான்.

"ஏன் வந்தீர்கள் என்று கேட்டு விடுவாரோ? அதனால், தன்னை அவமானமாக மகுடபதி நடத்தி விட்டால், மதியாதார் வாசல் மிதித்ததின் பலனை அனுபவித்து விட்டோம், என்று செந்தாமரையின் மனம் வருந்துமோ!" என்று வரதன் கவலைப்பட்டான்.

நல்ல வேளையாக அவன் எதிர் பார்த்ததுபோல் ஒன்றும் நடக்கவில்லை, மகுடபதி அமைதியாகவே பேசினான். "இப்போது உடம்பிற்கு பரவாயில்லை!" என்றான்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு செந்தாமரை விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டுக்குச் செல்லக் கிளம்பினாள். நானும் துணைக்கு வருவதாகக் கூறினான் வரதன். "வேண்டாம்! நீங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு வாருங்கள். நான் போகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் போனபின் சிறிது நேரம் அவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சால், பெண்களைப்பற்றி மகுடபதி கொண்டிருந்த கொள்கைகளில் ஒரு சிறு மாற்றம் ஏற்படுவதுபோல் தோன்றியது. வரதன் உள்ளூரச் சிரித்துக் கொண்டான்.

பெண்களைப்பற்றி மகுடபதி எண்ணிப் பார்க்கும்படியாக அவன் உள்ளமெனும் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கும் உணர்வினை இன்னும் கொஞ்சம் தட்டியெழுப்பி விடவேண்டுமென்று எண்ணி அதற்கேற்றபடி பேசினான்.

இரவு உணவு நேரம் வரையில் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். மகுடபதியின் தாய் அன்றிரவு வரதனையும் அங்கேயே சாப்பிடும்படியாகக் கூறினார்கள். மறுத்தது மட்டுமா? மகுடபதியைக் கேலி செய்வது போலவும் பேசினான்.

"நானென்ன இவனைப்போல் தனிக்கட்டையா அம்மா! இரவு சாப்பாட்டிற்கு நான் போகவில்லை என்றால், வீடு ஒரே போர்க் களமாகி விடும். 'சமைத்தது வீணாகி விட்டதே' என்று திட்டிவிடு

கேட்க ஆரம்பித்து விடுவாள் இந்திரா. 'இரவு சாப்பாட்டிற்கு வரமாட்டேன் என்று ஏன் முன் கூட்டியே சொல்லிவிட்டுப் போகக் கூடாது?' என்ற கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வது?

"நான் கொஞ்சம் கோபமாகப் பேசிவிட்டாலோ, கண்ணீர் மடையைக் காட்டி, என்னைத் தோற்கடித்து விடுவாள் இந்திரா அழ ஆரம்பித்துவிட்டால், தலைமாட்டில் முகாரிராக ஆலாபனை நடந்து கொண்டிருக்கும்போது, எப்படித் தூக்கம் வரும்?

'எதற்காக இவ்வளவு தொல்லைகளைத் தேடிக் கொள்ள வேண்டும்? நான் வீட்டிற்கே போய்ச் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்றான்.

வரதன் பேசிய குறும்புப் பேச்சைக் கேட்டு மகுடபதிக்கும் சிரிப்பு வந்தது. சிறிது கோபமும் வந்தது. மனைவி என்ற ஒரு பெண்ணுக்கு வரதன் இவ்வளவு பயப்படுகிறானே என்று அனுதாபமும் பட்டது அவன் நெஞ்சம். ஆனால், மகுடபதியின் தாயோ வரதன் போக்கைப் போற்றிப் பேசினாள்.

"ஒரு ஆண் உணவருந்தவில்லை என்பதற்காக அனுதாபப் படவோ, வருந்தவோ, அழவோ ஒரே ஒரு உள்ளத்தால்தான் முடியும். அதுதான் அன்புள்ளம், நல்ல பண்பு உள்ளம்! அந்த நல்ல உள்ளம் ஒரு சிலரிடம்தான் அமைகிறது அந்த நல்ல உள்ளம் கொண்ட பெண் அணங்கை நீ மனைவியாகப் பெற்றிருக்கிறாய். ஒரு வேளை, கணவன் உணவருந்த வில்லையானால் அந்த அன்பு நெஞ்சம் புண்பட்டு, 'ஏன் உணவருந்தவில்லை என்ற நினைப்பால் வேதனைப்படும். வேறு எவளாவது தன் கணவன் மனதை மயக்கி விட்டாளோ என்று நினைத்து வருந்தும். அந்த வருத்தம் பூசலைக் கிளப்பிப் போராட்டத்தை உண்டுபண்ணி அவளை அழ வைத்து விடும். இவ்வளவு நல்ல உள்ளம் கொண்ட இந்திராவை நீ மனைவியாகப் பெற்றிருக்கிறாய். அவள் மனம் புண்பட்டு விடக் கூடாதே என்று வேறு இடத்திலும் உணவருந்த மறுக்கிறாய். இதுதான் உண்மையான அன்பு. இதைப்போன்ற அன்புக்கு நிகர் இந்த உலகத்திலும் வேறு என்ன இருக்கமுடியும்?

"ஆணுக்காக வருந்துகின்ற உள்ளத்தை இயற்கை பெண்ணிடம் அமைத்து விட்டது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும், ஆணுக்காக வருந்துகின்ற ஒரு உள்ளம் துணையாகத் தேவைப்படுகிறது. இதுதான் கணவன்—மனைவி என்ற உறவின் அடிப்படைத்தத்துவம்.

"திருமணம் என்பது வெறும் விளையாட்டல்ல! ஆணும் பெண்ணும் தன்னலம் நாடாது பிறர் நலத்தில் நாட்டம் கொண்டு ஒருவருக்காக மற்றவரை வாழ வைக்கும் தியாக சக்தி! திருமணம்

செய்து கொள்ளாமல் வாழுகின்ற ஆணோ பெண்ணோ தங்கள் வாழ்க்கையில் முழுப்பயனைக் கண்டு விட்டதாக நினைப்பதை ஊரும் உலகமும் ஏற்றுக்கொள்ளாது.

மகுடபதியின் தாயார், தன் மகனை மனத்தில் நினைத்துக் கொண்டுதான் இதுபோல பேசினார்கள் என்பதை வரதன் உணர்ந்து கொண்டான். ஆனால் மகுடபதியோ தன் தாயாரின் பேச்சைக்கேட்டு சிறிது தடுமாறினாலும் 'உடன் பணம் இல்லாதவர்கள் திருமணம் செய்துகொண்டு திண்டாடக் கூடாது' என்ற பழைய நினைப்புக்கே முக்கிய இடம் கொடுத்தான்.

வரதன் விடைபெற்றுக் கொண்டு, தன் வீட்டிற்குச்சென்றான். ஒன்றும் பேசாமல் அமைதியாக அமர்ந்திருக்கும் மகுடபதியை அவன் தாயார் உணவருந்த வரும்படிக் கூப்பிட்டாள்.

உணவருந்த அமர்ந்திருந்த மகுடபதியின் மனம் உணவின் மீது செல்லவில்லை. குழம்பிக் கொண்டே இருந்தது. பிசைந்த உணவை வாயில் அள்ளி வைக்கும் நினைப்புக்கூட இல்லாமல் பிரமை பிடித்தவன் போல் அமர்ந்திருந்தான்.

தன் தாயார் கூறிய ஒவ்வொரு சொல்லும் அவனுக்கென்றே தேடிக் கண்டுபிடித்து பயன்படுத்தியது போல அவனுக்கு பட்டது.

ஒன்றும் தெரியாது போல், இருந்த தன் தாயாரால் எப்படி இவ்வளவு பெரியதத்துவத்தைப் பேசமுடிந்தது என்று எண்ணினான் அனுபவம் பேசியிருக்கும். படிப்பில்லாத தன் தாய் பேசியதைக் கேட்ட பின் அது அனுபவம் என்று தானே முடிவுகட்ட வேண்டும்!

"ஏனப்பா இப்படி உட்கார்ந்திருக்கிறாய்" என்ற தாயாரின் வார்த்தைகள் அவனைச் சுய உணர்வு பெற வைத்தது. சாப்பிட வேண்டுமே என்பதற்காக இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு எழுந்து விட்டான்.

மகனின் மனதைத் தன் வார்த்தைகள் தொட்டிருக்கிறது என்பதை அந்தத் தாயுள்ளம் அறிந்து கொண்டு விட்டது!

படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த மகுடபதி உறங்காமல் விழித்துக் கொண்டே இருந்தான். எண்ணத்தில், தன் தாயும், வரதனும் பேசிக் கொண்ட சொற்கள் மாறி மாறி தோன்றிக் கொண்டிருந்தன.

உலகில் மனிதர்கள் எப்படி யெப்படியோ வாழ்கிறார்கள். அவர்கள் எப்படி வாழ்ந்தாலும், எத்தனையோ செயல்களினால் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினாலும், பெண்ணொருத்தியுடன் வாழாத வாழ்வில் சிறப்பில்லையாம். பெருமையில்லையாம், கண்ணியமும் கடமையும் இல்லையாம்! உலகம் பெண்ணுக்கு அவ்வளவு சிறப்பும் செல்வாக்கும் அளித்திருக்கிறது!

பெண்! யார் அந்தப் பெண்? எப்படி அவளுக்கு இவ்வளவு சிறப்பு உண்டானது? யாரால் உண்டாக்கப் பட்டது? எல்லாம் கவிபாடி பெருமை செய்த கவிஞர்கள் செய்த வேலை. அவர்களால் தான் உலகம் பெண்ணை இவ்வளவு உயர்வாகக் கருத முனைந்திருக்க வேண்டும்!

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்” என வள்ளுவப் பெருந்தகையே, பெண்ணுக்கு இவ்வளவு சிறப்பினையுண்டாக்கி விட்டார் என்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமோ?

அடடா? வள்ளுவரால் போற்றப்பட்ட பெண்ணை நாம் எவ்வளவு கேவலமாகக் கருதி விட்டோம்' பாவம்! பெண் என்ன செய்வாள்? பிறர் உழைப்பினை நம்பி வாழக் கூடிய விதமாக, மென்மையான உள்ளத்தையும், உடலமைப்பையும் இயற்கை அவளுக்குக் கொடுத்து விட்டது.

இளமையின் துடிப்பால், நாம் பெண்ணைப் பற்றிச் சரியாக எடை போட்டுப் பார்க்க அறிவு தவறி விட்டது! அம்மா பேசுகிறார்கள் என்றால், அவர்களிடம் அனுபவம் இருக்கிறது.

மனித இனத்தின் அடிவானம் பெண்! அந்த அடிவானத்தில் தான் பூமியும் ஆகாயமும் சந்திக்கும்! பூமியும், ஆகாயமும் சங்கமத்தில் தோன்றுகின்ற உணர்வும் மனித இனத்தை இன்பத்தில் ஆழ்த்துகின்றது. அந்த அடிவானச் சந்திப்பை நீக்கி விட்டு மனிதனால் வாழவே முடியாது.

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் போது, அவர்களுடைய ரம்மியமான நாவல் முடிந்து, அவர்களுடைய உண்மையான வரலாறு ஆரம்பமாகிறதாம்.

திருமணத்திற்கு முன் மனிதன் கனவு காணுகிறான். திருமணத்தின் போது அவன் விழித்துக் கொள்கிறான். பின் காலமெல்லாம் அவனால் உறங்க முடிவதில்லை. கடமையுணர்வு ஏற்பட்டு, அவன் உறக்கத்திற்குத் தடை விதிக்கின்றது.

இது நாள் வரையில் பெண்ணைப் பற்றி உணர்ந்து கொள்ள வில்லை. உணர்ந்து கொள்ளவில்லை என்பதைவிட உணர்ந்து கொள்ள விரும்பவில்லை என்பதுதான் பொருந்தும். பெண்ணைப் பற்றித் தவறான எண்ணங்களே என் இதயத்தில் இடம் பெற்றிருந்தது. ஒரு பெண் தன் ஆடைகளை எவ்வளவு சுலபமாக மாற்றிக் கொள்வாளோ அவ்வளவு சுலபமாகத் தன் மனதையும் மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவள் என்று எண்ணினேன். ஆனால்.

மனிதத்தாய்மை அடையாத பக்தன் ஆண்டவன் அருளை வெறுப்பது போலவே, மனிதத் தன்மையடையாத காரணத்தால் பெண்ணை வெறுத்து வந்தேன்.

வீணையின் நாதம் மனிதர்களை நாடுவதில்லை. மனிதர்கள் தான், அந்த நாதவொலி எங்கிருந்து கிளம்பி வருகிறதோ, அந்தத் திக்கை நோக்கி ஓடுகின்றனர். இன்பம் என்ற சொல் அத்தனைக்கும் ஏற்றப் பொருளாய் இருக்கின்ற பெண்ணை வெறுத்தேன். அவர்கள் அளிக்கின்ற பேரின்பத்தை அற்பசுகம் என்று எண்ணி வந்தேன். திருமணத்தை வெறுத்தேன்!

மகிழ்ச்சியான திருமணம் மனித வாழ்வின் புது அத்தியாயம்! சகத்திற்கும் பயனுக்குமுள்ள புது ஆரம்ப எல்லை! மிருக உணர்வைத் தடுத்து மனிதன் என்ற உணர்வை ஆடவனுக்கும், அகம்பாவத்தையும், ஆணவத்தையும் குறைத்து, தான் வருங்கால சந்ததியாரை வாழ வைக்கப் போகும் அன்னை என்ற எண்ணத்தைப் பெண்ணுக்கு அளிக்கும் சிறப்பினைக் கொண்டது திருமணம் தான்!

"மனைவியில்லா வீடும், நண்பர்கள் இல்லாத ஊரும் ரசிகர் இல்லாத சபையும், அறிவு இல்லாத உடம்பும் பாழ்!" என விளம்பிநாகனார் என்ற பெரியார், இந்த உலகத்திற்குத் தந்த விளக்கம் இதுதான்.

பெண்களைப் பற்றியே சதா சர்வ காலமும் புகழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும், புகழ வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்குமே இன்னும் பெண்களைப் பற்றி, பெண்களிடம் குடி கொண்டுள்ள குணங்களைப் பற்றி சரியாகப் புரியவில்லை என்றால், என்னைப்போல் உள்ளவர்களால் எப்படிப்புரிந்துகொள்ள முடியும்?

ஒன்றே ஒன்றை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதுவும் என் தாயின் பழக்க வழக்கங்கள் பண்பாடுகளைக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. நான் புரிந்து கொண்டதற்கு மாறுபட்ட தன்மை கொண்ட பெண்களும் உலகத்தில் இருக்கலாம். அது நான் பெண்களைப் பற்றிப் புரிந்து கொள்ளத் துணை புரிந்த அறிவின் குற்றமல்ல நான் புரிந்து கொண்டதற்கு மாறாக நடக்கின்ற பெண்களின் குற்றம்தான்."

"பெண்கள் உள்ளம் சகிப்புத் தன்மை உடையது. ஆகையால்தான் அவர்களால் பல துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள முடிகிறது."

உறக்கத்தோடு உறவாட மறுத்த உள்ளத்தோடு மகுடபதி சிந்தித்துக் கொண்டே இருந்தான். முடிவான எண்ணம் எதுவும் தோன்றவே இல்லை.

இரவின் மனதுக்கே மனித மனத்தை இன்னலுக்கு ஆளாக்கும் சக்தி அதிகம்.

மகுடபதியின் மனம் இரவைச் சபித்தது.

"நீயும் திருமணம் செய்து கொண்டு, என்னைப் போல் நிம்மதியாக இருக்காமல், இப்படி மனப்போராட்டம் நடத்திக் கொண்டு அமைதியின்றி அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறாயே, போ... போ. போய் உனக்கு ஏற்றவளாக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள். அப்போதுதான் என்னைப் போல் உன்னாலும் அமைதியாக வாழ முடியும். பிரம்மச்சாரியாக வாழ்ந்து விடலாம் என்று எண்ணாதே. அந்த எண்ணம் கோழைத்தனமானது.

"பிரம்மச்சரியம் என்பதை அறிவு வளர்ச்சி உள்ளவர்கள், அல்லது மூளை உழைப்பு உள்ளவர்கள் அல்லது உடலுழைப்பு அற்றவர்களால் கடைப்பிடிக்க முடியாது. உன்னைப் போல் மூளை உழைப்பு உள்ளவர்கள் பிரம்மச்சாரியாக வாழ்ந்துவிடலாமென்று எண்ணுவது, உணர்வு பொங்கி வழிந்து கொண்டிருக்கின்ற உள்ளத்தை ஏமாற்ற எத்தனிக்க முயற்சிப்பது போன்றதாகும்.

"மனிதன் இயற்கையின் அடிமை! இயற்கையான உணர்ச்சிகளின் தூண்டுதல், அவன் நிம்மதியாக வாழவே விடாது!"

"பிரம்மச்சரியத் தத்துவம் என்பதை, பொதுவாக எல்லா மனிதர்களும் கையாளலாம் என்ற எண்ணம் தவறானது. அது, தனிமனிதன் தத்துவம். பலவீனமனம் கொண்டவன், ஆண்மைத் தன்மையற்றவன், சோம்பலுக்கு அடிமையாகி விடுபவன், எல்லாம் விதியின் செயலென்று எண்ணி, மதிமழுங்கி விடுபவன், தன்னம்பிக்கையற்றவன் ஆகியவர்களால்தான் பிரம்மசரியத்தை ஓரளவு கடைப்பிடித்து வாழ முடியும்.

"தவறுகளோ, முன்கூட்டியோ அனுபவித்தவன் முன்னவர்கள் கூறிய முட்டாள்தனமான கதைகளை நம்பியவன்தான், பெண் இனத்தை, பெண் தொடர்பை பெண்ணோடு கூடி வாழும் வாழ்க்கையை வெறுக்கிறான். அது போலவே பெண்களோடு கூடி வாழ்கின்ற போதும், பெண்ணைப் பூரணமாகத் திருப்தி படுத்த முடியாதவனும், வறுமையில் வாடுபவனும் பெண்களை இழித்துப் பேசுகிறான். பெண்ணென வந்த மாயப்பிசாசு என்று. அவன் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்க வேண்டிய பெண்ணை இழிவாக பேசுகிறான்.

"நீயும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றப் போகிறாயா? வேண்டாம், வேண்டவே வேண்டாம். திருமணம் செய்துகொள்! திருந்திய மனிதனாகி விடு!"

மகுடபதியின் மனம் அவனுக்கு இப்படி உபதேசம் செய்தது!

நண்பனின் நச்சரிப்பு அன்னையின் அன்பான வேண்டுகோள் உள்ளத்தின் உபதேசம், இத்தனையும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, திருமணச் சந்தையை நோக்கி அவனை விரட்டி விரட்டியடித்தன.

சரி! திருமணம் செய்து கொள்வதாகவே வைத்துக் கொள்வோம். யாரைத் திருமணம் செய்து கொள்வது? எப்படிப்பட்ட பெண் கிடைத்தால் 'நம்மைப் போன்றவன் நிம்மதியாக வாழ முடியும்? மீண்டும் சிந்தனை, மனக்குழப்பம் ஆரம்பமானது.

செந்தாமரையைப் பற்றிய நினைவு சிந்தனையோடு வந்து மோதியது. செந்தாமரையைப் போன்ற ஒருத்தியைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். செந்தாமரை எப்படி? அவளை மட்டும் நல்ல பெண் என்று இந்த மனம் நினைக்கிறது. உடல் நிலை சரியில்லாதிருந்த என்னை வீட்டில் வந்து பார்த்தாளே, அதனாலா? அலுவலகத்தில் எனக்கெதிரில் தான் அமர்ந்திருக்கிறாள் என்றாலும், நான் அவளுடன் பழகியது கூட இல்லையே! அப்படியிருக்க மனம் ஏன் அவளைப்பற்றி நினைத்தது?...யார் இந்தச் செந்தாமரை?"

## 5

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய செந்தாமரையின் முகத்தில் அளவற்ற மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது. என்றுமில்லா உற்சாகத்துடன் அன்று அவள் காணப்பட்டாள். அவள் உள்ளம் அடைய முடியாத இன்பத்தை அடைந்து விட்டதாகக் கருதி துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

வீட்டை சுத்தம் செய்தாள். சுவற்றில் மாட்டியிருந்த படங்களையெல்லாம் கழட்டி எடுத்து துடைத்து மீண்டும் மாட்டி அழகு பார்த்தாள். அன்று அவள் இருந்த சுறுசுறுப்பைக் கண்டால், மாப்பிள்ளை வீட்டார் யாரேனும் பெண் பார்க்க வருகிறார்களோ என்று ஐயுறும்படியான நிலையில் காணப்பட்டாள். ஆனால் யார் அவளை அப்படிக் கேட்கப் போகிறார்கள். அவளைப் பொறுத்த வரையில் அவள் தனி மரத்தைப்போல.

ஈன்றவளை இழந்து, [illegible] பலவறுககும சுடுகாடுத்து எப்படியோ வளர்ந்து விட்டாள் பொற்கொடி செந்தாமரை.

என்றவர்க்குரியவரோ எதைப் பற்றியும் எண்ணிப் பார்க்காத, எதையுமே பொருட்படுத்தாத கவலையற்ற மனிதராகக் காணப் பட்டார். ஆம்! மதுவென்னும் மயக்கும் எழிலரசியுடன் அவர் எப்போதும் சல்லாபம் கொண்டு, உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

மகள் ஒருத்தி வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்து நின்று, வண்டுக்கு வாழ்த்துக்கூறி வரவேற்கும் நிலையில் இருக்கிறாளே என்ற எண்ணம் அவர் உள்ளத்தை. சிந்தனையைத் தொடக் கூட இல்லை. மதுமோகினியின் மையலில் சிக்கி, அவர் மகளை மறந்தவராகவே வாழ்ந்துவந்தார். மகளை மட்டுமா அவர் மறந்திருந்தார். மதியையும் அல்லவா இழந்தவராக இருந்தார்!

தாய் இல்லாத குறையையும் தந்தையின் குடிச் செயலையும் கூட செந்தாமரை அன்று மறந்தவளாகக் காணப்பட்டாள். இன்ப வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். அவளுடைய செயல்கள் கண்டவர்கள் வியப் படையும் படியாகவே இருந்தது. வழக்கமாக அலுவலகத்திலி ருந்து வீட்டுக்கு வந்து நுழைந்ததும் அவளுடைய மலர்ந்த முகத் தில் ஒரு வகையான வாட்டம் குடிபுகுந்து கொள்ளும். ஆனால், அன்று வழக்கத்திற்கு மாறாக அவள் செயல்கள் அமைந்திருந்தன. கூந்தலைச் சரிப்படுத்திக்கொண்டு, தன் அழகு மிகுந்திருக்கிறதா என்று கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். உள்ளத்தில் மூண் டெழுந்த உவகை அவளை நிலை கொள்ளாதபடிச் செய்து விட்டது. உன் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று கேட்டால் அவளே தெரி யாது என்றுதான் பதில் சொல்வாள்.

மாலை மறைந்து இருள் தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம் பித்தது. மதிமுகத்தாள் ஒரு பாடலை மெல்லப் பாடிக் கொண்டே சமையல் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். நேரம் ஓடிக் கொண்டே இருந்தது அவள் வாயும் பாடிக் கொண்டே இருந்தது.

எல்லையில்லா மகிழ்ச்சியால் இன்பக் கூத்தாடிக் கொண்டிருந்த மனம் எதையெதை யெல்லாமோ பற்றி எண்ணிப் பார்க்க ஆரம்பித்தது.

ஆனந்தமோ, துயரமோ எதிர்பாராமல் ஏற்படுகின்ற போது, அதற்கு வேகமும் அதிர்ச்சியும் அதிகமுண்டு. நெஞ்சிலே வடுபோலவும் பதிந்து விடும்,

நாம் இப்படித் தலைகால் தெரியாமல் குதித்துக் கொண்டிருக்கி றோம். அப்படியானால் அவரும் அப்படித்தான் இருப்பாரோ?

“இன்ப உணர்வுகள், இதயத்தைத் தொட்டு விளையாட ஆரம்பிக்கின்றபோது, ஆண் அவசரப்பட்டு அதை வெளியுலகத்

தார் அறியும்படியாகக் காட்டிக் கொள்கிறான். பெண், மறைத்து வைத்து வீட்டிற்குள் தனிமையில் எண்ணி மகிழ்கிறாள்!

அவரைப் பார்த்தது முதல் உள்ளம் ஏன் இப்படி இன்பக் கூத்தாடுகிறது? இன்றுதான் புதிதாக அவரைப் பார்க்கிறேனா? மூன்றாண்டுகாலமாக தினம் தினந்தானே பார்க்கின்றேன். அப்படியிருக்க, இரண்டு நாள் நோய்வாய்ப்பட்டு அலுவலகம் வராமல் இருப்பதற்காக அவரை வீட்டிற்போய் ஏன் பார்க்க வேண்டும்! வீட்டிற் போய் பார்த்தாற்தான் என்ன? அவரைப் பார்த்தது முதல் இந்த மனம் ஏன் இப்படி அலைந்துப் படுகிறது என்பதுதான் புரியவில்லை.

“பெண்மை ஆண்களின் உள்ளத்தை எளிதில் கவர்ந்திடும் ஆற்றல் பெற்றதாமே! ஆண்மையின் அழகில் சிக்கி பெண்ணாகிய நானே தடுமாறும்போது, பெண்மைக்கு ஆற்றல் அதிகம் என்றால், அவர் என்னைவிட அல்லவா அதிகம் தடுமாற்றம் அடைய வேண்டும்! ஒருவேளை அவரும் தடுமாறிக் கொண்டிருப்பாரோ என்னவோ?

நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் போது என்னைப்பற்றி வேறு எண்ணியா அவர் தடுமாற்றம் கொள்ள வேண்டும்? அதனால் அவர் நோய் மேலும் வளர்ந்து விட்டால்?... வள்ளுவப் பெருந்தகை, பெண்களின் பார்வையை நோய் நோக்கு என்கிறாரே. அப்படியென்றால் என் பார்வையும் நோய் நோக்குடையது தானோ? அது நோய் நோக்காக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் மற்றொரு நோக்கு அந்நோய்க்கு மருந்து என்றும் வள்ளுவரே கூறியிருக்கிறார்.

இரு விழிகளில் ஒரு விழிப் பார்வை நோயை வளர்க்குமெனில், மற்றொன்று அந்நோய் தீர்க்கும் மாமருந்தாகுமாம். பார்வையால் ஏற்படுகின்ற நிலைகளை வள்ளுவர் எடுத்துக்காட்டி, எளிய முறையில் விளக்கி விட்டிருக்கிறார்.

எவருக்கும் இடம் கொடுக்காத என்னுள்ளம், எவரையும் ஏறிட்டுப் பார்க்காத என் கண்கள் மகுடபதியைக் கண்டதும் தடுமாற்றம் அடையக் காரணம் என்ன? எவருக்கும் அடிமைப்பட்டிருக்காத மனம், இவருக்கும் மட்டும் இடங்கொடுத்து எப்படி அடிமைப்பட துணிந்தது என்பதுதான் புரியவில்லை. மகுடபதியைக் கண்டதும் என்னுள்ளத்தில் காதல் நினைவுகள் அரும்ப ஆரம்பித்து விட்டது போலும்.

காதல் என்றால் ஏதோ மர்மம் நிறைந்த ஒரு பொருள் என்றுதான் இது வரையில் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால்...

காதலில் மர்மம் என்பது ஒன்றுமில்லை. ஒரு சிலர் நினைப்பது போல், அப்படியொன்றும் புரியாத புதிரல்ல காதல்! காதலை

சரியான முறையில் புரிந்து கொண்டு, சாதுரியமாக சமாளிப்பவர்களுக்கு அதன் பளு தெரியாது. கைக்கெட்டிய தூரத்தில் இன்பம் இருக்கிறது என்பதை உணர்ந்து நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டால், காதலில் எந்த வகையான மர்மமும் இல்லை, என்பது நன்றாகப் புரிந்து விடும். காதல் இந்தச்சமயத்தில்தான் ஏற்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. எப்போது வேண்டுமானாலும் தோன்றும்.''

நோய் கொண்டு அலுவலகம் வராமல் வீட்டிலேயே இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டதும் என் மனம் வேதனைப் பட்டது. போய் பார்த்து வரலாம் என்று எண்ணிக் கொண்டுதான் அவரின் நண்பருடன் அவர் வீட்டுக்குச் சென்றேன். சென்ற இடத்தில் என் சிந்தை தடுமாறி விட்டது. காதல் நோய் என்னுள்ளத்தைப் பற்றிக் கொண்டது.

''காதல் நினைவு என் நெஞ்சத்தில் குடிபுக ஆரம்பித்து முதல் நான் ஒரு வகையான மயக்கத்துடன்தான் இருக்கிறேன். அடிக்கடி உயிர் சிலிர்க்கிறது. அந்த உணர்வுக்குப் பெயர்தான் காதல் என்று இருக்க வேண்டும்.''

எல்லையில்லா இன்பத்தில் திளைத்து நேரத்தையும் நினைப்பையும் மறந்தவளாக இருந்த செந்தாமரையைத் திடுக்கிட வைத்து விட்டது. அவள் தந்தை தள்ளாடியபடியே நடந்து வந்த காட்சி. அந்த நிலையில் தந்தையைக் கண்டதும் அவள் கண்கள் குளமாகி விட்டன. சிறிது நேரத்திற்கு முன் இருந்த மகிழ்ச்சியெல்லாம் மறைந்து, வேதனையின் உருவாகத் தோற்றமளித்தாள் செந்தாமரை.

மகளைப் பற்றியோ, மானத்தைப் பற்றியோ கவலைப்படாமல் வீட்டிற்கு நுழைந்த செந்தாமரையின் தந்தை ஒரு அறைக்குள் நுழைந்தார். சிறிது நேரத்தில் சாமான்கள் தடதடவென உருளும் ஒலி கேட்டது. செந்தாமரை தந்தை நுழைந்த அறையின் பக்கம் பார்வையைத் திருப்பினாள். அவர் தடுமாறிக் கொண்டே கட்டிலில் படுத்துக் கொண்டார். அதைக் கண்ட செந்தாமரை, தன் தலையில் கை வைத்துக் கொண்டு, பதுமைப் போல உட்கார்ந்து விட்டாள். சிறிது நேரத்திற்கு முன்பிருந்த மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

தந்தையின் தவறான போக்கைக் கண்டு மகளின் மனம் அமைதியுடனா இருக்கும்? வேதனைப் பொங்க, துயரம் நெஞ்சை அடைக்க ஏதும் பேச முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி புண்ணாகிக் கொண்டிருந்தது.

அம்மா இருந்தால். இது போல் தந்தை குடித்துவிட்டு கும் மாளம் போட்டுக் கொண்டு வருவாரா? பாவம் சாப்பிடாமல் கூட படுத்து விட்டார். அவரை எழுப்பி சாப்பிடச் சொல்லலாம் என்றால், எனக்கு பயமாக அல்லவா இருக்கிறது. அவர் குடி போதையில் இருக்கும் போது அவர் அருகில் செல்வதென்றாலே எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது? நான் என்ன செய்ய முடியும்? அப்பாவின் நிலைகண்டு என் பெண் மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா? அம்மா இருந்திருந்தால் என்றால் ஒரு வேளை அமைதி யாக இருக்க முடியுமோ என்னவோ?

மரம் அசைந்து கொடுக்கவேண்டுமானால் மரத்தை அசைக்கும் ஆற்றலுள்ள பெருங்காற்று வீசவேண்டும், தென்றலால் பலம் பொருந்திய மரத்தை அசைத்து விடமுடியுமா? அப்பா பலம் பொருந்திய மரம். அந்த மரம் அம்மா என்ற பெருங்காற்று வீசும் போது வேண்டுமானால் சிறிது, அசைந்து கொடுக்குமே தவிர, என்னைப் போன்ற தென்றலால் அவரை என்ன செய்து விட முடியும்? தென்றல் வீசக்கூட இலை வேண்டுமானாலும் அசையும். மரம் எப்படி அசையும்?

உலகத்தை இருள் சூழ்ந்து கொண்டிருந்தது போலவே செந் தாமரையின் மனதிலும் இருள் சூழ்ந்து கொண்டு விட்டது.

செய்யும் வகையறியாது பதுமைபோல நெடுநேரம் வரையில் அமர்ந்திருந்தவளை, பசி உணர்வடையச் செய்தது. உணவருந்த எழுந்தாள். உடன் தந்தை சாப்பிடவில்லை என்ற எண்ணமும் எழுந்தது. தந்தைதான் தன் மகளைப் பற்றிக் கவலைப்படாமல், மதுமங்கையின் பிடியில் சிக்கி மதிமயங்கி இருக்கிறார் என்றால், மகளும் தந்தையைப் பற்றிக் கவலைபடாமல் இருந்து விடமுடி யுமா? தந்தையை உணவருந்துவதற்காக அழைக்கச் சென்றாள்.

செந்தாமரை தன் தந்தையை உணவருந்த அழைத்தது செவி டன் காதில் ஊதிய சங்குபோல் ஆகிவிட்டது. அவர் அலங்கோல மாகப் படுத்துக் கிடந்தார். அவர் வாயிலிருந்து ஆபாசமான வார்த்தைகள் வெளிவந்து கொண்டிருந்தன. செந்தாமரையின் உள்ளம் தன் தந்தையின் நிலைகண்டு வேதனையில் துடித்தது.

சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள். அதற்கு மேலும் அங்கு நிற்பதால் பயனில்லை என்று கருதி, தலைகுனிந்தவாறே திரும்பி விட்டாள். உணவுண்ணவும் மனம் வரவில்லை. இது அவள் வாழ்வில் புதிதாகக் காண்பதல்ல என்றாலும், இன்று மிக வும் வேதனைப்பட்டாள். அழுது அழுது அவள் கண்கள் சிவந்து விட்டன முகம் வீங்கி விட்டது. பசியை மறந்தாள். தன் உள்ளத்தில் மாலையில் மலர்ந்து நின்ற இன்ப நினைவுகளையெல்லாம் மறந்தாள். படுக்கையில் படுத்து நெடுநேரம் வரையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

ஆக்கிய சோறும் குழம்பும் உண்ணப் படாமல் சுவைக்கப் படாமல் அப்படியே இருந்தன. செந்தாமரையின் அழகும் சுவைக்கப்படாமல்தான் இருந்தது. செந்தாமரை, தந்தையின் கவனக் குறைவால்தான் அவளின் கன்னியிளமை கவனிப்பாரற்றுக் கிடந்தது. அவளின் தாய் மட்டும் இருந்திருந்தால்......!

உலகத்தில் இளைஞர்களையும் இளம் பெண்களையும் தவறான பாதையில் சென்று விடாமல் காத்து கட்டுக்கோப்பில் வைத்து காலா காலத்தில் அவர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து வைப்பவர்கள் பெற்றோர்கள். ஆனால் அது செந்தாமரையின் வாழ்க்கையில் தலை கீழாகி விட்டது. மகளைப் பற்றிக் கவலைப் படாத தந்தையைப் பற்றி மகள் கவலைப்பட வேண்டிய நிலையைப் பாழும் இயற்கை அவள் வாழ்க்கையில் ஏற்படுத்தி வேடிக்கையைப் பார்த்தது.

மகளின் வருமானத்தைப் போலவே தந்தையின் வாழ்க்கையும் அடங்கியிருந்தது. அவளின் தாய் இறந்த பிறகுதான் இந்தப் பாழாய்ப் போன குடிப்பழக்கம் அவரைப் பற்றிக்கொண்டு விட்டது. எப்போதாவது வேலைக்குச் சென்றால், அதில் கிடைக்கும் வருமானம் முழுவதையும் குடித்து விட்டு வந்து விடுவார். எப்படியோ இலவசமாகவே பள்ளி இறுதி வரையில் படித்து செந்தாமரை முன்னேறி விட்டாள். எழுத்தர் வேலையில்தான் அவள் ஆரம்பத்தில் சேர்ந்தது, அதிலிருந்து கொண்டே டைப் அடிக்கக் கற்றுக் கொண்டாள். அதுதான் இன்று அவள் கண்ணியமாக வாழப் பெரும் உதவியாக இருந்து கொண்டிருந்தது.

செந்தாமரை உலகை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மனச்சோர்வு அவளை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தி விட்டது.

ஊரெங்கும் அமைதியில் ஆழ்ந்திருக்க வேண்டிய அந்த நேரத்தில் தெருவில் இரண்டு நாய்கள் பலத்த சத்தத்துடன் குரைத்துக் கொண்டிருந்தன. அந்தச் சத்தம் மிகுதியாக வளர வளர, செந்தாமரையின் தூக்கம் கலைந்து விட்டது. பயங்கரமான அந்த சத்தம் அவளைத் திடுக்கிட்டு விழிக்க வைத்தது.

அச்சத்துடன் அமர்ந்திருந்த செந்தாமரைக்குத் தெருக்கதவு தாழிடப்படவில்லை என்ற நினைவு வந்தது. பக்கத்து வீட்டு மணிப்பொறி இரண்டு முறை அடித்து ஓய்ந்த சத்தம் கேட்டது. "இரண்டு மணியாகிவிட்டதா?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு எழுந்து சென்று தெருக்கதவை தாழிட்டுவிட்டுத் திரும்பினாள். மனச்சுமை மலைபோல் குவிந்து கிடந்தமையால் அவள் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தாள். மீண்டும் தந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அறையின் பக்கமாகச்

சென்றாள். அவர் அருகில் சென்று நின்று கொண்டு "அப்பா" என்று மெல்லிய குரலில் அழைத்தாள்.

செந்தாமரையின் தந்தை அப்போது குடி வெறியிலிருந்து கொஞ்சம் விடுதலைப் பெற்றிருந்தார். "என்னம்மா?" என்ற படியே படுக்கையில் திரும்பிப் படுத்தார்.

அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. மீண்டும் "அப்பா" என்று மட்டுமே அவளால் கூப்பிட முடிந்தது. படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து அமர்ந்தபடியே "என்னம்மா?" என்று கேட்டார்.

என்னதான் குடிகாரராக இருந்தாலும் குடிபோதை இல்லாத நேரத்தில் மகளென்ற பாசம் தந்தையின் மனதை விட்டு மறைந்தா போகும்? போதை தெளிந்திருந்த காரணத்தால், அவர் செந்தாமரை முகத்தைப் பரிவோடு பார்த்தார்.

"அப்பா" என்று கதறிக் கொண்டே அவரின் கைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் செந்தாமரை.

"என்னம்மா? ஏன்? என்ன செய்கிறது?" என்று கேட்டுக் கொண்டே அவள் முகத்தை நிமிர்த்தினார்.

"எனக்குப் பயமாக இருக்கிறதப்பா! இனிமேல் நீங்கள் குடிக்க மாட்டேன் என்று சொல்லுங்கள்" என்று கொஞ்சலுடன் தந்தையிடம் வேண்டுகோள் விடுத்துக் கேட்டுக் கொண்டாள் செந்தாமரை.

"இம்......அதுவா?......செந்தாமரை! தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதே! முடிந்தவரையில் உன் வேண்டுகோளுக்காக குடிக்காமல் இருக்க முயற்சிக்கிறேன் நீ போய்ப் படுத்துக் கொள்ளம்மா!" என்று ஆறுதலாகக் கூறி செந்தாமரையை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

அதற்கு மேலும் அவரிடம் பேசிக் கொண்டிருக்காமல் செந்தாமரை திரும்பி விட்டாள்.

தந்தைக்கும் மகளுக்குமிடையில் நடந்த உரையாடல் புதிதானதல்ல! 'இனிமேல் குடிக்காமல் இருக்க முயற்சிக்கிறேன்' என்று அவர் அவளிடம் ஆயிரம் முறையாவது உறுதி கூறியிருப்பார். தந்தை சொன்ன சொல் காப்பாற்றுவதில்லை என்பது தெரிந்திருந்தும் செந்தாமரையும் இனிமேல் குடிக்காதீர்கள் என்று கேட்காமல் இருப்பதில்லை!

தந்தையும் மகளும் அன்றிரவைப் பட்டினியாகவே கழித்தனர். தந்தையுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பிய

பிறகு செந்தாமரைக்குத் தூக்கம் வரவில்லை. விழித்துக்கொண்டே எண்ணத்தில் ஆழ்ந்தவளாய் உட்கார்ந்திருந்தாள்.

"வாழ்க்கை மனித இனத்தின் கண்களைப் பொத்திக் கண்ணு மூச்சி விளையாட்டு விளையாடுகிறது.

மாலையில் இன்பமும், இரவில் துன்பமும் அனுபவிக்க வேண்டும் என்பது இயற்கையின் கட்டளை போலும்.

மகுடபதி தன்னை ஏற்றுக் கொள்வாரா? எனக்கு முன்பாக வேறு எவளாவது அவர் இதயத்தில் இடம்கொண்டு இருந்தால்... சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது!

மூன்றாண்டுக் காலமாக ஒரே அலுவலகத்தில் எதிரும் புதிரு மாக அமர்ந்து இருவரும் வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஒரு நாள் கூட தவறான முறையில் அவர் என்னிடம் பழகியதில்லை. பழகுவது இருக்கட்டும். பார்வையில் கூட தவறு இருக்கிறது என்று சொல்ல முடியாமல் 'அல்லவா இருந்தது. பழக வாய்ப் பிருந்தும் என்னிடமே பழகாதவர், வேறு ஒருத்தியிடமா பழகி யிருக்கப் போகிறார்?

அவரை என் மனம் நாடுகிறது. அவர் உள்ளத்தில் எனக்கு இடம் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் என்னைப் பாடாய்ப் படுத்துகிறது. ஒரு வேளை, அவர் மனதை வேறு எவளாவது கவர்ந்திருந்தால் என்ன செய்வது என்ற அச்சமும் என்னை வாட்டி வதைக்கிறது.

நான் உங்களை விரும்புகிறேன் என்று நாளைப் போய் எப் படி அவரிடம் சொல்வது? காதலிக்கின்றேன் என்று வெட்கமின் றாமல் வெளியில் சொல்ல ஒரு பெண் துணிவாளா?

அவர் பார்வையில் தோன்றிடும் பரிவு எனக்கு ஒரு வகையில் நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது.

"ஆசையும் பாசமுமே மனிதனின் நெஞ்ச ஈரத்தை அளவெ டுத்துக் காட்டும் அளவு கோல்கள் என்பது எவ்வளவு உண்மை யானது! அவர் பார்வையில் தோன்றிய பரிவினைக் கண்டுதானே நானும் ஆறுதல் அடைய வேண்டியிருக்கிறது. நோய் தீர்ந்து நல்லபடியாக அவர் அலுவலகத்திற்கு வரட்டும். அதன் பிறகு எப்படி நடக்க வேண்டும் என்று பார்த்துக் கொள்ளலாம்

தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டவளாய் கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள் செந்தாமரை.

அன்பின் அடித்தளத்தின் மீது நின்றுதான் இந்த உலகம் சுழன்று கொண்டிருக்கிறது. அன்பில்லாத வாழ்க்கை உயிரில்லாத உடலைப் போன்றதாகும். அன்பும் அதனால் விளைகின்ற இன்பமுமே வாழ்க்கைப்பூங்காவில் வீசுகின்ற வசந்தத் தென்றலாகப் பரிணமித்துள்ளன. உலகம் சந்திரனை இழுக்கிறது சூரியன் உலகை இழுக்கிறான். ஒரு அண்ட கோளத்தை மற்றொரு அண்ட கோளமும் ஒரு அணுவை மற்றொரு அணுவும் இழுக்கிறது. இழுக்கும் சக்திக்கு ஒரு தனி மகத்துவத்தை இந்த உலகம் வழங்கியிருக்கிறது, காந்தம் இரும்பை இழுக்கின்றது. கன்னியின் கடைப் பார்வை மற்றொரு உள்ளத்தை இழுக்கும் தூண்டில் முள்ளாக அமைந்திருக்கிறது. இந்த இழுக்கும் சக்திக்குக் காரணமாக இருப்பதெல்லாம் அன்பேயாகும்.

காலை 10 மணிக்கு அலுவலகத்தினுள் நுழைந்து தன் இருப்பிடத்தில் அமர்ந்திருந்த மகுடபதியின் சிந்தனை இதுபோல எண்ணச் சுழலில் சிக்கிக் கொண்டு கரையேற வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தது.

வழக்கத்திற்கு மாறாக மகுடபதி எதையோ பறி கொடுத்ததைப் போல் அமர்ந்திருப்பதைக் கண்டு அலுவலகத்தில் அவனைப் போல் வேலை செய்து கொண்டிருந்த சக தோழர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். உடல் நலமில்லாமல் வந்துள்ளமையால் அவன் மனம் குழம்பிப் போய் இருக்குமோ என்று எண்ணினர் ஆனால் ஒருவராவது துணிந்து வாய்விட்டு அவனைக் கேட்கவேயில்லை.

வேலையின் மேல் நாட்டத்தைச் செலுத்தாமல் வேறு ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்த மகுடபதியை டைப்மிஷினின் ஒலி சுயநினைவடையச் செய்தது. திரும்பிப் பார்த்தான் எதிர் வரிசையில் அமர்ந்து செந்தாமரை டைப் அடித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் மகுடபதியின் முகத்தில் ஒரு வகையான மாறுதல் தோன்றியது மகிழ்ச்சியின் ரேகை படர்ந்திருந்தது என்று கூடச் சொல்லலாம்.

அலுவலக நிர்வாகியின் கனைப்புச் சத்தம். அதற்கு மேலும் செந்தாமரையைப் பார்த்துக் கொண்டு வேலைகளைக் கவனிக்காமல் இருக்க மகுடபதிக்கு அனுமதியளிக்கவில்லை. செந்தாமரையின் முகத்தாமரையின் மீது சென்று பதிந்திருந்த தன் பார்வையை மிகவும் சிரமப்பட்டுத் திருப்பித் தன் மேஜை மீது குவித்து

கிடந்த காகிதங்களின் மேல் செலுத்த ஆரம்பித்தான். ஆனால் அவன் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்க அவன் கண்கள் மறுத்து கள்ளத்தனமாக அடிக்கடி செந்தாமரை இருந்த திக்கின் பக்கம் சென்று சென்று மீண்டுகொண்டே இருந்தது.

சில வேளைகளில் செந்தாமரையின் விழிகளும் மகுடபதி இருந்த பக்கம் திரும்பும். அப்போது இரு விழிகளும் சந்திக்கும். அந்தச் சந்திப்பில் வாயால் பேச முடியாத வார்த்தைகளை எல்லாம் அவை பேசித் தீர்த்துக் கொள்ளும்.

இருவரின் கண் களவு கொண்ட பார்வையில் பட்டுத்தெறித்த கவர்ச்சி அன்பாக மாறியது. அன்பின் முதிர்ச்சி காதலாக மலர்ந்து மணம் வீசத் தொடங்கி விட்டது. அந்த அன்பு ஒருவரைக் காணவிட்டால் மற்றவர்க்குத் துன்பமாக வேதனையாக இருந்தது. அந்த வேதனை அவர்கள் முகத்தில் விளையாட்டுக் காட்டி அலுவலகத்திலுள்ள மற்றவர்களுக்கு அவர்களைக் காட்டி கொடுக்கவும் தவறவில்லை.

கண்களவு கொள்ளும் சிறு நோக்கு காதலாக மலர்ந்தது கூடத் தவறவில்லை. ஆனால் அது அலுவலகத்திற்குள்ளாகவே மலர்ந்த மணம் வீச ஆரம்பித்தது தான் பெருந் தொல்லையாகப் போய்விட்டது.

அன்றிலும், அகன்றிலும், புறவும், கிரௌஞ்சமும், வானம் பாடியும் மக்களின் இல்வாழ்க்கையைப் பழிக்கக் கூடியதாக இருக்கிறது. அவைகளின் அன்பும், ஆர்வமும், காதலும், கனிவும் மனிதனுக்கு வரவே வராது. அந்தப் பறவை இனத்திற்குள்ள சுதந்திரம் கூட பகுத்தறிவு கொண்டவர்கள் என்று கூறிக் கொள்ளும் மனிதர்களிடம் இல்லை.

அவைகளுக்குள் அச்சமோ, அதிருப்தியோ இல்லை. ஆனால் இந்த மனித இனத்தாரிடமோ அவை எல்லாம் இருக்கின்றன. பகுத்தறிவு கொண்டுள்ள மனித இனம் காதலித்தேன் என்று சொல்லவே வெட்கப்பட வேண்டியிருக்கிறது. மனித இனத்தின் காதல் திருவிளையாடல்களுக்கு மட்டும் திரை மறைவு அவசியம் தேவைப்படுகிறது.

இந்த உலகத்தில் அண்ணனும் தங்கையும் சேர்ந்து ரோடில் நடந்து சென்றால்கூட ஐயப்படுகின்றார்கள். தகப்பனும், மகளும் நடந்து சென்றால்கூட அவர்கள் இருவரும் கணவன் மனைவியாகத் தான் இருக்க வேண்டும் என்று தப்புக் கணக்கு போகின்றனர். அக்காளும் தம்பியும் நடந்தால் ரோட்டில் நடப்பவர்கள் அவர்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகாமல் பொருத்தமற்ற ஜோடி என்று ஆருடம் கணிக்க முனைந்து விடுகின்றனர். ரோட்டில் நடப்பவர் இருவர்களில் அவர்கள் ஆண் பெண்ணாக இருந்

தான் அவர்கள் கணவன் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என்பது மனித இனத்தின் நினைப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. அறிந்தோ அறியாமலோ நகரத்தில் உள்ள மக்கள் அதிலும் குறிப்பாக ஆண்கள் இந்தத் தவறான வழியில்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இன்று இவ்வளவு தூரம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் இடம் கொடுத்து, எண்ணிப்பார்க்க முனைந்துள்ள நானே, சில நாட்களுக்கு முன் வரையில் இப்படித்தானே எண்ணிக் கொண்டிருந்தேன்?

ஏன்-தவறான போக்கால் எத்தனை அண்ணன் தங்கைகள் காதலர்களாகவும் எத்தனை தந்தையும் மகளும் கணவன் மனைவியராகவும், எத்தனை அக்காளும் தம்பியும் பொருத்தமற்ற சதிபதிகளாகவும் மாறினார்களோ?

தவறான பாதையில் துள்ளிக் குதித்து நடை போடுவதில், மனித இனத்துக்கு ஒரு தனி இன்பம் இருக்கும் போல் இருக்கிறது.

நேரடியாகத் தன்னை ஒரு நிகழ்ச்சி பாதிக்கின்றது என்ற நிலை வரும்போதுதான் அதிலுள்ள நன்மை தீமைகளைப் பற்றி மனித மனம் நன்றாக எண்ணிப் பார்க்க ஆரம்பிக்கின்றது. அதுவரையில் பக்கவாட்டில் திரும்பிப் பார்க்க முடியாதபடி முகத்தை மூடி வைத்திருக்கும் குதிரையின் நேர் பார்வை நாட்டம் போலவே மனித மனமும் ஒரே வழியைப் பின்பற்றியேதான் ஓடுகிறது.

ஆண் பெண்களின் கூட்டுறவில் உள்ள ஒருமைப்பாட்டில் தான் உலகம் உருண்டு கொண்டிருக்கிறது. என்றாலும், ஒரு பெண்ணை ஒரு ஆண் பார்க்கிறான் என்றால் அவனை ஏன் தான் இந்த உலகத்திலுள்ள மனிதர்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்களோ?

அலுவலகத்தில் உள்ளவர்கள் தன்னையும், செந்தாமரையையும் அடிக்கடி பார்ப்பதையும், அவர்களுக்குள்ளாகவே கேலியாகப் பேசிக்கொள்வதையும் கண்டு மகுடபதியின் மனம் இதுபோல எண்ணியது.

சில நாட்களுக்கு முன் வரையில் இப்படிப்பட்ட மனப் போராட்டம் எழுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. அப்போதிருந்த நினைவெல்லாம் எந்தக் காரணத்தைக் காட்டித் திருமணம் வேண்டாம் என்று தடுக்கலாம் என்பதைப் பற்றியதாகவே இருந்தது. திருமணம் தேவையில்லை என்று கூறுவதற்கான ஆதாரங்களைச் சேகரிப்பதற்காக மனம் சதா சர்வ காலமும் அலைந்து கொண்டிருந்தது.

காதல் உணர்வு அரும்புகின்ற போதுதான் பறவை இனங்களின் நிறங்கள் பிரகாசமுள்ளதாக இருக்குமாம். நாற்கால் பிராணிகளிலும் இவ்வாறுதான் நிறமாற்றம் ஏற்படுகின்றது, என்று கண்டறிந்தோர் கூறுகின்றனர். இந்த மாறுபாடு, உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவானவை யென்றாலும், பறவை இனத்திற்கும், நாற்கால் பிராணிகளுக்கும் இல்லாத சிறப்பு, மனித இனத்திற்கு மட்டும் இருக்கிறது. அதுதான் சிந்தித்துப் பார்க்கும் சிறப்பாகும். ஒரு பறவைகளோ, ஒரு நாற்கால் பிராணிகளோ, காதல் உணர்வு அரும்புகிறது என்றால், அது அதைப்பற்றி எண்ணி பார்ப்பதில்லை. எண்ணிப் பார்க்க முடிவதில்லை. மனித இனம் மட்டுந்தான் காதல் நினைவு உள்ளத்தில் தோன்றியது என்று எண்ணிப் பார்க்க ஆரம்பிக்கிறது.

இவ்வளவு காலமாக இல்லாமல் மகுடபதியும் இப்போது தானே எண்ணிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறான். எண்ணிப் பார்க்கும் படியாக அவன் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்த உணர்வு இருக்கிறதே! அதற்குப் பெயர்தான் காதல் என்பது போலும்!

நான் யார்? அவள் யார்? எனக்கும் செந்தாமரைக்கும் என்ன தொடர்பு? ஏன் அவளைப் பற்றி இந்தப் பாழும் மனம் அடிக்கடி எண்ணுகிறது? சில நாட்களுக்கு முன் வரையில் ஏறிட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றாத அவள் முகத்தை இப்பொழுது அடிக்கடி பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுவதற்குக் காரணம் என்ன?

நான் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அவள் என்னை வந்து பார்த்தாள். என்னைப் பார்க்கின்ற போது அவள் முகம் எனக்குயிர் பதி கொடுத்தவளின் முகம் போலத் தோற்றமளித்து எங்கள் வீட்டிற்குள் நுழைந்ததும் வேறு எந்த வகையான நினைவும் அற்றவளாய் என் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்று விட்டாள். நண்பன் வரதன் வேறு என் முகத்தையும் அவள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடித்து விட்ட காவலாளியின் பார்வையில் உள்ள கம்பீரம் போல், வரதன் முகத்தில் ஒரு கம்பீரம் இருந்ததை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. செந்தாமரை உணர்ந்திருக்க மாட்டாள்! என்றே எண்ணுகிறேன். உணர்ந்திருந்தால் அவள் பார்வையை வேறு பக்கம் திருப்பியிருப்பாள் அல்லவா? செந்தாமரையின் பார்வையில்தான் எவ்வளவு பரிவு கலந்திருக்கிறது?

எங்கள் இருவரின் விதி விளையாடல்களைப்பற்றி நண்பன் வரதன் என்னவெல்லாம் எண்ணிக் கொண்டானோ? அவன் எங்கே விளையாட்டாக ஏதாவது பேசி செந்தாமரையின் மனத்தைப் புண்படுத்தி விடுகின்றானோ என்று நான் சந்தேகப் பட்டுக் கொண்டே இருந்தேன்.

செந்தாமரை! அவள் யார்? நான் யார்? ஒரே அலுவலகத்தில் இருவரும் வேலை பார்க்கிறோம் என்பதைத் தவிர எனக்கும் அவளுக்கும் எந்த வகையான பற்றுபாசமோ, உறவு முறையோ, ஏற்படுவதற்கு வழியே இல்லை. அவள் பார்வைக்கு மனிதனை மயக்கும் காந்த சக்தி இருக்கும் என்று நான் இது வரையில் எண்ணிப் பார்த்தது கூட இல்லை.

"காதல் கதையை முதன் முதலாக எடுத்துச் சொல்லும் தூதுவர்கள் கண்கள் தான்" என்பது எவ்வளவு பொருத்தமானது.

"ஒரு கன்னியின் கண்கள் நமக்குக் கொடுக்கும் பாடங்களை நாம், உலகத்திலுள்ள வேறு எந்த ஆசிரியர்களிடமும் கற்றுக் கொள்ள முடியாது. மனிதனின் புத்தகசாலை பெண்களின் கண்கள் தான், வாழ்வின் கலைக் கூடம் அந்த இரு வட்டங்கள் தான்" என்ற இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் இந்த வாசகங்களை, செந்தாமரையை நேருக்கு நேர் பார்க்காத வரையில் பைத்தியக் காரத்தனமான முடிவு என்று நான் எண்ணியதுண்டு.

ஆனால்!...

ஷேக்ஸ்பியர் மனித உள்ளங்களை ஊடுருவிப் பார்த்து உள்ளிருக்கும் அமைப்பு முறைகளைக் கண்டுணர்ந்து, மனித இனத்தின் பருவகாலத்தில், அவர்களது இதயம் இயங்கும் தன்மைகளை ஆராய்ந்து பார்த்தும், பார்த்தபின் இந்த முடிவுக்கு வந்திருப்பார் என்றே எண்ண வேண்டியவனாக இருக்கிறேன்.

ஷேக்ஸ்பியர் கூறியது போலத்தானே உண்மை நிலையும் அமைந்துள்ளதாக இருக்கிறது. பெண் வாடையே வீசக் கூடாது என்று எண்ணியிருந்த நான் செந்தாமரையின் ஓரக்குளிர் பார்வை தானே, எனக்கு ஆயிரக்கணக்கான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக, கலைக் கூடமாக, நூல் நிலையமாகத்தானே அமைந்திருக்கிறது!

அவள் விழியால் என்னைப்பார்த்து கேட்ட கேள்விக்குப் பதில், மொழியால் தரமுடியாமல் தானே நானும் ஊமை போல் அவள் முகத்தைப் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இன்று எவ்வளவு துணிச்சலோடு அவளைப் பார்க்கிறேன். இந்தத் துணிச்சலுக்குக் காரணம் செந்தாமரையின் பார்வையில் பட்டுத் தெறித்த அன்புதானே அடிப்படைக் காரணமாக இருக்க வேண்டும்? அந்த அன்புக்குத்தான் முன்னோர்கள் காதல் என்று பெயர் சூடி மகிழ்ந்திருப்பார்கள் போலும்.

பெண், வாயினால் கூறுவதை விட கண்களால் கூறுவதுதான் மிக முக்கியமானது. கற்றுக் கொள்ள மிகவும் கஷ்டமான கலை அது. அந்தக் கலையின் கருப் பொருளுக்குத்தான் கண்ணியமான

முறையில் காதல் என்று பெயரைச் சூட்டியிருக்க வேண்டும் இந்த உலகத்திலுள்ள அறிவாளிகள்?

காதல் என்பது அழகைக் கடந்தது. அதாவது அழகுக்காக மட்டும் ஏற்பட்டதல்ல! சாதி சமயங்களைக் கடந்த, புனிதமான, தெய்வீகத் தன்மையுடையது! மென்மையானது! நவினமானது! இனிமையானது!

இவ்வளவு சிறப்புள்ள காதல் வாழ்வையா நான் இதுவரையில் வேண்டாமென்று வெறுத்தொதுக்கி வந்தேன்? எண்ணிப் பார்த்தால் என் செய்கைக்காக நானே வெட்கப்பட வேண்டியவனாக இருக்கிறேன்.

"எவளையும் காதலிக்காமல் இருப்பதை விட, ஒருத்தியைக் காதலித்து இழப்பது மேலானது. உயர்வானது சிறப்பானது" என்ற ஆங்கிலக் கவிஞன் டெனிசனின் கவிதையை ஆயிரம் முறைப் படித்திருக்கிறேன். ஆனால், அந்த கவியின் நயமோ, கருத்தோ, செந்தாமரையுடன் பழகும் வரையில் என் உள்ளத்தைத் தொட முடியவில்லை. ஆனால் செந்தாமரையின் சுட்டு விழிச் சுடரொளி என்னுள்ளத்தை ஒரே விநாடியில் ஆகர்ஷித்துக் கொண்டது.

உள்ளம் தன் பூரண வளர்ச்சி நிலையை அடைவதற்குக் காதல் தேவை! ஒன்றை மற்றொன்று பூரணமாக்குவதற்குக் காதல் அவசியம் தேவை!

செந்தாமரையைக் காண்பதற்கு முன் நான் வாழ்ந்த வாழ்க்கை வேறு! அவளைக் கண்டு, அவளுடன் உள்ளம் ஒன்றுபடப் பழகிய நான் வாழ்கின்ற வாழ்க்கை வேறு! இரண்டுக்குமிடையில் ஈடு கட்ட முடியாத அளவு இடைவெளியும், மேடு பள்ளமும் இருப்பதை என்னால் நன்றாக உணர முடிகிறது.

முன்னது பாலைவனத்தில் பயணம் செய்வதைப் போன்றதாக இருந்தது. பின்னது குளிர் நீரோடையில் குளித்து மகிழ்வதைப் போன்றதாகத் தோன்றுகிறது.

தனி மனிதனாக நான் வாழ்ந்த போது காணாத இன்பத்தை, தளிர்க் கொடியாள் செந்தாமரையின் நட்பு எனக்குத் தேடிக் கொடுத்தது என்றுதான் சொல்ல வேண்டும் எங்கள் இருவரையும் இந்த அலுவலகத்திலுள்ள மற்றவர்கள் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள் என்பது எனக்கும் நன்றாகப் புரிகிறது அவர்கள் பார்வையில் கேலியும் குறும்புத்தனமும் கலந்திருக்கிறது என்பதும் தெரியாமல் இல்லை.

இவர்களின் பார்வை நம்மை என்ன செய்து விடும் என்று ஒரு வகையான முரட்டுத் தைரியமும் என்னிடம் வளர்ந்து கொண்

டேதான் இருக்கிறது. நான் எவ்வளவு தைரியமாக இருந்தாலும் ஒரு சில வேளையில் உள்ளம் ஒரு வகையான கலக்கத்தையும் அடையாமல் இல்லை. இவர்கள் பார்வையால் செந்தாமரைக்கு ஏதும் இன்னல் ஏற்படுமோ, என்ற அச்சமும் தோன்றி, தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால், எனக்கு மட்டும் ஒரே ஒரு நம்பிக்கை இருக்கிறது எங்கள் இருவருக்குமிடையிலுள்ள காதலர்கள் என்ற உறவு நிலை மாறி, தம்பதிகள் என்ற நிலை வளர்ந்து விட்டால், அலுவலகத்தில் இருப்பவர்களால் மட்டுமல்ல, அகில உலகத்திலிருப்பவர்களால் தான் என்ன செய்து விட முடியும்? விரைவில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். திருமணம் என்ற சம்பிரதாயச் சடங்கு நடந்தேறி விட்டால் பிறகு எதைப் பற்றியுமே கவலைப்பட வேண்டியதில்லை. எங்களைப் பற்றி இந்த அலுவலகத்திலுள்ளவர்களுக்கு ஏன் அவ்வளவு அக்கறை? எங்களையே உற்றுப் பார்க்கிறார்கள்.

“காதலர்கள் உலகத்தை இரண்டு கண்களால்தான் பார்க்கிறார்கள். ஆனால் உலகமோ தன்னிடமுள்ள அத்தனை கண்களாலும் அவர்களைப் பார்க்க முனைகிறது..”

அம்மாவிடம் சொல்லிவிட்டு விரைவில் திருமணத்தை முடித்து விட வேண்டும்.

எப்படி அம்மாவிடம் சொல்வது?

நேற்று வரையில் திருமணம் வேண்டாம் என்றல்லவா சொல்லிக்கொண்டிருந்தேன். இன்று திடீரென்று நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றால் அம்மா என்ன நினைப்பார்கள். நினைப்பதற்கு என்ன இருக்கிறது? நான் சொல்வதைக் கேட்டு அந்தத் தாயுள்ளம் ஆனந்தக் கூத்து ஆடாமலா இருக்கும்? எப்படி அம்மாவிடம் சொல்வது என்றுதான் புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

எவ்வளவுதான் ஆண்மையும் வீரமும் உள்ள உரமும் கொண்டிருந்தாலும், நான் இந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன். அவளையே மணம் முடித்துக் கொள்ளப் போகிறேன். என்று எப்படிப் பிறரிடம் சொல்வது? சொல்ல வேண்டும் என்று எண்ணியதுமே ஒரு வகையான கோழைத்தனம் உள்ளத்தில் குடி புகுந்து கொள்கிறதே.

“ஒரு பக்குவமான நிலையை அடைய வேண்டுமானாலும் மனிதன் எத்தனை சோதனைகளையும், நெருக்கடிகளையும் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது?”

எவ்வளவுதான் துணிச்சல் உள்ளவனாக இருந்தாலும் காதல் விவகாரம் இதயத்தைத் தொட்டதும் அவன் கோழையாகி விடுகிறான். காதல் அவனைக் கோழையாக்கி விடுகிறது!

இன்று எப்படியும் வரதனிடம், எனக்கும் செந்தாமரைக்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் கூறிவிட வேண்டும். அம்மாவைப் போலவே அவனும், நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்ற செய்தியைக் கேட்டு ஆனந்தப் படுவான். வரதனை நான் நண்பனாகப் பெற்றது பெருமைக்குரியதாகும். வரதனிடம் நல்ல உள்ளம் இருக்கிறது. அவன் குணத்திற்கேற்றபடியே நல்ல மனைவியும் அவனுக்குக் கிடைத்திருப்பது போற்றுதற்குரியதல்லவா?

வரதன் மனித உள்ளங்களின் நிலையை, அதன் அதீத ரகசியங்களை நன்கு அறிந்துள்ளவனாக இருக்கிறான். நான் திருமணம் செய்து கொண்டு மற்றவர்களைப் போல் இவ்வாழ்வில் ஈடுபட வேண்டும் என்பதில்தான் அவனுக்கு எவ்வளவு அக்கறை! நான் திருமணம் செய்து கொள்ள இசைந்து விட்டேன் என்பதைக் கேள்விப் பட்டதுமே அவன் நெஞ்சம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கும்.

என்னை விட அம்மாவிடம், நான் செந்தாமரையை மணந்து கொள்ளும் உத்தேசத்திலிருப்பதை அவன் பக்குவமாக எடுத்துரைப்பான். அம்மாவிற்கோ, தன் அருமை மகனுக்கு எப்படியாவது திருமணம் நடந்து விட்டால் போதும் என்ற ஆசைக்கோ குறைவில்லை. செந்தாமரையை அம்மா பார்த்தது ஒரு வகையில் நன்மையாகப் போயிற்று!''

இப்படி மனப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த மகுடபதிக்கு நேரம் போனதே தெரியவில்லை. மாலை மணி ஐந்தாகியது. அலுவலகம் முடிந்து, ஒவ்வொருவராக வெளியேறினர். " அது வரையில் எண்ணத்துடன் போராடி, இன்பக் கனவு கண்டு கொண்டிருந்த மகுடபதியும் உணர்வு பெற்று, தன் மேஜைமீது குவிந்து கிடந்த காகிதங்களை அவசர அவசரமாக அள்ளி டிராயருக்குள் திணித்து, அதைப்பூட்டி விட்டு வேகமாக வெளியேறினான்.

அவன் சென்ற சிறிது நேரத்தில் செந்தாமரையும் அலுவலகத்தை விட்டு வெளியேறினாள். அவளுக்காக வழியில் நின்று வரும் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்த மகுடபதி, அவளைக் கண்டதும் புன்னகை பூத்தான். அவளும் சிரித்தாள்.

சில நாட்களாகவே இருவரும் அந்த இடத்தில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மாலை அலுவலகம் முடிந்ததும் அவர்களை இணைப்பதும் காலையில் அலுவலகத்திற்குள் புகுவதற்காக அவர்களைப் பிரிப்பதும் அந்த இடத்தின் வாடிக்கையாகி

விட்டிருந்தது. அந்த இடம் காலையிலும் மாலையிலும் அவர்களுடைய சிரிப்பொலியைக் கேட்பது வழக்கமாகக் கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணிக்கு அந்த இடத்தில் ஆரம்பமாகும் அவர்களது சந்திப்பு, சிரிப்பாக வளர்ந்து, சிந்தை மகிழ்வில் நிழல் பரப்பிடும் காதல் மரமாகக் காட்சி தந்து, இரவு ஏழுமணி வரையில் அவர்கள் இருவரையும் இணைத்து வைத்து வேடிக்கை பார்க்கும்.

மணிப்பொறி ஆறடித்து ஓய்வதற்குள் வீட்டிற்குள் சென்று பதுங்கிக் கொள்ளுகின்ற செந்தாமரை இப்பொழுதெல்லாம் இரவு எட்டு மணிக்கு முன் வீட்டுப் பக்கம் போவதே இல்லை. சில நாட்களில் இரவு ஒன்பதுமணி, பத்துமணிகூட ஆகிவிடும்.

இரண்டு இளம் உள்ளங்கள் இணைந்து அமர்ந்து இன்பக் கதை பேச ஆரம்பித்து விட்டால் நேரத்தைப் பற்றிய நினைவு தோன்றுமா?

மகுடபதி இத்தனை நாட்களாக செந்தாமரையுடன் பழகுகிறான். இருவரும் இணைந்து இன்ப கீதம் இசைத்த வண்ணம் இரண்டு மூன்று மணி நேரங்களைக் கழிக்கின்றனர். ஆனால், அவனைப்பற்றி அவளோ, அவளைப்பற்றி அவனோ அறிந்து கொள்ளவே இல்லை. செந்தாமரையைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும் என்று, அவள் அருகில் இல்லாதபோது மகுடபதி எண்ணுவான். ஆனால், அவளைக் கண்டவுடன் செந்தாமரையின் முத்துப்பல் வரிசை மோகனச் சிரிப்பைக் கண்டதும் அவளைப் பற்றிக் கேட்டறிய வேண்டும் என்ற நினைவையே மறந்து விடுவான். செந்தாமரையுடன் அவன் கூடி இருக்கும் நேரங்களில் வாழ்க்கைக் கடலில் உல்லாசப் படகேறி ஆனந்தப் பண்பாடி, அழகு வனி வருவது போன்ற உணர்ச்சிதான் அவன் மயங்கிக் கிடப்பான். அந்த இன்ப வேளையில் அவளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற நினைவு எப்படித் தோன்றும்?

விழிக்கு விருந்தும் செவிக்கு இன்பமும் சேர்த்தளிக்கின்ற சித்திரப் பொற்பாவையுடன் சேர்ந்து மகிழ்ந்திருக்கும் இன்ப நேரத்தில், அவளின் பிறப்பு வளர்ப்புப் பற்றிக் கேட்டறியவா நினைவு வரும்? பலாச்சுளை தின்னக் கிடைத்துள்ளபோது வேப்பெண்ணெயைப் பற்றி நினைவு வருமா?

“பெண்ணின் வரலாறும் கொடுமையின் வரலாறும் ஒரே சமயத்தில் பிறந்தவை” என்றெண்ணி மகுடபதி அவளைப்பற்றி அறிந்து கொள்ளாமல் இருந்து விட்டானோ என்னவோ?

அவனில்லாத வேளைகளில் அவளும் அவனைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவது உண்டு. ஆனால்,

அவனை நேரில் கண்டவுடன் பெண்களுக்குரிய நாணம் வகைப் படையும், நாணமும் அவள் நாவை அடக்கிவிடும்.

அலுவலகத்திலிருந்து கிளம்பும்போது இன்று செந்தாமரை யிடம் கேட்டு, எப்படியும் அவளுடைய வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவோடுதான் கிளம்பினான் மகுடபதி. ஆனால் அவளைக் கண்டதும் அந்த நினைப்பு எங்கே சென்று மறைந்துக் கொண்டது என்றே புரியவில்லை. அது மட் டுமா? தண்டபாணி வரதனிடம் தான் செந்தாமரையை மனம் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லவேண்டும் என்று எண்ணியி ருந்ததையும் அல்லவா மறந்துவிட்டான்!

பெண்களின் சிரிப்பும் பேச்சும் ஆண்களைப் பேச விடாதபடி தடுத்து ஊமையாக்கி விடுகிறது என்பது எவ்வளவு உண்மையா னது. செந்தாமரை அவனைக் கண்டதும் சிரித்தாள். மகுடபதி சிந்தை மகிழ்ந்தான், அதுவரையில் அவன் சிந்தனையில் தேங்கிக் கிடந்த அத்தனை உணர்வுகளும்-இருந்த இடம் தெரியாமல் அல் லவா மறைந்து கொண்டுவிட்டது!

"காதலில் கனவுகள் சதாகாலமிலைக்கும். கனவுகள் காண்கி றாயிகள் உச்சக் கட்டத்தை அடையும்போது வேறு எந்த நினைவுக ளும் அந்தக் கனவுலயிப்பில் குறுக்கிடாது!"

செந்தாமரையும் மகுடபதியும் சேர்ந்தாற்போல் நடந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் நடையில் ஒரு வகையான துள்ளல் காணப் பட் டது. துடிக்கும் இளம் உள்ளங்கள் இரண்டும் இன்பக்கதை பேசிக் கொண்டு உலகத்தை மறந்து நடந்து கொண்டிருந்தது,

அவர்கள் இருவரையும் நடைபாதையில் நின்று கொண்டிருந் தவர்களின் கண்கள் நோக்காமல் இல்லை. ஆனால், அவர்கள் யாரைப்பற்றியும் கவலைப்படாமல் நடந்து கொண்டேயிருந்தனர். தங்குதடையின்றி நிற்காமல் நடந்து கொண்டிருந்தனர்,

காதலர் இருவர் கருத்தொருமித்த பின், அவர்களின் கவனம் தங்களைச் சுற்றியிருப்பவர்களைப் பற்றியதாகவா அமைந்திருக் கும்? கற்பனை வானில் உல்லாசமாகச்சிறகடித்துப் பறக்கும் வானம் பாடியாக அல்லவா மாறிவிடுவார்கள்?

சிரித்து மகிழ்ந்து சிங்கார நடை நடந்தனர். பேடைக்கு மாடப்புறு பேச்சைப் பழகிக் கொடுப்பதைப்போல் அவன் அவளு டன் ஆனந்தமாகப் பேசிக் கொண்டே நடந்தான். அவன் அரு கில் இருப்பதால் அவள் இந்த உலகத்தையே மறந்து கனவுலகில் சஞ்சரிப்பவளைப்போல் அவனுடன் ஒட்டி உறவாடிக் கொண்டே நடந்தாள்.

நடந்து கொண்டே இருந்த அவர்கள், தங்கள் பார்வையில் பட்ட சிற்றுண்டிச் சாலை ஒன்றினுள் நுழைந்தனர். தனியறையில் நுழைந்து, இருக்கையில் அமர்ந்ததும், "என்ன சாப்பிடுகிறாய்?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான். "உங்களுக்குப் பிடித்தது எதுவோ அதுவே எனக்கும்" என்று அவள் மொழியாலே—இல்லை விழியாலே—பதில் சொன்னாள். அவள் பார்வை கூறிய பரிபாஷைப்படியே அவனும் தனக்குப் பிடித்தமான சிற்றுண்டிகளையே கொண்டு வரச் சொன்னான்.

சாப்பிட்டுவிட்டு, வெளியே வரும்போது பில்லில் கண்ட தொகையை, அவன் செந்தாமரையுடன் பழகுவதற்கு முன் கண்டிருந்தானால் நிச்சயம் சிந்தை கலங்கியிருப்பான். ஆனால், இப்போது சிரித்துக் கொண்டிருந்தான். காரணம் அவன் காதல் தெய்வம் அவன் பக்கம் நின்று சிரித்துக் கொண்டிருந்தது.

செந்தாமரை தன்னருகில் இருப்பதால் அவன் அடைய முடியாத பேரின்பத்தை அடைந்து விட்டவனாகவே காணப்பட்டான்.

செந்தாமரையும் மருடபதி ஆட்டுவித்தபடி ஆடுகின்ற பம்பரம் போலவே காணப்பட்டாள்.

சிற்றுண்டிச் சாலையை விட்டு வெளியேறிய பின்னும் அவர்கள் நடக்க ஆரம்பித்தனர். யார் யாரோ அவர்களை உற்றுப் பார்த்தனர். ஆனால் அவர்கள் யாரையுமே பார்க்கவில்லை. பார்க்க நேரமும் இல்லை. பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. உள்ளத்தால் ஒன்றுபட்டு இன்பவெள்ளத்தில் மிதந்து கொண்டே சென்றனர்.

எங்கு போகிறோம் என்ற குறிக்கோள் இன்றியே அவர்கள் கால்கள் ஓய்ந்துபோகும் வரையில் நடந்து சென்றனர். இரவு எட்டுமணி வரையிலும் இந்த உலகத்தை மறந்து, வேறு ஒரு உலகத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தனர். எட்டுமணிக்கு மேல்தான் பிரிய மனம் இல்லாமல் பிரிந்தனர்.

"அழகு என்பது அதைப் பார்த்து ரசிப்பவனின் கண்களில் மட்டும் இருக்கிறது என்பதில்லை. அழகைப் பார்ப்பவனின் உள்ளத்தினது தன்மைக்கேற்ப அழகின் மௌசும் உயர்கிறது.'

இரண்டாண்டு காலத்திற்கு மேலாக ஒரே அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும் எட்டுமணி நேரம் சந்திக்கின்ற வாய்ப்பு இருந்தும் அப்பொழுதெல்லாம் தென்படாத அழகையல்லவா சில நாட்களாக மருடபதி செந்தாமரையிடம் காண்கிறான். அவளது அழகுத் திருமுகத்தைக் காணாத நேரங்களில் அவன் முகத்தில் வாட்டத்தின் ரேகைகள் படர்ந்திருப்பதைக் காணமுடிகிறதே!

"மனிதன் சிருஷ்டித்த நாகரீகத்தின் கடைசிச் சின்னம் பெண்." என்ற அறிஞனின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்த மகுடபதி, செந்தாமரையுடன் சேர்ந்து பழகத் தொடங்கியதும், உள்ள ஒருமைப்பாடு கொண்டபின், அவளின்றி அவன் இல்லை என்ற நிலை ஏற்பட்டபின் "மனிதன் சிருஷ்டித்த நாகரீகத்தின் ஆரம்பச் சின்னமே பெண்தான்!" என்று கூறுகின்ற அளவுக்கல்லவா மாறிவிட்டான். அன்று அறிஞனின் வார்த்தையை மதித்து நடந்தவன், சிலநாள் செந்தாமரையுடன் பழகியதுமே அதை மிதித்தல்லவா நடக்க ஆரம்பித்து விட்டான்.

வாழ்க்கையின் வசந்தத் தென்றலை செந்தாமரையுடன் சேர்ந்திருந்தால்தான் அனுபவிக்க முடியும் என்ற நிலைக்கு உள்ளாகி இருந்தான் மகுடபதி.

செந்தாமரையை விட்டுப் பிரிந்து, அவன் தன் வீட்டைச் சென்றடையும்போது இரவு மணி ஒன்பதாகி விட்டது.

மகுடபதியின் தாயாருடன் வரதன் பேசிக்கொண்டிருந்தான். வரதன் பேசுவது தன்னைப்பற்றித்தானோ என்று மகுடபதியின் மனம் எண்ணியது.

## 7

"இந்த உலகத்தில் வாழ்கின்ற மனித இனங்களில் ஆணாக இருந்தாலும் சரி, அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி, எவ்வளவுதான் நேர்மை ஒழுக்கம், மனசாட்சி, ஆகியவைகளைப் பின்பற்றி நடந்து கொண்டாலும் 'ஒழுக்க சீலர்கள் என்று அவர்களை இந்த உலகம் போற்றினாலும் சமயம் கிடைக்கின்றபோது, அவர்களைப் பழிக்காமல் விடுவதில்லை."

"மனித இனமே மனிதர்களை இழித்தும் பழித்தும் பேசி படுகுழியில் தள்ளிவிடுகின்றது. 'அந்தப் பாதகத்தைச் செய்வதற்கென்றே சிலர், தயாராகக் காத்து இருக்கின்றனர். மற்றவர்களுக்கு இன்னல் விளைவித்து அவர்கள் படும் தொல்லையைக் கண்டு ஆனந்தப் படுவதில் அற்ப ஆசையுடையவர்களாகவே இருக்கின்றனர். அந்த நல்லவர்களையும் இந்த உலகம் வாழவைத்துக் கொண்டுதான் இருக்கிறது."

எவ்வளவுதான் நாகரீகப் பாதையில் மனித இனம் கம்பீர நடை போட்டாலும், இதுபோன்ற பிற்போக்கான எண்ணங்களுக்கு இன்னமும் இடங்கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது.

நாகரீகம் வளர்வது போலவே நச்சு நினைப்பும் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. நல்ல நடத்தை, நல்லொழுக்கம், கண்ணியம் கட்டுப்பாடு என்பதெல்லாம் இந்த உலகத்தில் இன்னமும் ஏட்டளவில்தான் இருக்கிறது.

செந்தாமரையைச் சிறைப் பிடித்து தங்கள் இதயக் குகையில் அடைத்து வைத்துக் கொள்ளலாம் என்று இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தவர்களை ஏமாற்றி விட்டு மகுடபதி இதயத் தடாகத்தில் மலர்கின்ற தாமரையாகி விட்டது செந்தாமரையின் உள்ளம்.

அவளை அடைய வேண்டும் என்று ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தவர்களுக்கு அது, எதிர்பாராத ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதன் பலன்?

அதுவரையில் அமைதியாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கைப் பாதையிலே புதியதொரு மாற்றத்தைப் புகுத்தியது. அந்த அலுவலகத்தின் பெரும்பாலான இடம் செந்தாமரையைப் பற்றியே பேசத் தலைப்பட்டது.

ஏமாற்றத்தால் தாக்குண்டவர்கள் அவளைப்பற்றிப் புதுப்புது கதைகள் கட்டிப் பேசத் தொடங்கினர். அலுவலகத்திலேயே அவளைக்கண்டால் ஒருவகையான கேலிச் சிரிப்புத் தோன்ற ஆரம்பித்தது. வேலைகளை அவள் சரிவரக் கவனிப்பதில்லை என்று வேண்டுமென்றே குற்றம் சாட்டப்பட்டது. இந்தத் திருவிளையாடல்களையெல்லாம் மொத்தக் கண்ணாடிக்குள் தன் கண்களை மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் தலைமை எழுத்தரின் கண்களைக் கவனிக்காமல் இல்லை. எல்லாவற்றையும் பார்த்து இதற்கொரு முடிவு தானாகவே ஏற்படட்டும் என்று காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

மலர்ந்தது, தேனைத் தன்னகத்தில் நிறைத்து வைத்துக் கொண்டிருக்கும் மலர், வண்டுக்கு வாழ்த்துக் கூறி வரவேற்பதில்லை. தேன் நிறைந்த மலரைச் சுற்றி வண்டுகள் வட்டமிடுவது இயல்பானது.

பூத்துக் குலுங்கிப் பொலிவுடன் விளங்கிய செந்தாமரையை அடைய வேண்டுமென்று அலுவலகத்திலேயே பணிபுரிந்து கொண்டிருந்த வாலிபர்களில் பலர், செந்தாமரையையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். ஆனால், செந்தாமரையோ தன்னைப்பற்றி எண்ணிக் கூடப் பார்க்காத மகுடபதியின் மீது மையல் கொண்டாள். அவளுக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்த வாலிபர்கள், செந்தாமரையின் போக்கைக் கண்டு தங்கள் வாழ்வே இருண்டு விட்டதாகக் கருதினர்.

""பொதுவாக இன்றைய வாலிபர்களும், யுவதிகளும் காதலின் பெயரால் பெருத்த ஏமாற்றம் அடைகின்றனர். அந்த ஏமாற்றத்திற்குக் காரணம் தாங்கள் ஒருவரைக் காதலித்து, அது போலவே தங்களால் காதலிக்கப் பட்டவர்களும், தங்களைக் காதலிக்கிறார்களா? என்று எண்ணிப் பார்க்காமல், தங்கள் உள்ளத்தில் முளைக்கத் தொடங்கிய காதல் செடியை வளர்த்துக் கொள்கிறார்கள். இந்த ஒருதலைக் காதல் ஏமாற்றம் வளர்வதற்கு முக்கிய காரணமாக அமைந்து விடுகிறது. அந்த ஏமாற்றத்தின் எதிரொலி வாழ்க்கையே இருண்டு விட்டதாக எண்ணத் தூண்டுகிறது.''

""வாழ்க்கை, மண்ணில் பிறந்தவர்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பமாகும். இளமைப் பருவம் வாழ்க்கையின் இறுதிவரையில் எண்ணிப் பார்த்து மகிழ வேண்டிய ஒரு இன்பத் திருவிளையாடலாகும். இளமை, வாழ்வின் கனவுப் பகுதி! இயற்கை மனித இனத்திற்கு அளித்த வரப்பிரசாதம்தான் இளமைப் பருவம்!''

அப்படிப்பட்ட இளமைப் பருவத்தை ஒருதலைக் காதலில் சிக்க வைத்துக்கொண்டு, ஏமாற்றத்தை அணைத்துக் கொள்வதால் என்ன பயன்? தான் காதலிக்க ஆரம்பிக்கின்றபோது, தன்னால் காதலிக்கப்பட்டவர்களும் தன்னைக் காதலிக்கிறார்களா என்று உணர்ந்து கொள்ள வேண்டாமா?

செந்தாமரையைக் காதலித்த அந்த அலுவலகத்திலுள்ள இளைஞர்கள் இதைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காமல்தான் ஏமாற்றமடைந்தனர்.

ஒரு சிலர் ஏமாற்றத்தின் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து எப்படியோ சமாளித்துக் கொள்கின்றனர். பலரால் அப்படி இருக்க முடிவதில்லை.

செந்தாமரையால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் தாக்குதலைச் சமாளிக்க அவளைப் பழி வாங்க வேண்டுமென்று சிலர் கருதினர். அந்தச் சிலரில் முரளியும் ஒருவன். முரளி செந்தாமரையைக் காணத் தலைப்பட்ட நாள் முதலாக, அவளைத் தன் காதலியாகவே பாவித்து, மானசீகமாக காதலித்துக் கொண்டிருந்தான். செந்தாமரை மகுடபதிக்கு மனதைப் பறி கொடுக்க ஆரம்பித்த பின்னர் சிச்சி இந்தப் பழம் புளிக்கும் என்று கூறி விட்டோடுகின்ற நரியின் நிலைக்கு ஒப்பானவர்களாகி விட்டனர்,

மகன் இறந்தாலும் கவலையில்லை. மருமகளின் கொட்டம் அடங்க வேண்டும் என்று எண்ணுகின்ற மாமியாரைப் போலாகி விட்டான் முரளி. தன்னைப் போலவே மகுடபதியும் ஏமாற்றம்

அடைய வேண்டுமென அவன் உள்ளம் ஆசைப்பட்டது. மகுடபதியால்தான் செந்தாமரை தன்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவன் எண்ணினான்.

தன்னைத் தவிக்கவிட்ட செந்தாமரையும் தன்னைப் போலவே காதலில் ஏமாற்றமடைந்து, துயர வெள்ளத்தில் சிக்கித் தத்தளிக்க வேண்டும் என்று முரளி ஆசைப்பட்டான். அவளுக்கு எந்த வகையில் இன்னல் உண்டாக்கலாம் என்று எண்ணிப் பார்த்து, முடிவாக அவள் வீட்டாரிடம் கூறி, அவளைப் பழிக்குப் பழி வாங்குகின்ற முடிவுக்கு வந்தான்.

ஒரு நாள் செந்தாமரை வீட்டுக்குச் செல்லும்போது, அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின்தொடர்ந்தான் முரளி. அவன் உள்ளம் ஏமாற்றத்தால் குமுறிக் கொண்டிருந்தது. செந்தாமரை துன்பத்தில் சிக்கித் தூண்டிற் புழுவாய்த் துடிப்பதைக் கண்டால்தான் முரளியின் உள்ளத்திற்கு ஆறுதல் கிடைக்கும்போல் இருந்தது.

தன் போக்கால் ஏமாற்றமடைந்த உருவமொன்று தன்னைப் பின்தொடர்ந்து வருகிறது என்பதை செந்தாமரை உணரவில்லை. கள்ளங் கபடமற்ற செந்தாமரையின் வெள்ளையுள்ளம் தன்னைப் பின்தொடர்ந்து வரும் ஆபத்தை உணராமல் காதல் நினைவுகளில் மூழ்கி, களிப்படைந்து கொண்டிருந்தது.

காதல் தெய்வீகத் தன்மையுள்ளது என்கிறீர்களே, அது எத்தனைக் கெத்தனை உண்மை? காதல் என்பது, பக்தன் கடவுள் மேல் அன்பு செலுத்துவதைப் போலத்தானே? எந்தப் பக்தனாவது தன்னைத் தவிர வேறு எவரும் தெய்வீகத்தின் மீது அன்பு செலுத்தக் கூடாது என்று கூறுகின்றானா? ஆண்டவனை வழிபடும் உரிமை தன்னைத் தவிர மற்றவர்களுக்கு இருக்கக் கூடாதென்று நினைக்கின்றானா? தன்னால் வழிபட்ட தெய்வம் இன்னொரு பக்தனுக்கு அருள் புரிந்து விட்டது என்று ஆத்திரங்கொள்கின்றானா? அந்தத் தெய்வத்தை இனிமேல் மனதாலும் நினைக்கமாட்டேன் என்று உறுதியெடுத்துக் கொள்கின்றானா? தனக்குக் கருணை காட்டாமல் வேறொருவனுக்குக் கருணை காட்டி விட்டது என்று தெய்வத்தை நிந்திக்கத்தான் செய்கின்றானா? என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று என்றுதான் பக்தன் கடவுளிடம் முறையிட்டுக் கொள்வானே தவிர, வேறொருவனுக்கு அருள்புரியக் கூடாதென்று எந்தப் பக்தனும் கூறமாட்டான். காதல் விஷயத்தில் இந்தக் கடவுள் தத்துவமெல்லாம் சுத்த அபத்தமானது. பொருத்தமில்லாக் கட்டுக் கதையைப் போன்றதே யாகும்.

காதல் தெய்வீகமானது என்றால் செந்தாமரையின் காதல் உள்ளம் மகுடபதியை நாடுகிறது என்று அறிந்ததும் முரளியின் மனம் அவர்களின் காதல் கல்யாணமும் மேலும் வளர்ந்து சிறக்க

வேண்டும் என்றல்லவா ஆசைப்பட்டிருக்க வேண்டும்? அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து இணைந்து நின்று அவர்களால் ஏற்றி வைக்கப்படும் "குடும்ப விளக்கு" சுடர்விட்டு எரிவதற்கு வழி வகையல்லவா செய்திருக்கவேண்டும்? தன் காதல் தெய்வ மாகிய செந்தாமரையின் வாழ்வின் மலர்ச்சி கண்டு அவன் உள் ளம் இன்பக் கூத்தல்லவா ஆடியிருக்க வேண்டும். வாழ்க தம்ப திகள் என அவர்களை வாழ்த்தி 'இன்பத் திருமணம்' செய்து கொண்டவர்களுக்குக் 'கல்யாணப் பரிசு' வழங்க அல்லவா விரும் பியிருக்க வேண்டும்?

இவ்வளவும் செய்யாமல் அவர்களுக்கு இன்னல் விளைவிக்க நினைப்பதற்காக செந்தாமரையைப் பின்தொடர்கின்ற உள் ளத்தை, அதில் செடியாகி, கிளையாகி, மரமாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியாகிப் பழுத்திருக்கின்ற காதலை எப்ப டித் தெய்வீகத் தன்மையுள்ளது என்று கூறமுடியும்?

"நல்லது கெட்டது என்று பிரித்தெடுக்கும் அறிவோடுதான் மனித வாழ்வு படைக்கப்பட்டிருக்கின்றது. இயற்கையளிக்கின்ற இன்னலிலிருந்து; தன்னைக் காத்துக் கொண்டு பிறரையும் காப்பது தான் வாழ்வு."

செந்தாமரை வீட்டிற்குள் நுழையும் வரையில் அவளை அறி யாமல் அவளைப் பின்தொடர்ந்த முரளி, அவள் வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அங்கிருந்து சென்றான்.

"இயற்கையின் படைப்பில் இன்பம் என்ற சொல்லுக்கு அற்ப ஆயுள்தான் போலும்." செந்தாமரையுடன் சேர்ந்து வாழ லாம் என்று எண்ணி இறுமாந்து கொண்டிருந்த முரளியின் இன் பம், அற்ப ஆயுளுடன்தானே தன் பிறப்பை முடித்துக் கொண் டது? தன் இதயத்தில் பிறந்த இன்பம் என்ற குழந்தையின் உயி ரைப் பறிக்கும் எமனாகத்தானே மகுடபதி தன் வாழ்வில் வந்து புகுந்தான்?

முரளியின் நெஞ்சம் வேதனையின் தாக்குதலால் இப்படியெல் லாம் எண்ணி வருந்தியது.

நடந்து கொண்டிருந்த முரளியின் கால்கள் சிறிது தடைப் பட்டு நின்றது. திருப்பிச் செந்தாமரையின் வீட்டுப் பக்கமே நடக்கும் படி தன் கால்களுக்குக் கட்டளையிட்டது அவன் அறிவு. நடந்தான். நடந்துகொண்டே இருந்தான். செந்தாமரையின் வீட்டைக் கடந்து பின்னும் நடந்து கொண்டே இருந்தான். அவனது சிந்தனை என்ன செய்வதென்று அவனுக்கோர் முடிவினைக் காட்டாது, குழப்பத்திற்கே அவனை மீண்டும் மீண்டும் இழுத்துக் கொண்டோடியது.

செந்தாமரையின் வீட்டருகில் உள்ள மற்றொரு வீட்டாரிடம், தான் செந்தாமரை வேலை பார்க்கும் அலுவலகத்தில் உள்ளவன் என்று கூறிக் கொண்டு, அவளைப்பற்றிக் கேட்டறிந்தான். தாயற்றவள் என்பதறிந்ததும் அவன் நெஞ்சம் இளகியது. ஆனாலும் தன்னை ஏமாற்றியவளை தான் எப்படியும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற பிடிவாத எண்ணமும் தலைதூக்கி நின்று ஆட்டம் போடாமல் இல்லை. தனக்குத் தேவையானவைகளைக் கேட்டறிந்துகொண்டு அங்கிருந்து திரும்பினான்.

ஃ ஃ ஃ

மறு நாள் மாலையிலும் முரளி செந்தாமரையின் வீட்டுப் பக்கம் உலாவிக் கொண்டிருந்தான். அவன் மனதில் மூண்டெழுந்த ஆத்திரத் தீயின் புகைச்சல் அடங்காமலேயே இருந்தது. எப்படியும் செந்தாமரையைப் பழிக்குப் பழி வாங்கியே தீரவேண்டும் என்ற எண்ணம் தவிர வேறு எந்த வகையான எண்ணமும் அவன் மனதில் இல்லை.

புனுகுப்பூனை தான் அடைபட்டிருக்கும் கூட்டிற்குள் ஓய்வு ஒழிச்சலின்றி சதா சுற்றிக் கொண்டிருப்பதுபோல், முரளி அந்த வீதியில் சுற்றிக் கொண்டிருந்தான். நடந்துநடந்து கால்கள் ஓய்ந்து போகும் நிலையிலும் அவன் நிற்காமல் வைராக்கியமாக நடந்து கொண்டிருந்தான்.

இரவு எட்டு மணிக்கு மேல் செந்தாமரையின் தந்தையை அவன் சந்தித்தான். அவரைக் கண்டதும் அவன் உள்ளம் அச்சத்தால் நடுங்கியது

செந்தாமரை வேலை பார்க்கின்ற அலுவலகத்தில் அவளுடன் தானும் வேலை பார்ப்பதாக பீடிகையுடன் அவரிடம் பேச ஆரம்பித்தான்.

குடிவெறியில் உலகத்தை மறந்து உல்லாசமாக இருந்த செந்தாமரையின் தந்தையும் முரளியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பொறாமை வளர்கின்ற போது மனிதன் இருதயத்தை இழந்தவனாகி விடுகின்றான். இழந்த இருதயத்தை மீண்டும் அடைய முடியாமல், அவன் மனிதத் தன்மையையே இழந்தவனாகி விடுகிறான். மனிதன் தன் மதிப்புடன் நடந்து கொள்ள இருதயம் தேவை. அதை இழந்தவன் இந்த வையகத்தில் வாழத் தகுதியற்றவனாகி விடுகிறான்."

முரளி இருதயத்தை இழந்து விட்டிருந்த காரணத்தால் செந்தாமரையைப் பற்றி அவள் தந்தையிடம் தவறான செய்திகளையெல்லாம் கூறிக் கொண்டிருந்தான்.

மகளின் மானத்தைப் பற்றி மாற்றான் ஒருவன் மட்டமாகப் பேசுவதை. குடிவெறியால் குதித்துக் கொண்டிருந்த அந்தத் தந்தையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

“பிறரால் நன்கு மதிக்கப்பட வேண்டுமானால் மற்றவர்களின் சிறுமைகளை மறைத்துப் பெருமைகளை சீர்தூக்கிப் பரப்பினால் உலகுக்கு நன்மையுண்டாகும்.” என்ற நீதி நெறி விளக்கத்தின் அறிவுரைகளை அறிந்திருந்தால் ஒரு வேளை முரளி, தான் செய்யப் போகும் பாதகத்தைப் பற்றி எண்ணிப் பார்த்திருப்பானோ என்னவோ?

தன்னால், தான் பேசுகின்ற பேச்சால், ஒரு பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படுமே என்ற எண்ணம் தோன்றியிருந்தால், முரளி செந்தாமரையைப் பற்றிப் பேசியே இருக்க மாட்டான்.

“நாகரீகத்தின் ரகசியம் இயற்கையான காரியங்களை இயற்கைக்கு மாறுபட்ட விதமாக மாற்றி விடுவதுதான்” என்று யாரோ ஒருவர் கூறியதை நினைவில் கொண்டுதான், முரளி, செந்தாமரையின் வாழ்வில் புகுந்து விளையாடத் துணிந்திருக்க வேண்டும்.

“அலுவலகத்தில் வேலை செய்கின்ற மகுடபதி என்பவனுடன் சேர்ந்து கொண்டு செந்தாமரை நடந்து கொள்கின்ற முறை, இருக்கிறதே, அது மிக மிக மோசமானதாகும்.

அவர்கள் இருவரையும் கண்டு அலுவலகத்திலுள்ள அனைவரும் கை கொட்டிச் சிரிக்கின்றனர், அலுவலகம் என்ற நினைவே அவர்களுக்கு இருப்பதில்லை. சதா சர்வ காலமும் சிரிப்பும் கேலியுமாகத்தான் இருக்கிறது.

ஒரு பெண் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையே மறந்து செந்தாமரை நடந்து கொள்கிறாள். அவள் போக்கைப் பார்த்தால் அவளின் உத்தியோகத்திற்கே கூட ஆபத்து நேர்ந்து விடலாம் போலத் தெரிகிறது. வேலைகளைக்கூட சரிவரக் கவனிப்பதில்லை. மகுடபதியுடனேயே மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருக்கிறாள். அதுவே கலையாகவும், தொழிலாகவும் கொண்டவளாகக் காணப்படுகிறாள்.

என்னதான் காதல் விளையாட்டில் ஈடுபட்டாலும் இருக்கும் இடத்தைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இலைமறைவு காய் மறைவாக நடந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பிருக்க வேண்டாமா? அப்படி இருந்திருந்தால் இவர்களைப் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்?

வயது வந்த ஒரு பெண், இந்த உலகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் வேலை செய்யும் இடத்திலுள்ள ஒருவனுடன் கூடிக் கொண்டு சதா சர்வ காலமும் கேலிக் கூத்தாடிக் கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?

“வாழ்க்கை என்பது மனிதப் பிறவியின் ஆசாபாசங்களை உணர்வுகளை வளர்க்கின்ற கருவிகளில் ஒன்றுதான் என்றாலும், ஆசாபாசங்களும் உணர்வுகளும் தலை தூக்கி நிற்கின்ற போது, நாம் கொஞ்சம் எண்ணிப் பார்த்து நடந்து கொள்ளத் தவறி விட்டால் அந்தத் தவறே மனித வாழ்க்கையைக் கெடுத்து விடும்!! என்பதைப் பற்றி நினைத்துப் பார்த்திருந்தால் செந்தாமரை இப்படி நடந்து கொண்டிருக்கவே மாட்டாள்.

“வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற, நம்மோடு வந்து மோதுகின்ற சம்பவங்கள் அனைத்துமே நன்மை பயந்து விடுவதில்லை. தொல்லைகள் நிறைந்த அநேக சம்பவங்களை மனிதன் அடிக்கடி சந்திக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. அந்த தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மனிதன் அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்”

முரளி செந்தாமரையின் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தான். குடிபோதையில் தன்னுணர்வு இழந்து தள்ளாடிக் கொண்டே நின்ற செந்தாமரையின் தந்தை முரளி பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவன் பேச்சு முழுவதையும் கேட்ட பிறகு தன் மகள் மீது எல்லையில்லா கோபம் ஏற்பட்டது அவருக்கு.

“நீ சொல்வதெல்லாம் உண்மையா?” என்று அதிர் வேட்டொலி போல் எழுந்த செந்தாமரையின் தந்தையின் குரலொலி கேட்டு, அருகில் நின்று கொண்டிருந்த முரளி நடு நடுங்கி விட்டான்.

அவன் கேட்ட முறையிலிருந்து, அருகில் நின்ற முரளி, தன்னை ஏதும் செய்து விடுவாரோ என்று நினைக்க வேண்டியிருந்தது.

எவராலும் சாதிக்க முடியாத சாதனையைதான் சாதித்து விட்டதாக எண்ணி இறுமாப்புடன் நின்று கொண்டிருந்தவன் “நீ சொல்வதெல்லாம் உண்மையா”? என்ற சத்தம் காதில் விழுந்தவுடன், இடியோசைக் கேட்ட நாகம் போல் அடங்கி விட்டான்.

மனிதர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதே இந்த இயற்கைக்குள்ள வழக்கமான குணம். அவைகளிலிருந்து மனித இனம் மீளவே முடியாது.

சிறிது நேரத்திற்கு முன் செந்தாமரைக்குத் தொல்லை கொடுத்த இயற்கை, இப்போது முரளிக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்து விட்டது. கண நேரத்தில் அவன் பட்ட பாடு?......

மனிதனைப் பல வழிகளிலும் செல்லும் படியாகத் தூண்டி விட்டு, பல கோணங்களிலும் அவனைத் திருப்பி விடுகின்ற கொடிய நஞ்சு ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறது. அந்த நஞ்சு ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கிறது. அதைப் பெற்றிராத மனிதனே இல்லையென்று உறுதியிட்டுக் கூறலாம். அதன் உண்மைப் பெயர் தான் மனித மனம். மனிதனிடம் அமைந்துள்ள மனம்தான் மனிதனுக்கு நஞ்சாக இருக்கிறது. அதை ஒரே ஒரு மருந்தினைக் கொண்டுதான் [illegible] பரவாமல் தடுக்க முடியும். அந்த அரு மருந்தின் பெயர்தான் 'அறிவு' என்பதாகும்.

"மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறிவு பெற்றவர்களாய்த் திகழ வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் சான்றோர்கள். நோய் உடையவனுக்கு எப்படி மருந்து அவசியமோ அது போல அறிவு மனிதனுக்கு மிகவும் அவசியம். நோயாளியிடம் உள்ள நோய் சில நாளில் குணமாகி விடும், ஆனால், மனம் என்ற நோயாகிய நஞ்சு மட்டும் வாழ்நாள் முழுவதும் மனிதனிடமே தீராமல் இருக்கிறது. ஆகவே வாழ்நாள் முழுவதும் அறிவு என்ற அரு மருந்தினையும் கைக் கொண்டிருக்க வேண்டும்."

செந்தாமரையின் தந்தை குடி வெறியால் தன்னை என்ன செய்வாரோ என்றஞ்சி நடுங்கிய முரளியின் மனதில் ஒரு சில விநாடிகளில் ஆயிரக்கணக்கான எண்ணக் கோடுகள் ஓடி விட்டன. தான் கூறியது அனைத்தும் பொய்யானது என்று தெரிந்து கொண்டாரோ அப்படித்தான் இருக்க வேண்டும்! இல்லையென்றால், "நீ சொல்வதெல்லாம் உண்மையா?" என்று ஏன் கேட்க வேண்டும்? நான் சொன்னது பொய்யானது என்று தெரிந்தவுடன் குடி வெறியால் என்ன செய்வாரோ!

'நான் கூறியது உண்மையானது என்று நம்பினாலும் தன் மகள் மேல் ஏற்பட்ட ஆத்திரத்தால் எதிரில் இருக்கும் தனக்கு என்ன ஆபத்து ஏற்படுமோ? குடிகாரர்களின் குணத்தைப்பற்றி சரியாகப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டு விட்டோமே, வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கிய கதையாகி விட்டதே" என்று எல்லாம் எண்ணியெண்ணி மனம் பதை பதைத்துக் கொண்டிருந்தான்.

"உலகில் நன்மையென்று கருதி நாம் செய்யும் செயல்கள் முடிவில் நமக்கே தூக்குக் கயிறு போல் ஆகி விடுவதும் உண்டு. பெண்களைப் பொருத்த வரையில் இது முற்றிலும் உண்மையாகவே இருக்கிறது."

முரளி தன் மன ஆச்சத்திற்குக் காரணம் கண்டு பிடிக்க முடியாமல் திணறினான்.

கதி கலங்கி நின்று கொண்டிருந்த முரளியை மீண்டும் ஒரு முறை முறைத்துப் பார்த்து விட்டு "சரி நீ போ, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் செந்தாமரையின் தந்தை.

அடைத்து வைக்கப்பட்டிருந்த பறவையை கூட்டைத் திறந்து வெளியே விரட்டினால், அது எவ்வளவு உல்லாசமாகப் பறந்து செல்லுமோ, அது போல, முரளி அந்தக் குடிகாரரிடமிருந்து விடுபட்ட மகிழ்ச்சியால் அந்த இடத்திலிருந்து வேகமாக நடந்து செல்ல ஆரம்பித்தான். எதிர் நோக்கி வந்த ஆபத்தின் பிடியில் சிக்காமல் தப்பி விட்டோம் என்ற மகிழ்ச்சியோடு ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து ஓடினான்.

"மனிதனிடமுள்ள வெறித்தன்மை அடங்குகின்ற போது, அது வரையில் மறைந்து கொண்டிருந்த அறிவொளி வெளித் தெரிய ஆரம்பிக்கிறது."

செந்தாமரையின் தந்தையிடமிருந்து விடுபட்டுச்சென்ற முரளியின் மனம் செந்தாமரையைப் பற்றி எண்ணத் தொடங்கியது. தான் மூட்டிய பொறாமைதீயால் செந்தாமரையின் குடிகாரத் தந்தையால் அவளுடைய மென்மையாகிய வாழ்க்கைக் கொடி வெந்து கருகி விடுமோ என்று வேதனைப் பட்டது.

முரளியின் மனம் வேதனைப்பட்டது போலவேதான் செந்தாமரையின் குடிகாரத் தந்தையின் மனமும், தன் மகளைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல் குமுறிக் கொண்டிருந்தது.

தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தார்—செந்தாமரையின் தந்தை. தன் மகள் தன் பெயருக்கு மாசு ஏற்படுத்தி விட்டதாக மனம் குமுறினார். குடிபோதை அவர் கோபத்திற்கு மேலும் தூபம் போட்டதுபோல் ஆயிற்று. என்றும்போல் குடித்து விட்டு வெளியில் சுற்றிக் கொண்டிருக்காமல் அன்று நேராக வீட்டிற்கு வந்தார்.

வழக்கம் போல் அலுவலகம் முடிந்ததும் மகுடபதியுடன் சேர்ந்து காதல் களிப்புக் கடலிலே மிதந்து விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்து களைப்புடன் அமர்ந்தாள் செந்தாமரை. வழக்கத்திற்கு மாறாக நேரத்துடன் வீட்டுக்கு வந்த தந்தையைக் கண்டதும் அவள் ஆச்சரியப் பட்டாள்.

வீட்டிற்குள் நுழையும்போதே செந்தாமரையின் தந்தையின் கண்கள் இரத்தம்போல் சிவப்பேறியிருந்தது. வீட்டிற்குள் நுழைந்ததும் அவர் தன் மகளை உற்றுப் பார்த்தார். அப்பப்பா, அந்தப் பார்வையில்தான் எவ்வளவு கொடூரம்!...கோபம் அவர் முகத்தில் கொழுந்து விட்டெறிந்து கொண்டிருந்தது?

""செந்தாமரை! என்ன உன் நடத்தை வரவர ரொம்ப மட்டமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஊரெல்லாம் உன்னைப் பற்றியப் பேச்சாகவே இருக்கிறதே'' என்றார்.

""யாரெல்லாம் பேசுகிறார்கள்''! என்று திருப்பிக் கேட்டாள் செந்தாமரை. துணிச்சலோடு கேட்டாளே தவிர தந்தையின் ஆத்திரத்தைக் கண்டு நெஞ்சம் அஞ்சத்தான் செய்தாள்.

""என்னையே திருப்பிக் கேட்கிறாயா? யாரோ உங்கள் ஆபிசில் வேலை செய்யும் மகுடபதி என்பவனுடன் சேர்ந்துகொண்டு காதல் நாடகம் நடத்துகிறாயாமே! என்ன இதெல்லாம்? நீ உத்தியோகம் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, ஊரிலுள்ள பயல்களுடன் சேர்ந்துகொண்டு காதல் விளையாட்டா நடத்துகிறாய்! நாளையிலிருந்து நீ உத்தியோகமும் பார்க்கவேண்டாம். ஒரு மண்ணாங் கட்டியும் வேண்டாம். இனிமேல் அந்தப்பயல் மகுடபதியை உன்னோடு சேர்த்து பார்த்தேன் ஆனால், அவ்வளவுதான் நான் மனிதனாக இருக்கமாட்டேன். ஆமாம் நாளையிலிருந்து நீ வேலைக்குப் போகவேண்டாம்'' என்று கூறிவிட்டு அவளுடைய பதிலையும் எதிர்பார்க்காமல் வேகமாக வெளியேறி விட்டார்.

தன் மகளிடம் இப்படியெல்லாம் பேசத்தந்தையின் மனம் எப்படித்தான் துணிந்ததோ? நெஞ்சில் இரக்கமில்லாமல் பேசினார்.

தந்தை வெளியேறியதும் செந்தாமரை தன் நிலையை எண்ணி வருந்தினாள். நெடுநாட்களாகவே புண்பட்டுப் போயிருந்த தன் நெஞ்சம், சில நாட்களாகத்தான் பண்பட்டதாக மாறிக் கொண்டிருந்தது. யாருக்கும் கிடைக்காத இன்பம், தனக்குக் கிடைத்து விட்டதாக எண்ணி இறுமாந்து கொண்டிருந்தாள். ஆனால் அந்த மகிழ்வைத் தந்தையென்ற பேயிடி தகர்த்தெறிந்து விட்டது.

காதல் வாழ்விற்குப் பேத உணர்வு உண்டா? ஏன் தன் காதல் வாழ்வைத் தந்தை இவ்வாறு கண்டிக்க வேண்டும்?

இயற்கைக்கு எவ்வாறு உயர்வு தாழ்வு என்ற பேதமில்லையோ அதுபோலத்தான் காதலுக்கும் அந்த வேறுபாடு இல்லை. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் காதலிக்க உரிமையிருக்கிறது. என் காதல் வாழ்வில் தந்தை என்ன குற்றம் கண்டார்? மகுடபதியை விட நல்ல நடத்தை நல்லொழுக்கமுள்ள வேறு ஒரு

வனையா இவர் எனக்குக் கணவனைத் தேடிக் கொண்டு வந்து விடப் போகிறார்

உண்மைக் காதல் என்பது பணத்திற்கோ ஆடம்பரத்திற்கோ உயர்வு தாழ்விற்கோ, அதிகாரத்திற்கோ, மிரட்டல் உருட்டலுக்கோ கட்டுப்படக் கூடியதல்ல. அன்புக்குத்தான் அது கட்டுப்படும். அன்புக்குக் கட்டுப்படும் போது பேத உணர்வுகள் காதலைத் தீண்ட முடியாது.

தந்தையிடம் இதை எடுத்துச் சொல்லியிருக்கலாம். எடுத்துச் சொன்னால் மட்டும் அவர் புரிந்து கொள்ளவா போகிறார். அவர் அறிவைத்தான் மது என்ற நஞ்சரக்கன் அடிமைப் படுத்தி வைத்திருக்கிறானே!

குடி வெறியில் துள்ளுகின்ற மனிதர்கள் அறிவை நீதி நெறியும், அறிவு போதனையும் தொட்டுப் பார்க்கவா போகிறது? நாளையிலிருந்து வேலைக்கும் போக வேண்டாமாம். இந்த வீட்டிற்குள்ளேயே அடைபட்டு நான் வெந்து வெந்து சாக வேண்டும் போல் இருக்கிறது.

என்னதான் குடி வெறியோடு இருந்தாலும் எதிரில் நின்று பேசுவது யார் என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா? அந்த எண்ணங்கூடவா இல்லாமல் போய் விடும்? என்னைப்பற்றி ஊரெல்லாம் பேசுகிறதாம். யாரெல்லாம் பேசினார்கள் என்று கேட்க எப்படித்தான் எனக்குத் துணிவு வந்ததோ!

மகளிடம் பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டல்லவா பேசிவிட்டார்.

ஊரெல்லாம் என்னைப் பற்றிப் பேசுகிறதாம். இந்த ஊருக்கு என்னவேலை? யாரைப் பற்றியாவது பேசத்தானே வேண்டும். இல்லையென்றால் அதற்கு பொழுது போகுமா என்ன? நிம்மதி தான் ஏற்படுமா!

ஒவ்வொரு விநாடியும் என்ன நடக்குமோ என்று தான் சதா சர்வகாலமும் அவரைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போது அவர் என்னைப்பற்றிக் கவலைப்படுகின்றாராம். அப்பாவைப் பற்றி நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கிறது...

இன்ப துன்பம் இரண்டையும் அனுபவிக்கத்தான் மனித இனம் பிறந்திருக்கிறது என்றாலும் அதற்கோர் எல்லையில்லையா?

என்னைப்பற்றி யாரோ அப்பாவிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லியிருக்கிறார்கள். யார் சொல்லியிருப்பார்கள்? யாரிடமும் எனக்கு விரோதங்கூட கிடையாதே. அப்படியிருக்க என்னைப் பற்றி இவ்வளவு வேலை எடுத்துக்கொண்டு யார்

சொல்லியிருக்க முடியும்? யார் வைத்தத் தீயோ, வீடு பற்றிக் கொண்டு கொழுந்து விட்டு எரிகிறது. என் வாழ்க்கையைக் கருக்க வேண்டும் என்பதில் ஆசைகொண்ட வஞ்சகர்கள் யாரோ?

யாராக இருந்தால்தான் நம்மால் என்ன செய்ய முடியும்? சொல்பவர்கள் சொன்னாலும் கேட்பவர்களுக்கு மதி வேண்டாமா? மகளைப்பற்றி மாற்றான் எவனோ பேசுகின்றான் என்றால் அது அப்படியே உண்மை என நம்ப தந்தையின் மனம் எப்படித் துணிந்ததோ?

இடுக்கண்மேல் இடுக்கண்களாக வந்தவைகளைத் தாங்கித் தாங்கி என் இதயமே வடுக்கள் நிறைந்ததாகிவிட்டது.

சின்னஞ்சிறு வயதில் சிற்றாடை கட்டி சிரித்து மகிழ்ந்து அன்னையின் அரவணைப்பிலே திளைத்திருக்க வேண்டிய வயதிலேயே துன்பம் என் இதயத்தைத் தொட்டுப் பார்க்க ஆரம்பித்து விட்டது.

பாவம், தாயற்ற பெண் என்று ஊரார் என்னைப் பற்றிப் பேசிக் கொள்வதைக் கேட்கும் போதெல்லாம் என் உள்ளம் படும் வேதனை, தாயன்பை நினைத்து நினைத்து நான் வடித்த கண்ணீர் அப்பப்பா அதை நினைத்தாலே என் இதயம் வெடித்து விடும் போல் இருக்கிறது.

என்னைத் தொடர்ந்தோடி வந்த துன்பக் கதைகள் அந்த அளவுடனேயே நின்று விட்டதா என்றால் அதுதான் இல்லை. மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. நானும் வளர்ந்தேன். என் வேதனையும் வளர்ந்தது.

அறிவு வளர வளர அப்பாவைப் பற்றி என் மனம் வேதனைப் படத் தொடங்கி விட்டது. எந்நேரமும் குடிபோதையுடன் ஊர் சுற்றிக் கொண்டிருப்பது தான் அப்பாவின் வேலை. தாயில்லாக் கவலையை விட, தந்தை குடிகாரராகத் திரிவதை எண்ணித்தான் அதிகம் கவலைப்பட்டேன்.

"வாழ்க்கை இருக்கிறதே அதை நாம் கற்பனைக்கண்ணோட்டத்துடன் பார்க்கின்ற போதுதான் அது ரம்மியமானதாகவும், இன்பம் உள்ளதாகவும் தெரிகிறது. அதையே நாம் நடைமுறையில் சந்திக்கின்றபோது?......

என் இளமைப் பருவத்தில் நான் வாழ்க்கையைப் பற்றி கற்பனை செய்து, கற்பனைக் கண்ணோட்டத்துடன்தான் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன், அப்போது அது எனக்கு ரம்மியமானதாகவே தெரிந்தது. ஆனால் இன்று?...இல்லையில்லை, என்னைப் பார்க்கும் அறிவு எனக்கு ஏற்பட ஆரம்பித்த பிறகுதான் நடைமுறையில் நான் வாழ்க்கையைச் சந்திக்கத் தொடங்கிய

பிறகுதான் அதிலுள்ள தொல்லைகளும் துயரங்களும் எனக்குத் தெள்ளத் தெரிய ஆரம்பித்தது.

""இந்தத் துயரங்களை யெல்லாம் சில நாட்களாகத்தான் கொஞ்சம் மறந்திருந்தேன். இப்போது மீண்டும் அது என்னை வதைக்கத் தொடங்கியிருக்கிறது.

தனிமையில் அமர்ந்து தன் நெஞ்சத்தோடு புலம்பிக் கொண்டிருந்தாள் செந்தாமரை. தன் உள்ளத்தில் நிறைந்திருந்த துயரத்தை யெல்லாம் யாராவது கேட்டு ஆறுதல் கூறமாட்டார்களா என்று செந்தாமரையின் பெண்மனம் ஏங்கியது.

""இயற்கையின் சோதனைக்கு ஆளாகி விட்ட இம்மாதிரியான சமயங்களில் தன் மீது. தங்களின் முழு அன்பையும் பொழியக் கூடிய உயிர்த்துணைவர்களும். மனிதர்களுக்கு வேண்டியதாக இருக்கிறது, என்ற ஒரு புதிய உண்மையை செந்தாமரையின் பேதையுள்ளம் அப்பொழுது தான் எண்ணிப் பார்த்தது

மனவேதனையின் சுமையைத் தாங்க முடியாமல் செந்தாமரை சோர்ந்து போய் விட்டாள்

இருள் சூழ்ந்திருந்த தன் வாழ்க்கையில் மருடபதியின் நட்பு ஒரு விடிவெள்ளியாக இருக்குமென்று ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தாள். அந்த ஆசைக்கனவுகளை அழித் தொழிக்கும் வகையானதாக அமைந்திருக்கிறது அவள் தந்தையின் பேச்சு.

உள்ளத்தைப் பிளந்தெடுத்து கொண்டிருந்த வேதனையைச் செந்தாமரையால் தாங்க முடியவில்லை. தன் அறிவுக்கு எட்டாமல், சோதனையின்மேல் சோதனையைப் புகுத்தி, தன் வாழ்வு மலரைக் கசக்கி விளையாடுகின்ற பொல்லாத சூழ்நிலையை அவளது மனம் சபித்துக் கொண்டிருந்தது.

தன் தந்தை குடிவெறியில் திளைத்திருக்காத நேரமாகப் பார்த்து அவரிடம் மருடபதியைப் பற்றிச் சொல்லி, அவர் அதை ஏற்றுக் கொள்ளும் படியாகச் செய்ய வேண்டும் என்று நினைத்தாள். ஆனால், அவள் மனமோ, நாம் சொல்லி, அவர் அதை ஏற்றுக் கொண்டபின் நாம் மருடபதியுடன் பழகுவது என்பது ஆட்டலை ஓய்ந்தபின் தலைமுழுக ஆசைப் படுவதைப்போன்றதாகும்.

நாம் கூறுவதை அவர் ஏற்றுக் கொள்வதென்பது நடக்க முடியாத நிகழ்ச்சியாகும். இதுபோல செந்தாமரையின் உள்ளம் தனக்குத்தானே ஆறுதலும் கூறிக் கொண்டது.

தன் தந்தை எப்போதுமே பிடிவாதமாக நடந்து கொள்பவர் என்று செந்தாமரைக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் ஒரு வகையான சபல உணர்வு அவளை இது போல எண்ணத் தூண்டியது.

வாழ்க்கை சில வேளைகளில் மனித இனத்தைக் கிச்சு கிச்சு மூட்டி சிரிக்க வைக்கிறது. பல வேளைகளில் கன்னத்தில் ஓங்கி அறைந்து கண்ணீர் விட்டுக் கதற வைத்து விடுகிறது.

செந்தாமரை தன் மனதில் எழுந்த ஆயிரக்கணக்கான போராட்ட எண்ணங்களுடன் போராடிக் கொண்டே இருந்தாள். அன்றைய இரவை எப்படிக் கழிப்பது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

''இயற்கை பெண்ணை கொள்கைகளுக்குத் தகுந்த மாதிரிப் படைக்கவில்லை. உணர்ச்சிகளுக்குத் தகுந்த மாதிரிப் படைத்து விட்டது'' இப்படி பெண்ணைப் பற்றி ஆராய்ந்தறிந்து சொன்னவன் உண்மையில் ஞானியாகத்தான் இருக்க வேண்டும்.

செந்தாமரையின் உணர்வுக்கும் மனவேதனை தானே காரணமாக இருக்கிறது. அன்று இரவு முழுவதும் செந்தாமரை தூக்கம் பிடிக்காமல் உட்கார்ந்து கொண்டே இருந்தாள். மனதில் சுமை மலை போல் குவிந்து கிடக்கும் போது கண்ணின் இமைக்கதவுகள் எப்படி மூடும்!

வேண்டாத எண்ணங்களைப் பற்றி மனித இனத்தை விரிவாக எண்ணிப் பார்க்கச் செய்திடும் ஆற்றல் இரவு நேரத்திற்கு அதிகமுண்டு!

கண்கள் களைத்துப் போகும் வரையில் அவள் உட்கார்ந்து கொண்டே இருந்தாள். ஒன்று இரண்டு, மூன்று என்று மணிப் பொறி ஓடிக் கொண்டே இருந்தது.

காலையில் மகுடபதியைப்பற்றித் தந்தையிடம் சொல்லித்தான் பார்க்கலாமே என்று ஒரு வகையான மன ஆறுதல் அடைந்தாள். அந்த ஆறுதல் செந்தாமரையைக் கண்ணயர வைத்து விட்டது. தன்னையும் அறியாமல் செந்தாமரை கண்ணயர்ந்து விட்டாள்.

காலை மலர்ந்தது. செந்தாமரை கண் மலர்ந்து பார்த்தாள். உதயசூரியனின் ஒளிக் கிரணங்கள் தன் முகத்தில் படுவதைக் கூட உணர்ந்து கொள்ள முடியாமல் அவள் மெய் மறந்து தூங்கிக் கொண்டிருந்திருக்கிறாள் அதுவரையில். அவசர அவசரமாக எழுந்து, முகத்தைக் கழுவிக் கொண்டு, தன் தந்தையிடம் மகுடபதியைப் பற்றிப் பேசச் சென்றாள் அவள் பேசுவதற்கு முன்பாகவே அவள் தந்தை வீட்டைவிட்டு வெளியில் போய் விட்டார்.

செந்தாமரையை ஏமாற்றம் எதிர் கொண்டழைத்தது. தன் தந்தையாரைக் காணாமல் செந்தாமரையின் அழகு முகம் வாட்டம் கண்டது.

இரவு, மகளை மனம் போனபடியெல்லாம் திட்டி விட்டுப் படுத்துக் கொண்டிருந்த செந்தாமரையின் தந்தையின் மனம்

புழுங்கிக் கொண்டே இருந்தது. தன் மகளால் மானம் போய் விட்டதாக அவர் கருதினார். மன நிம்மதியற்ற நிலையிலேயே அன்றைய இரவைக் கழித்தார். அன்று இரவு மட்டும் மூன்று உருவங்கள் உறக்கமின்றிப் போராடிக் கொண்டிருந்தன.

செந்தாமரையை மணந்து கொள்வது என்ற நினைவோடு மகுடபதி உறக்கமின்றி தவித்துக் கொண்டிருந்தான். மகுடபதியை அடையும் மார்க்கம் தெரியாமல், தன் தந்தையைப் பற்றி எண்ணித் தவித்துக் கொண்டிருந்தாள் செந்தாமரை. மகளால் தன் மானம் போய் விட்டதாக எண்ணி உறக்கமின்றித் தவித்தார் செந்தாமரையின் தந்தை.

காலையில் படுக்கையை விட்டெழுந்த செந்தாமரையின் தந்தை முன் இரவு உறக்கமின்றி மனப் போராட்டம் நடத்தி, முடிவு செய்து வைத்திருந்ததை அமுலாக்குவதற்காக வீட்டை விட்டு வெளிக் கிளம்பி நடந்து கொண்டிருந்தார். இரவு ஏற்பட்ட மனப் புகைச்சல் அவர் நடையில் ஒருவித வேகத்தை ஏற்படுத்தியது.

தனக்குப் பெரிதும் உதவி புரிந்து, தன் குடிப்பழக்கத்திற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்த, தன் வயதுள்ள தனது நண்பன் தனபாலைச் சந்திக்கத்தான் அவர் அவ்வளவு வேகமாகச் சென்று கொண்டிருந்தார்.

தனபாலின் ஆலோசனையின்படி ஏதும் செய்யலாம் என்ற முடிவோடுதான் நடந்து கொண்டிருந்தார்.

தனபாலும் செந்தாமரையின் தந்தையும் நெடு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தனர்.

செந்தாமரையின் தந்தை தனபாலிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளி வந்த போது அவர் முகத்தில் சோகத்தின் ரேகை படர்ந்திருந்தது. அந்தக் குடிகார மனதில் குழப்பம்தான் இருந்ததே தவிர, குதூகலம் இருக்கவில்லை காரணம்?

மகளைப் பற்றித் தனபாலிடம் கூறி ஆலோசனைக் கேட்ட போது தனபால், உடனடியாக அவளுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் என்று கூறினார். ஆமாமாம் செய்யத்தான் வேண்டும் என்று ஒத்தூதினார், செந்தாமரையின் தந்தை. பேச்சு வளர்ந்தது, முடிவு! தானே செந்தாமரையை மணம் செய்து கொள்வதாக தனபால் கூறினார்.

ஆரம்பத்தில் தனபாலின் பேச்சு விளையாட்டாகத்தான் ஆரம்பமானது. ஆனால், முடிவில் அதுவே உறுதியாகவும் மாறி விட்டது.

செந்தாமரையைத் தானே மணந்துக் கொள்ளப் போவதாகக் கூறியதைக் கேட்ட செந்தாமரையின் தந்தை திடுக்கிட்டாலும் எதிர்த்துப் பேச முடியவில்லை. காரணம் தனபாலின் தயவு செந்தாமரையின் தந்தைக்குத் தேவைப்பட்டது. தனபாலிடம் கடன் வேறு பட்டிருந்தார்.

நீண்ட நேர சிந்தனைக்கு பிறகு தனபாலுக்கு செந்தாமரையைத் திருமணம் செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். செந்தாமரையைத்தான் திருமணம் செய்து கொண்டபின், அவர் தனக்குத் தரவேண்டிய பணத்தையெல்லாம் தரவேண்டாம் என்று தனபால் உறுதிக் கொடுத்தார்.

செந்தாமரையின் தந்தையைப் போலவே தனபாலும் குடிப் பழக்கம் உள்ளவர். குடிவெறியில் துள்ளுகின்ற அந்த இருவரும் சேர்ந்து செந்தாமரையின் வாழ்க்கைக்குத் தீ மூட்ட முனைந்தனர். தள்ளாடும் தாத்தாவாகிக் கொண்டிருந்த இருவர்களும் உள்ளத்தால் தங்களை இளைஞர்கள் என்றெண்ணிக் கொண்டனர். அந்த மகிழ்ச்சி மதுக் கிண்ணங்களைக் காலியாக்கிக் கொண்டிருந்தது.

“வயோதிகனுக்கு வாழ்க்கைப் பட்ட இளம் பெண் சாக்கடையில் தெளித்த அத்தர், மயானத்தில் முளைத்த மல்லிகை, குருடன் கையில் கொடுக்கப்பட்டச் சித்திரம் போன்று பயனற்றவைகளாகும்!”

இருவருமே எண்ணிப் பார்க்கும் அறிவை இழந்திருந்தனர். மகளின் கொள்ளை வனப்பை, இளமையின் எழிலை ஒரு வயோதிகனிடம் விலை பேசினார் தந்தை.

வழக்கத்திற்கு மாறாக அன்று பகல் நேரத்திலேயே செந்தாமரையின் தந்தை வீட்டுக்கு வந்தார். அவர் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தது. குடிவெறி உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது.

தந்தையின் வார்த்தையை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக செந்தாமரை அன்று அலுவலகம் செல்லாமல் வீட்டிலேயே இருந்தாள்.

என்றும் இல்லாப் புதுமையாகப் பகலில் தந்தை வீட்டிற்கு வரவும் என்ன நடக்கப் போகிறதோ என்று செந்தாமரை அச்சத்துடனேயே தந்தையைப் பார்த்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தந்தை ஒரு பேரிடியைத் தூக்கி அவள் தலைமீது வீசினார்.

தனபாலை செந்தாமரை மணக்க வேண்டும் என்று அவள் தந்தை கூறியதும், “அப்பா” என்ற அலறல் சத்தம்; வீ

கேட்டது. அதற்கு மேல் பேச முடியாமல் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள் செந்தாமரை.

"அழுவதால் பயனில்லை செந்தாமரை! நீ தனபாலைத்தான் மணந்து கொள்ள வேண்டும். எனக்கும் மானந்தான் தேவை. நான் தனபாலுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன்" என்று சிம்மக் குரலொலியைக் கிளப்பினார் தந்தை.

"மகளை விற்று அப்பா மானத்தைக் காக்க வேண்டுமா?" விம்மலுக்கிடையில் செந்தாமரையிடமிருந்து வெளி வந்த வார்த்தைகள் இதுதான்.

சீறிப்பாயும் சிறுத்தையிடம் அந்த சிறு மான் கருணையை எதிர் பார்த்தது.

கல்லும் கனிந்து வரும் கன்னியவள் கெஞ்சிய முறையைக் கண்டும் கல்மனங் கொண்ட அவள் தந்தையின் மனம் இளக வில்லை.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அடுத்த வாரம் உனக்கும் தனபாலுக்கும் திருமணம். இது என் முடிவு. இதை எவராலும் மாற்ற முடியாது."

கூறிவிட்டு அங்கிருந்து நடந்தார் செந்தாமரையின் தந்தை. மகளென்ற பாசம் அவர் மனதைத் தொட்டுப் பார்த்திருக்காது.

"அப்பா..."

மகளின் கதறல் குடிவெறியில் இருந்த தந்தையின் மனதைத் தொடவில்லை. அவர் கோபமாகத் திரும்பிப் பார்த்து விட்டு வேகமாக நடந்தார்.

தனிமையில் விடப்பட்ட செந்தாமரை தலையணையைக் கண்ணீரால் நனைத்தாள்.

அவள் கட்டியிருந்த ஆசைக் கோட்டைகள் அனைத்தும் இடிந்து மண் மேடானது.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. செந்தாமரையின் நெஞ்சமோ கதறிக் கொண்டே இருந்தது.

காலமென்னும் சிற்பி செந்தாமரையின் நெஞ்சத்தில் உருவாகியிருந்த காதல் சிற்பத்தை உளி கொண்டு உடைத்தெறிய முனைந்து விட்டான்.

தன் பிறப்பை அவள் மனம் சபித்தது. இல்லையில்லை; உலகிலுள்ள பெண் பிறப்பையே அது சபித்துக் கொண்டிருந்தது.

"பெண்ணாய்ப் பிறந்தாலே எந்நாளும் துயர்தானே" என்று எப்போதோ கேட்ட பாட்டு அவள் நினைவில் தோன்றி அவளை வதைத்துக் கொண்டிருந்தது.

## 8

"காற்றையும் மேல் வானத்தையும் போன்று உலகெங்கும் வியாபித்து நிற்கும் மகத்தான சக்தி காதல்" என்பது எவ்வளவு உண்மையானது

மகுடபதியின் உள்ளத்தில் புதியதொரு உணர்வு துளிர்த்து இன்ப நினைவுகள் வளர்ந்து கொண்டிருப்பதை எளிதில் உணர முடிந்தது.

மனிதனின் மனதில் மகிழ்ச்சி தோன்றிவிட்டால் அவன் உடலிலும் ஒருவகையான கவர்ச்சி வளர ஆரம்பித்து விடுகிறது.

காதற் கடலில் வீழ்ந்துவிட்ட மனிதமனம் வேறு எந்த வகையான நினைவுகளிலும் ஈடுபடாதாம்.

மகுடபதியின் நெஞ்சத்தில் நீக்கமற செந்தாமரையெனும் வஞ்சியவள் நிறைந்து விட்டாள்.

அவளை மணந்து ஆனந்த வாழ்வு வாழ்வதற்கு சமுதாயத்திடம் அங்கீகாரம் பெற வேண்டியிருக்கிறது. அதைப் பெறுவதற்காக மகுடபதி தன் தமையன் வரதனின் துணையை நாடினான்.

தன் தாயிடம் வரதன் பேசிக் கொண்டிருப்பது அதைப்பற்றியதாகத் தானோ என்று எண்ணினான். அவன் தாய் அவன் யாரை மணந்து கொள்கிறேன் என்றாலும் மறுப்புச் சொல்லக் கூடியவள் அல்லள் எப்படியாவது தன் மகனுக்கும் திருமணம் நடந்து அவனும் மற்றவர்களைப்போல குடியும் குடித்தனமுமாக வாழ்ந்தால் போதும் என்றே அந்தத் தாயுள்ளம் விரும்பியது.

அலுவலகத்திற்கு செந்தாமரை வரவில்லை என்பதறிந்ததும் மகுடபதியின் மனம் வேதனைப்பட்டது. ஏன் வரவில்லை? ஏன் வரவில்லை? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

காலம் அவனுக்கு ஏமாற்றத்தை வளர்த்துக் கொடுத்ததே தவிர, குறைத்துக் கொடுக்கவில்லை. இரண்டு மூன்று நாட்களாகத் தொடர்ந்து செந்தாமரை அலுவலகம் வரவில்லை. ஒவ்வொரு நாளும் அவளை எதிர்பார்த்து எதிர்பார்த்து மகுடபதியின் விழிகள் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தன!

செந்தாமரை ஏன் இரண்டு மூன்று நாட்களாக அலுவலகம் வரவில்லை? உடல் நலமின்றி இருப்பாளோ? ஒரு வேளை அவளது

பெற்றோர்கள் அவள் காதலுக்கு இடைபூறு செய்திருப்பார்களோ அல்லது அவளது மனம் என் காதலை ஏற்றுக் கொள்ள மறுத்திருக்குமோ? சேச்சே. அப்படியெல்லாம் இருக்காது. ஒரு வேளை, பெற்றோர்களுடன் எங்காவது வெளியூர்க்குச் சென்றிருக்க வேண்டும். அப்படிப் போவதாக இருந்தால் அலுவலகத்தில் ஓய்வு பெற்றிருக்க வேண்டுமே? என்னிடம் சொல்லாமலா போய் இருப்பாள்.

"என்னைப்போல் முட்டாள்கள் யாரும் இருக்க மாட்டார்கள். செந்தாமரையுடன் அதிகமாகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டும் அவளுடன் இரண்டறக் கலந்துறவாடும் உரிமை பெற்றிருந்தும் அவள் வீட்டு முகவரியைக்கூட கேட்டுக் கொள்ளாமல் இருந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?

தேவையற்ற எண்ணங்கள் எல்லாம் தோன்றி மகுடபதியை அரித்துக் கொண்டிருந்தது

வழக்கமாகச் சந்திக்கும் இடத்திலுள்ள ஒரு மர நிழலில் மகுடபதி அமர்ந்திருந்தான். அவன் சிந்தனைப் பறவைகள் சிறகடித்துப் பறந்தன.

செந்தாமரையும் நானும் சேர்ந்து பழகுவதைக் கண்டு இந்த உலகம் ஏன் இவ்வளவு கவலைப்பட வேண்டும்? ஏன் எங்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்க எண்ண வேண்டும்? பொறுமையில்லையா? என்னைப் பொறுத்த வரையில் இந்த உலகம் எவ்வளவு தொல்லை கொடுத்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அறிஞர் சொன்னது என்றும் என் நினைவில் இருக்கிறது. ஆனால் உலகம் செந்தாமரைக்கும் சேர்த்தல்லவா தொல்லை கொடுக்கிறது.

பெண்ணாய்ப் பிறந்தவள் இந்த உலகத்தைக் கண்டு அஞ்சியஞ்சித்தான் வாழ வேண்டுமா; ஆம் இந்த உலகம் ஏசாதிருக்கட்டும் என்று கருதுகின்ற எந்தப் பெண்ணும் உலகைக் கண்டு அஞ்சியஞ்சித்தான் வாழ வேண்டும். அஞ்சாமல் வாழ்ந்து வெற்றி பெற முடியும் என்பது பெண்ணைப் பொறுத்த வரையில் முடியாத காரியம் தான். ஆண்கள் வேண்டுமானால் ஓரளவு அஞ்சாமல் வாழ்ந்து வெற்றி பெறலாம். உலகம் ஆண்களுக்குக் கொஞ்சம் பயப்படுகிறது. பயப்படாவிட்டாலும் உலகத்தைப் பற்றி எண்ணாமல், உலகம் உதிர்க்கின்ற பழிச் சொல்லைப் பற்றிக் கவலைப் படாமல் ஆண்களால் வாழ்ந்து விடமுடியும். பெண்களால் அப்படி வாழ முடியுமா? வாழ்ந்துவிடலாம் என்று எண்ணினாலும் அது தான் வெற்றி பெறுமா? உலகம் பெண்ணைக் கோழை என்றே எடைபோட்டு வைத்திருக்கிறது. அதை மாற்றியமைத்தால் ஒரு வேளை உலகைக் கண்டு பெண் அஞ்சாமல் வாழலாம்.

பெண்கள் இளமையில் வேண்டுமானால் உலகைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்து விடமுடியும். ஆனால் பருவத்தில் அஞ்சியஞ்சித்தான் வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது காரணம் உடல் வளர்ச்சி வளர்ச்சி! பெண்களை அடிக்கடி மாற்றிக்கொண்

டே வருகிறது. வளர்ச்சியில் தோன்றுகின்ற பருவம், அந்தப் பருவத்தின் பின்னுகின்ற கவர்ச்சி பெண்களை அஞ்சும் நிலைக்கு ஆளாக்கி விடுகிறது.

நேரம் போவது தெரியாமல் நிலை மறந்து உட்கார்ந்திருந்தான் மகுடபதி. மகுடபதியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்ட அவன் நண்பன் வரதன் மகுடபதியைத் தேடிக் கொண்டு அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். சிலை போல் அமர்ந்திருக்கும் மகுடபதியை வரதன் சிறிது நேரம் அசையாமல் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். மகுடபதியும் திரும்பி வரதனைப் பார்ப்பதாக இல்லை. நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது.

"மகுடபதி! இதென்ன மரத்தடியில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாயா?" என்று வரதன் கேட்டபின்தான் மகுடபதி திரும்பி வரதனைப் பார்த்தான். ஆனால் பேசவில்லை. பெருமூச்சு விட்டான்.

"வரதா!"...மகுடபதியால் பேசமுடியவில்லை. ஏக்கத்துடன் அவனைப் பார்த்தான்.

"எல்லாம் எனக்குத் தெரியும் மகுடபதி"

"ஆமாம் வரதா! என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. செந்தாமரை ஏன் அலுவலகம் வரவில்லை என்று கூட அறிந்து கொள்ள முடியவில்லை. இவ்வளவு நாட்கள் அவளுடன் பழகியும் நான் அவள் வீட்டு முகவரியைக் கூட தெரிந்து கொள்ள முடியாமல் இருந்து விட்டேன். அவளுக்கு ஏதும் தொல்லை உண்டாகியிருக்குமோ என்று என் மனம் அஞ்சுகிறது."

"செந்தாமரைக்கு ஒன்றும் ஏற்பட்டிருக்காது. அவள் காதலுக்குத்தான் ஏதாவது ஏற்பட்டிருக்கலாம்."

"என்ன?"

"ஆமாம்! உங்கள் காதலை ஊரறியச் செய்து விட்டீர்கள். அதனால்தான் தொல்லைகள் உண்டாகியிருக்குமென நினைக்கிறேன். காதல் வளர்ச்சிக்குத் திரைப்படக் கொட்டகையையும், சாலைப் பெருவெளியையும் பயன்படுத்திக் கொண்டீர்கள்."

"அதனால் என்ன? நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வது என முடிவு செய்து கொண்டு விட்டோம்" என்று இடைமறித்துக் கூறினான் மகுடபதி.

"நீங்கள் முடிவு செய்து கொண்டு விட்டீர்கள். ஆனால் உலகம் உங்கள் காதலை ஒப்புக் கொள்ள வேண்டாமா? அவளின் பெற்றோர் உங்கள் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டாமா? நீங்கள் இருவரும் கணவன் மனைவியாவதற்கு இந்தச் சமூகம் அனுமதியளிக்க வேண்டாமா?"

"காதல் என்பது ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி நிற்கும் வரை தான் அன்பு மயமானது. இலை மறைவு காய் மறைவாக இருக்கும் வரையில்தான் காதல் தெய்வீகத் தன்மையுள்ளது!

அப்போதுதான் உலகம் அதை ஒப்புக் கொள்ளும். போற்றிப் புகழும். கட்டுப்பாட்டிலிருந்து ஒரு சிறிது நழுவி விட்டாலோ, காதல் கவைக்குதவாத பொருளாகவே உலகம் கருதும். ஆணை வெறியன், காமுகன், அயோக்கியன் எனத் தூற்றும், பெண்ணை வேசி, விபச்சாரி, சாகஸக்காரி எனத் தூற்றும்.''

"காதல் என்பது வாழ்க்கையின் ஒரு அம்சமேயாகும். அதுவே எல்லாம் ஆகிவிடாது."

வரதன் தத்துவப் போதனையாளனைப் போலப் பேசிக் கொண்டே போனான். மகுடபதி பொறுமை இழந்தவனாய், "நடந்ததெல்லாம் இருக்கட்டும், வரதா! இனி எப்படி நடக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறு. செந்தாமரை அலுவலகம் வராமல் இருப்பதிலிருந்து அவளுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ என எனது மனம் கலங்குகிறது'' என்றான் மகுடபதி.

காதல் பித்தேறி கவிதை பூக்கும் மனத்தோடு கனவுலகில் சஞ்சாரம் வந்துக் கொண்டிருந்த மகுடபதி, ஏமாற்றத்தால் தாக்கப்பட்டமையால், சிந்தை சோர்ந்து தன் நண்பனிடம் சீறி விழுந்தான். ஆனால் அவன் நண்பனோ சீறி விழுந்த நண்பனைப்பார்த்து சிரித்தான்

செந்தாமரையின் வீட்டைத் தேடிப்பிடிக்கும் வேலையைத் தான் எடுத்துக் கொள்வதாகக் கூறி வரதன் மகுடபதியை அங்கிருந்து அழைத்துக் கொண்டு சென்றான்

இருவரும் மகுடபதியின் வீட்டையடைந்த போது இருளின் ஆதிக்கம் உலகை இறுக அணைத்துக் கொண்டது.

வரதன் மறுநாள் சந்திப்பதாகக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்

தனிமையில் விடப்பட்ட மகுடபதி கயிற்றுக் கட்டிலின் மேல் அமர்ந்து பரந்து கிடந்த வானப் பெருவெளியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து வானத்தில் கண் சிமிட்டி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த தாரகைகள் சிரித்தன. இதைக் கண்டதும் அவன் மனதில் பழைய நினைவுகள் நிழலாடின. அந்த நினைவுகள் வரவும் அவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

செந்தாமரையும் மகுடபதியும் சேர்ந்தமர்ந்து வானப் பெருவெளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்றும் வானம் கருமைப் போர்வையால் போர்த்தப் பட்டுத்தான் இருந்தது. நட்சத்திரக் கன்னிகள் வானத்தில் மின்னி மின்னி விளையாட்டுக் காட்டி அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர். அந்த இன்பத் திருவிளையாட்டுக்களையே மகுடபதியும் செந்தாமரையும் சேர்ந்தமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் செந்தாமரை தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் மகுடபதியின் பார்வை மட்டும் அப்படியே

நின்றுவிட்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த செந்தாமரைக்குப் பொறுமையாக இருந்திருக்கவேண்டும். தான் அருகில் இருக்கும்போது தன்னைப் பார்க்காமல் வானத்தையும் நட்சத்திரத்தையுமே பார்த்துக் கொண்டிருக்கின்றானே என்று கோபம் தோன்றியிருக்கலாம்.

"கண் இமைக்காமல் பார்ப்பதற்கு வானமண்டலத்தில் என்ன இருக்கிறதாம்" என்று வெடுக்கென்று கேட்டாள் செந்தாமரை.

இயற்கை மங்கையால் வாரியிறைக்கப்பட்ட வைரக் குப்பை களை வானமண்டலத்தில் மின்னித் திகழும் அற்புதத்தை செந்தா மரை! அதோ...ஓடி விளையாடும் அந்தத் தாரகையைப் பார்!... காதல் வெறியால் கவிஞன்போல் மகுடபதி பேசினான்.

"கணவனில்லாக் கைம் பெண்களைப் பார்த்து ரசிப்பதில் எனக்கு விருப்பம் இருப்பதில்லை"—கோபமாக வேண்டா வெறுப் புடன் பேசுவதுபோல் பேசினாள் செந்தாமரை.

அவள் பேசியதின் பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை மகுடபதியால்.

"என்ன?"

"ஆமாம்! நிலவில்லா வானம் கணவனில்லாக் கைம்பெண் போலத்தானே காட்சியளிக்கின்றது?

"அங்கங்கே மின்னிடும் நட்சத்திரங்கள் ஒன்று சேர்ந்தாலும் நிலவின் நிலைமையும், ஒளியும் அதற்குண்டாகுமா என்ன?"

"நிலவில்லா வானம்!"

"அழகில்லாச் சோலை!"

"செந்தாமரை நீ நிலவுக்குப் பெருமைதேட முனைகிறாய்"

"உண்மையைச் சொன்னேன். சந்திரனைக் கண்டு அல்லி துள்ளி மலருகிறது. நிலவின் வருகையைக் கண்டு கவிஞன் கான மிசைக்கிறான் காதலர்கள் நிலவொளியில்தான் கலந்துறவாடி, அன்பால் இணைந்து இன்பக் கதை பேசுகின்றனர். இன்னும் சொல்லப் போனால்........."

"போதும்...போதும்... வேறொன்றும் சொல்ல வேண்டாம்."

மங்கியதோர் ஒளியினிலே பூங்காவிலே அமர்ந்து பொழுது போக்கிக் கொண்டிருந்த மகுடபதிக்கும், செந்தாமரைக்கும், நடந்த உரையாடலின் சாரம் இதுதான்.

நேரம் போவது கூடத் தெரியாமல் இருவரும் உலகை மறந்து வானத்திற்கும், வட்டநிலவிற்கும் உள்ள தொடர்பு பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். இரவு மணி ஒன்பது, "பூங்காவைப் பூட்டவேண்டும் வெளியே போகிறீர்களா? என்று கேட்ட காவல் காரனின் குரலொலிதான் அவர்களை நினைவடையச் செய்தது.

"நேரம் போனதே தெரியவில்லை" என்றான் மகுடபதி.

"காதலைப் பைத்தியம் என்று சொன்ன அறிஞன் உண்மையி லேயே அறிஞன்தான் "என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் செந்தாமரை.

செந்தாமரையுடன் அவன் கூடி மகிழ்ந்திருந்த இன்ப நினைவுகள் அவன் இதயத்தைத் தொட்டுக் கிச்சுக் கிச்சு மூட்டியதால் தான். கட்டிலில் அமர்ந்து வானத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மகுடபதி தன்னை மறந்து புன்னகை பூத்தான்.

அவன் தாயார் அவனை உணவருந்தக் கூப்பிட்டதைக் கூடக் கவனிக்காமல் பரந்த வானத்தையும் அதில் மின்னுகின்ற நட்சத்திரங்களையும் பார்த்து மனதைப் பறிகொடுத்தவனாக அமர்ந்திருந்தான். நெஞ்சத்தில் கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி பூரணத்துவம் பெற்று அவனைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் வரையில் தன்னை மறந்த நிலையில் அமர்ந்திருந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை.

மறுநாள் காலையில், அலுவலகத்தில் நண்பன் வரதனைச் சந்தித்தபோது செந்தாமரையைப் பற்றி ஏதாவது தகவல் கூறுவான் என்று ஆவலுடன் இருந்தான். ஆனால் வரதன் மகுடபதியைச் சோதிப்பதுபோல் மௌனமாக இருந்தான்.

சுமக்க முடியாத துன்பச் சுமையைச் சுமந்துகொண்டு அன்றையப் பொழுதை ஒரு விதமாகக் கழித்தான்.

மாலை வந்தது. அத்துடன் மறைந்திருந்த காதல் நினைவுகளும் மீண்டும் அவனை மயக்கத்தில் ஆழ்த்த வந்தன.

அலுவலகத்தை விட்டு வெளி வந்த மகுடபதி வரதன் வரவுக்காக வாயிலில் காத்துக் கொண்டிருந்தான். அலுவலகத்தில் வேலை செய்யும் மற்றவர்கள் வெளியில் நின்று கொண்டிருந்த அவனைப் பார்த்துக் கொண்டே சென்றனர். மகுடபதி செந்தாமரையின் வரவுக்காக ஏங்கி நிற்கிறான் என்றே அவர்கள் எண்ணினர். அதனால்தான் அவனைப்பார்த்து ஏளனப் பார்வையை வீசிவிட்டுச் சென்றனர்.

செந்தாமரைக்காக அவன் நின்ற போதும் அவர்கள் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டுதான் சென்றனர். அப்போதெல்லாம் அவன் அவர்கள் பார்வையைப் பற்றியோ, சிரிப்பைப் பற்றியோ கவலைப்பட்டது கிடையாது. ஆனால், இப்போது அவன் மனம் சிறிது கலங்கியது.

"காதலிலே தோல்வியுற்றான் காளை யொருவன்." என்று காற்றிலே மிதந்து வந்த கானம் தனக்கென்றுதான் பாடப்பட்டது என்று அவன் நினைத்தான்.

'வாழ்நாள் முழுவதும் பெண் தொடர்பின்றித் தன்னால் வாழ்ந்துவிட முடியும் என்றெண்ணிக் கொண்டிருந்த தன் உள்ளம் இப்படித் தடுமாற்றம் கொள்வதற்காகச் சிறிது வருந்தினான். மனதைக் கட்டுப்படுத்த முடியாத கோழை என்று தன்னையே நொந்து கொண்டான்.

மகுடபதி நிற்பதைக் கண்டு சிரித்துக் கொண்டே அலுவலகத்தின் படிகளை விட்டு இறங்கி வந்தான் வரதன். தனிமையில் இருக்கும்போது மகுடபதியுடன் போராட்டம் நடத்திய 'காதல்

கொஞ்சம்' வரதனைக் கண்டதும், கலக்கமின்றி இருப்பதுபோல் காட்டிக் கொள்கிறது. மகுடபதியைக் கண்டு வரதன் சிரித்தான். மகுடபதி தனக்காகக் காத்துக் கொண்டிருப்பது வரதனுக்கு ஆச்சரியமாகவே தோன்றியது.

செந்தாமரையுடன் சேர்ந்துபழகத் தொடங்கியதும் மகுடபதி வரதனுக்காக வாயிலில் காத்து நிற்கும் பழக்கத்தைக் கைவிட்டிருந்தான். இன்று மீண்டும் தனக்காக அவன் காத்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும் வரதனுக்கு ஆச்சரியமாகவே தோன்றியது.

மகுடபதி தோள்களில் செந்தாமரை யென்ற கிள்ளைமொழியாள் தொத்திக் கொள்ளத் தொடங்கியபின், அலுவலகத்திலேயே எல்லோராலும் இரட்டையர்கள் என்று போற்றப் பட்டவர்கள் சிறிது காலம் பிரிந்திருந்தனர்.

"என்ன வரதா ஏதாவது தெரிந்ததா?" தன்னை நெருங்கி வந்து கொண்டிருந்த வரதனை நோக்கி மகுடபதி கேட்டான்.

வரதன் பதில் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தான். அது மகுடபதிக்கு என்னவோ போல் இருந்தது

சிறிது தூரம் நடந்ததும் மீண்டும் "கண்டுபிடித்து விட்டாயா?" என்று கேட்டு விட்டு வரதன் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

இல்லையென்று வாயால் சொல்வதற்குப் பதிலாகத் தலையை ஆட்டினான் வரதன். அதைப் பார்த்து மகுடபதியின் முகம் வாடி விட்டது.

அதன் பிறகு இருவரும் ஒன்றும் பேசாமலேயே நடந்து கொண்டிருந்தனர். இருவர் முகங்களிலும் சிந்தனை ரேகை ஓடிக் கொண்டிருந்தது.

செந்தாமரையைப் பற்றி எப்படி விசாரிக்கறிவது என்று சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தான் வரதன்.

செந்தாமரையை இனிமேல் காணமுடியாதோ என்ற கவலை நிறைந்த சிந்தனையுடன் மகுடபதி நடந்து கொண்டிருந்தான்,

அவர்கள் இருவரையும் சிந்தனையிலிருந்து விடுபடச் செய்தது ஒரு நிகழ்ச்சி! அவர்களுக்குச் சிறிது முன்னதாக வெறி கொண்டவர் போல், தானாகவே பேசிக் கொண்டு சென்று கொண்டிருந்தார் ஒரு பெரியவர். அவர் என்ன பேசுகின்றார் என்று இவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அந்தப் பெரியவரின் பின்னால் கைகொட்டி நகைத்து அவரை ஏளனம் செய்தபடியே, பல சிறுவர்கள் பின் தொடர்ந்து சென்றனர். என்ன காரணத்தால் சிறுவர்கள் அந்தப் பெரியவரைப் பின் தொடர்ந்து செல்கிறார்கள் என்று அவர்களைக் கேட்டால் அது அவர்களுக்குத் தெரியாது. விளையாட்டுப் பருவம். அது அவர்களுக்கு வேடிக்கை நிறைந்ததாக இருந்தது.

சிறுவர்கள் செய்து கொண்டு வந்த குறும்புத் தனத்தால் நடைபாதையில் சென்று கொண்டிருந்தவர்களெல்லாம் நின்று

பெரியவரையும் சிறுவர்களையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.

வரதனும் மகுடபதியும் சிறிது நேரம் நின்று கூட்டத்தின் மத்தியில் அகப்பட்டுத் தவிக்கும் அந்தப் பெரியவரை உற்றுப் பார்த்தனர்.

அவர்களும் பெரியவரைப் பைத்தியம் என்றே கருதினர். "பாவம், பைத்தியம்போல் இருக்கிறது" என்று வரதன் அனுதாபத்துடன் கூறினான். அதைக்கேட்டு மகுடபதி சிரித்தான். மகுடபதி ஏன் சிரித்தான் என்று வரதனுக்குப் புரியவில்லை.

"என்ன சிரிக்கின்றாய்?" என்று கேட்டான் வரதன்.

"இன்னும் சில நாட்களில் என் நிலையும் இப்படித்தான் ஆகிவிடும்போல் இருக்கிறது" என்றான் மகுடபதி.

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?" என்று வரதன், தன் நண்பனை அன்போடு கண்டித்தான். அதற்கு மேலும் அவர்களைப் பேசிக் கொண்டிருக்க விடவில்லை. அவர்கள் காதில் விழுந்த கூச்சல்.

சிறுவர்களுக்கு மத்தியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டு நின்ற பெரியவர் விடுதலை பெற்றவர்போல் ஆவேசத்துடன் அந்தச் சிறுவர்களை விலக்கிக் கொண்டு ஓடினார். ஆனால் சிறுவர்களா விடுவார்கள்? "டேய்! பைத்தியம், ஓடுதடா! பைத்தியம் ஓடுதடா!" என்ற பெருங் கூச்சலுடன் அவரை விரட்டிக் கொண்டே ஓடினார்கள் ஒரு பையன், சாலையில் கிடந்த கல்லை எடுத்து, ஓடிக் கொண்டிருந்த பெரியவர் மேல் வீசினான். கூடி நின்ற மற்றச் சிறுவர்களும் அவன் காட்டிய அந்த வழியைப் பின்பற்றினர். இந்த நிகழ்ச்சியால் சாலையில் குழப்பம் வளர்ந்தது. பெரியவர் ஓடுவதும் சிறுவர்கள் "டேய்...டேய்..." என்ற சத்தத்துடன் விரட்டுவதுமாகவே இருந்தனர்.

பிள்ளைகள் துரத்த, பெரியவர் ஓட, இந்தத் திருவிளையாடல் சாலையில் நடந்து கொண்டிருந்தவர்களை யெல்லாம் நின்று வேடிக்கைப் பார்க்கும்படியாக்கி விட்டது. சிறுவர்களுக்குப் பயந்து வேகமாக ஓடிய பெரியவர், எதிரில் வேகமாக வந்த காரின் முன் அகப்பட்டுக் கொண்டார். காரோட்டி எவ்வளவோ சாமர்த்தியமாகக் காரைப் பெரியவர் மேல் மோதி விடாமல் ஓட்ட முயற்சித்தும், முடியாமல் போய்விட்டது. கார் பெரியவர்மேல் மோதியே விட்டது. கார் மோதிய அதிர்ச்சியால் பெரியவர் கீழே விழுந்து விட்டார். அதுவரையில், "பைத்தியம்... பைத்தியம்" என்று அவரை விரட்டியடித்துக் கொண்டிருந்த சிறுவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டனர்.

அடிபட்டு விழுந்த பெரியவரைச் சுற்றி பெருங் கூட்டமே கூடிவிட்டது.

கூட்டம் கூடியதே தவிர ஒருவரும் துணிந்து, முன் வந்து அவருக்கு உதவி புரியத் துணியவில்லை. எல்லோரும் நமக்கென்ன வந்தது என்று எண்ணிக் கொண்டு சும்மா இருந்தனர்.

தூரத்தில் இருந்து இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மகுடபதியும், வரதனும் கூட்டத்தின் அருகில் வந்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று பார்த்தனர். பெரியவர் அதிர்ச்சியால் சுய நினைவற்றுக் கிடந்தார். அவர்கள் இருவருமாக சேர்ந்து அவரைத் தூக்கி அருகில் இருந்த வண்டியில் படுக்க வைத்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

காயம் அதிகமில்லை என்றாலும் அவர் சுயநினைவடைய முடியாமல் இருந்தார். பலவீனமான நிலையில் உடல் இருந்தமையால் மருத்துவர்கள் மிகுந்த சிரத்தையுடன் அவரைக் கவனிக்க வேண்டியதாயிற்று.

அதிர்ச்சியால் பலவீனப்பட்டிருக்கிறது இருதயம். இரத்தம் வேறு வெளியாகி விட்டது. வேண்டியவர்கள் யாராவது ஒருவர் அருகிலேயே இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியதன் பேரில் மகுடபதி தானே இருப்பதற்குச் சம்மதித்தான்

இரவு முழுவதும் பார்த்து பிராணவாயு செலுத்தி, காலையிலும் சுயநினைவடையவில்லையென்றால் இரத்தம் செலுத்த வேண்டும்- உங்கள் இருவரில் யார் இரத்தம் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள் மருத்துவர்கள்.

தன்னைப்போல், ஏதோ ஒரு நிகழ்ச்சி தாக்கியதால்தான் அவர் வைத்தியம் ஆகியிருக்கிறார் என்று மகுடபதி எண்ணினானோ என்னவோ, தானே இரத்தம் தருவதற்கும் இசைந்தான்.

மகுடபதியின் போக்கை வரதனால் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம் இல்லாமல் எல்லாவற்றிற்கும் தானாகவே முந்திக் கொள்வது அவனுக்கு வியப்பை அளித்தது

வரதனை வீட்டுக்குப் போகும்படி கூறி, தான் மருத்துவமனையிலேயே தங்கிக் கொண்டான் மகுடபதி.

வரதன் தானும் தங்கியிருப்பதாக எவ்வளவோ தூரம் சொல்லியும் மகுடபதி அவனை வீட்டுக்குஅனுப்பிவைத்துவிட்டான்

## 9

மறு நாள் காலையில் அலுவலகத்திற்குப் போவதற்கு முன்னாகவே, வரதன் மருத்துவமனைக்கு வந்து விட்டான். அவன் வரும் வரையில் பெரியவருக்கு நினைவே வரவே இல்லை.

அன்று தனக்கும் மகுடபதிக்கும் அலுவலகத்தில் ஓய்வுக்கு ஏற்பாடு செய்து விட்டு வரதனும் மருத்துவமனையிலேயே தங்கினான்.

பெரியவர் படுக்க வைத்தபடியே கிடந்தார். மகுடபதி ஒரு வகையான இரக்கத்துடன் அவர் அருகிலேயே உட்கார்ந்து அவரையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மருத்துவர் வந்து பெரியவரைப் பரிசோதனை செய்து பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கிறார். "என்ன? என்ன?" என்று மகுடபதி பதட்டத்துடன் கேட்டான்.

"இரத்தம் செலுத்தித்தான் ஆகவேண்டும் போல் இருக்கிறது யார் இரத்தம் கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டு விட்டு இவர்கள் முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தார்.

மகுடபதி தான் இரத்தம் தருவதாக கூறினான். வரதன் "யாருக்கோ இவன் ஏன் இரத்தம் தரவேண்டும்" என்றெண்ணி அவனைத் தடுக்கப் பார்த்தான் ஆனால், மகுடபதியோ வரதன் தடுப்பதைப் பொருட்படுத்தவில்லை

நாட்டுக்கு உதவாதவர்களுக்கோ, பயன்படாதவர்களுக்கோ உதவி செய்வதும் அவர்கள் உயிரையே மீட்க பிற நல்ல உயிர்களைப் பலியாக்கிக் கொள்வதும் எவ்வளவு கொடுமையான செயல்? யாரோ ஒரு பைத்தியத்திற்காக மகுடபதி ஏன் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று வரதனின் மனம் எண்ணியது.

ஒருவேளை, அந்தப் பெரியவர் நிலைக்கே மகுடபதியும் சென்று விட்டானோ? அவருக்கு ஏற்பட்டிருப்பது போல் இவனுக்கும் பைத்தியம் பிடித்து விட்டதோ? என்ற ஐயம் வரதனுக்கு ஏற்பட்டது.

ஒன்று மட்டும் வரதனுக்கு நிம்மதியளித்தது மகுடபதியின் மனம் ஏதோ ஒரு வகையான பாசத்திற்கு அடிமைப் பட்டு விட்டது. யாராலும் அவன் போக்கை மாற்ற முடியாது. இரத்தம் கொடுப்பதால், பலவீனம் ஏற்படும் என்பது தெரிந்தது தான் என்றாலும் அவனுக்கு அது மனநிம்மதியை அளிக்கும் என்றால் நாம் அதைத் தடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தான்.

மகுடபதி உடலில் இருந்து பெரியவர் உடலுக்குள் செலுத்து வதற்காக இரத்தம் எடுக்கப்பட்டது.

இரத்தம் எடுத்தமையால் மகுடபதி மயக்கமுற்று நினைவற்றுக் கிடந்தான். அதைப் பார்க்க வரதனுக்குப் பரிதாபமாக இருந்தது இரத்தம் கொடுப்பதற்கு அவனை விட்டதே தவறானது என்று தன்னையே நொந்து கொண்டான்.

மகுடபதி இரத்த தானம் செய்தமையால் சோர்ந்து கிடக்கும் நிலையைப் பார்த்ததும் வரதன் மனம் அழுதது. தன் நண்பனுக்காக அவன் மனம் அனுதாபப்பட்டது.

இரத்தத்தின் வேகம் உடலின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அவசியம். மனிதன் அனுபவித்து சிரிப்பதற்குக் கூட இரத்த புஷ்டி அவசியம். இரத்தம்தான் மனித இன வளர்ச்சியின் உயிர் நாடி. இரத்தம் உடம்பில் இல்லாத இடமில்லை. அது சதா இடம் விட்டு

இடம் ஓடிக் கொண்டே இருக்கிறது. ஒரே சமயத்தில் தசைகளுக்கும் எலும்புகளுக்கும் வேண்டிய புஷ்டியைத் தருவதோடு, அங்கு எரிகின்ற கழிவுப்பொருட்களையும் சுத்தம் செய்கிறது. உடம்பின் வளர்ச்சி இரத்த ஓட்டத்தால்தான் நடைபெறுகிறது.

இரத்தம் பரிசோதிக்கும் நிபுணர் ஒருவர் எழுதியிருந்ததை வரதன் எண்ணிப் பார்த்தான்.

"மனித மனம் இருக்கிறதே அது, எவ்வளவுதான் படித்தறிந்தாலும் கேட்டறிந்தாலும் அதை நம்புவதில்லை. நடைமுறையில் அனுபவ ரீதியாகப் பார்க்கும் போதுதான் அதன் பெருமை தெரிகிறது. அப்போதுதான் குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் கூறியவர்களின் அறிவுரைகளை நம்பத் துணிகிறது, மதிக்க ஆரம்பிக்கிறது."

மகுடபதியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தம் பெரியவர் உடலில் செலுத்தப் பட்டது.

மகுடபதியின் உடலையும் மருத்துவர் சோதனை செய்து பார்த்தார். கவலை தோய்ந்த முகத்துடன் அருகில் நிற்கும் வாதனைப் பார்த்து "கவலைப்பட ஒன்றுமில்லை! இன்று முழுவதும் இப்படித்தான் இருக்கும். இரத்தம் கொடுப்பவர்களின் களைப்புத் தீர சுமார் ஒருமணி நேரம் கூட ஆகலாம்!" என்றார்.

வரதன் நன்றி தெரிவிப்பது போல் மருத்துவர் முகத்தைப் பார்த்தான்.

சிறிது நேரத்தில் பெரியவர் நினைவு பெற்றார். கண்களைத் திறந்து சுற்றிலும் பார்த்தார். அவருக்குப் பழக்கமானவர்கள் யாரும் இல்லையென்று கருதியோ என்னவோ கண்களை மீண்டும் மூடிக் கொண்டார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. மறுபடியும் பெரியவர் கண் விழித்துப் பார்த்தார். பெரியவருக்கு நன்றாகவே நினைவு வந்திருப்பது போலவே தோன்றியது. பைத்தியம் பிடித்திருந்த நிலையில் அலைமோதிய சிந்தனையான எண்ணங்கள் எழுந்தன! பைத்தியம் குறைந்து விட்டது. செந்தாமரையின் தந்தைதான் என்று சொல்லிக் கொண்டாரோ என்னவோ "செந்தாமரை! செந்தாமரை!" என்று மெதுவாகக் கூறினார்.

பெரியவர் பேசியதைக் கேட்டு வரதனுக்கும் ஐயம் எழுந்தது. "செந்தாமரை... செந்தாமரை...!" பெரியவர் யாரைக் கூப்பிடுகிறார்! ஒருவேளை பெரியவருக்கும் அலுவலகத்தில் வேலை செய்யும் செந்தாமரைக்கும் ஏதும் தொடர்பு இருக்குமோ!" என்றெல்லாம் ஐயத்துடன் எண்ணினான்.

"நான் எங்கிருக்கிறேன்? என் மகள் செந்தாமரை எங்கே? என்னைவிட்டு எங்கோ போய்விட்டாயா செந்தாமரை? நெஞ்சிரக்கமில்லாத வஞ்சகன் முகத்தில் விழிக்க கூடாதென்று போய்விட்டாயா?" என சம்பந்தா சம்பந்தமில்லாமல் பெரியவர் பேசினார்.

அவர் பேச்சை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த வரதனுக்குப் பல உண்மைகள் புலனாகியது பைத்தியமாகத் திரிந்தவர் செந்தாமரையின் தந்தையென்றும், தந்தையின் போக்கால் செந்தாமரை அவரை விட்டுப் பிரிந்து எங்கோ சென்றிருக்கிறாள் என்று மட்டும் தெரிந்து கொண்டான்.

மருத்துவர்கள் போனபின் வரதன் பெரியவரின் அருகில் அமர்ந்து அவருடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

"ஐயா! செந்தாமரை! செந்தாமரை! என்று பிதற்றினீர்களே! யாரந்த செந்தாமரை? அவளுக்கும் உங்களுக்கும் என்ன உறவு? அவள் இப்போது எங்கிருக்கிறாள்? தாங்கள் தெரிவித்தால் நான் போய் வேண்டுமானாலும் அழைத்து வருகிறேன்'' என்றான்.

"நீங்கள் யார்? நான் எங்கிருக்கிறேன்?'' என்று கேட்டார் பெரியவர்.

"மருத்துவமனையில் படுத்திருக்கிறீர்கள். சாலையில் தங்களை சிறுவர்கள் பைத்தியம்... பைத்தியம் என்று கூறி விரட்டிக் கொண்டு வரும் போது கார் மோதித் தங்களை கீழே தள்ளி விட்டது நாங்கள் தான் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தோம்'' என்றான் வரதன்.

வரதன் பேசிய முறை அவருக்கும் பிடித்திருந்தது. ஆனாலும், சிறுவர்கள் தன்னை விரட்டி வந்ததோ தான் கார் மோதிக் கீழே விழுந்ததோ நினைவுக்கு வரவில்லை. "நான் மயக்கம் அடைந்து கிடந்தேனா?'' என்றார் பெரியவர்

"ஆமாம், இரவு முழுவதும் நினைவு வரவேயில்லை. இரவு முழுவதும் பிராண வாயு செலுத்தினார்கள். அப்போதும் நினைவு வராமையால் காலையில் இரத்தம் செலுத்திய பிறகுதான் நினைவு வந்திருக்கிறது'' என்றான் வரதன்.

"இரத்தம் செலுத்தினார்களா?''

"ஆமாம், இதோ இவரின் இரத்தத்தை எடுத்துத்தான் தங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர் களைப்படைந்து படுக்கையில் கிடக்கிறார்.

"ஐயோ! பாவம்? என்னால் எவ்வளவு பேர்களுக்குத் தொல்லை!''

"அதிருக்கட்டும். செந்தாமரை! செந்தாமரை என்கிறீர்களே அது யார்?''

"செந்தாமரை! அவள் என் மகள், இந்தப் பாவியை விட்டுப் பிரிந்து விட்டாள். எங்கிருக்கிறாளோ? என்ன பாடு படுகிறாளோ? எல்லாம் இந்தப் பாவியால் வந்தது' என்று நொந்து கொண்டார். அவர் பேசிய பிறகே அவர் கண்கள் கலங்கின. அதைப் பார்த்து வரதன் மனமும் வேதனைப் பட்டது.

"வருந்தாதீர்கள்'' என்று ஆறுதல் கூறினான் வரதன்.

"எப்படி வருந்தாமல் இருக்க முடியும்? என் ஒரே மகள்! அன்புத் திருமகள், என்னைத் தனியாகத் தவிக்கும்படி விட்டுவிட்டு

எங்கோ சென்று விட்டாள். அந்தப் பிரிவின் வேதனையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தம்பி. தேடித் தேடியலைகிறேன்''... வேதனையோடு பேசினார் பெரியவர்.

''என்ன காரணத்தால் தங்களை விட்டுப் பிரிந்து சென்றாள்'' என்று கேட்டான் வரதன்.

''தம்பி, மனிதன் இயற்கையிலேயே கெட்டவனாகப் பிறப்பதில்லை சூழ்நிலைகளும் சுற்று சார்புகளும்தான் அவனை கெட்டவனாக்குகிறது. நான் என்னைப் பொருத்த வரையில் நல்ல முறையில்தான் வாழ்ந்து வந்தேன். வாழ்க்கைப் பாதையில் காணப்பட்ட எத்தனையோ மேடு பள்ளங்களையெல்லாம் அறிவோடு கடந்து வந்தேன். அப்போதெல்லாம் என் அறிவு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது மங்கத் தொடங்குகின்ற வேளைகளில் எல்லாம் மனைவி தூண்டுகோலாக இருந்து என் அறிவு ஒளி மங்காமல் பாதுகாத்து வந்தாள்.

செந்தாமரை பிறந்தாள். நாங்கள் இருவரும் மகிழ்ந்தோம். எங்கள் வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் நீங்கிக் குளிர் நீரோடை தென்படலாயிற்று

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. செந்தாமரை எட்டாண்டுச் சிறுமியாக இருந்த போது அமைதியாக நடந்து கொண்டிருந்த எங்கள் வாழ்க்கையில் ஒரு பேரிடி விழுந்தது.

மனைவி காலமானாள். எட்டு வயதுச் சிறுமியான செந்தாமரையை எப்படிக் காப்பாற்றப் போகிறேன் என்று கவலைப்பட்டேன். உறவினர்கள் மறுமணம் செய்து கொள்ளும்படி கூறினர். மகளின் மனம் கோணாமல் அவளை வளர்க்க வேண்டுமெனக் கருதி நானே அவளை வளர்த்து வந்தேன்.

மகள் வளர்ந்தாள்! அந்தச் சமயம் தனபால் என்பவனின் நட்பு எனக்குக் கிடைத்தது மனக் கவலையை மறக்க மதுப் பழக்கத்தை ஏற்படுத்தி வைத்தான் தனபால்.

ஆரம்பத்தில் அஞ்சிய நான், காலப் போக்கில் பெருங் குடியனாகி விட்டேன். அருமை மகளை மறந்தேன். மதுவின் தொடர்பையே நாடியலைந்தேன்.

ஒரு சில வேளைகளில் என் செய்கை தவறானது என்று என் மனம் இடித்துரைக்கும் ஆனால், குடிபோதையில் அதையெல்லாம் மறந்து விடுவேன். செந்தாமரை வளர்ந்து படித்து தொழிலகம் சென்று சம்பாதிக்கவும் தொடங்கினாள். என் நிலைக்காக வயது வந்த செந்தாமரை பலநாள் வருந்திக் கண்ணீர் வடித்திருக்கிறாள். பெண்ணுக்கு மணம் முடிக்க வேண்டும் என்ற நினைவுகூட இல்லாமல் மது மங்கையுடன் நான் உறவாடிக்கொண்டிருந்தேன்.

நாணம் காரணமாக அவளும் திருமணத்தைப் பற்றி பேசாமல் இருந்து விட்டாள். வயதுப் பெண் எப்படி ''எனக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று கூறுவாள்? ஆனால்...

நாணம் என்பது எப்போதும் இன்பத்தின் சாரலிலேயே உள்ளது. துன்பம், துக்கம் இரண்டும் அதன் மீது படர்வதில்லை. அப்படிப் படர்ந்தால் நாணம் என்ற கொம்பு மறைந்துவிடும்.

செந்தாமரை தானாகவே ஒரு காதலனைத் தேர்ந்து எடுத்துக் கொண்டாள், அவனும் அவளுடன் வேலை பார்ப்பவன். செந்தாமரையும் அவனும் ஊர் சுற்றுவதாகவும், அதனால் அவள் உத்தியோகத்திற்கே கூட ஆபத்து நேரலாம் என்று யாரோ ஒருவன் என்னிடம் வந்து சொன்னான். அதைக்கேட்டு மது மயக்கத்திலிருந்த நான் மதியிழந்தேன்.

செந்தாமரையைக் கண்டித்தேன். அவள் உத்தியோகத்திற்குப் போகவேண்டாம் என்று தடை விதித்தேன். அதோடு விட்டிருந்தால் கூட அவள் என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாள்.

தனபாலின் போதனையால் தனபாலுக்கு மணம் முடித்துக் கொடுக்கப் போவதாகக் கூறினேன் அவள் வேண்டாமென்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். மதுமயக்கத்தில் மயங்கிய என் அறிவு செந்தாமரையின் வேண்டுகோளை ஏற்கவில்லை. நிச்சயம் தனபாலுக்குத்தான் நான் மணம் முடித்துக் கொடுப்பேன் என்று கூறினேன். அதைக்கேட்டு நான் சொன்னபடியே செய்வேன் என்று அஞ்சியோ என்னவோ நான் வெளியில் போய்த் திரும்புவதற்குள் வெளியேறி விட்டாள்." அதற்குமேல் பெரியவரால் பேச முடியவில்லை கண்கள் குளமாயின. கண்ணீர் தாரை தாரையாக பொழிந்தது.

கவலைப்படாதீர்கள் எல்லாம் நன்மையாகவே முடியும்" என்றான் வரதன். மகுடபதி இரத்த தானம் கொடுக்க வந்தது செந்தாமரையின் தந்தைக்குத்தான் என்பதறிந்து வரதன் பெருமை கொண்டான். மகுடபதி வைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டது ஒரு வகையில் நன்மையாகவே முடிந்தது என்று வரதன் மனதிற்குள் எண்ணி மகிழ்ந்தான்.

செந்தாமரையைப் பற்றி எண்ணிப் பார்த்தான். அவள் தன் தந்தையை விட்டுப் பிரிந்து ஏன் செல்ல வேண்டும், அப்படி பிரிந்தாலும் மகுடபதியிடம் சொல்லாமல் செல்ல அவள் மனம் எப்படித் துணிந்தது.

"அப்படியென்றால் தன் காதலன் மகுடபதியிடம் அல்லவா அவள் நடந்தவைகளைக் கூறி ஆறுதல் தேடிக் கொண்டிருக்க வேண்டும்?

செந்தாமரைக்கு!

உன் பிரிவாற்றாமையின் கொடுமையை தாங்காமல் உன் தந்தை சித்தப் பிரமை கொண்டு சாலையில் நடக்கும் போது காரில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். சுயநினைவற்ற நிலையிலும் உன் நினைவாகவே பிதற்றிக் கொண்டிருக்கிறார். தன் செயலுக்காக வருந்துவது போல் காணப்படுகிறது.

அவர் நிலை கவலைக்கிடமானதாகக் காணப்படுகிறது. பாசத்தை மதித்தாவது தந்தையின் நிலைக்காக இரக்கம் கொண்டு நீ எங்கிருந்தாலும் உடன், உன் தந்தையைக் காண வந்து சேர வேண்டும். விரைந்து வருதல் மிகவும் நல்லது. உனது தயக்கம், தடுமாற்றம் உன் தந்தையின் உயிர் குடிக்கும் எமனாக அமையும். விரைந்து வரவேண்டும் என மீண்டும் கவனமூட்டுகிறேன்.

அன்புள்ள,
மகுடபதி

இது போல ஒரு விளம்பரத்தைத் தயாரித்துக் கொண்டு தினத்தாள் காரியாலயத்திற்குச் சென்று, அதைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்து விட்டுத் திரும்பினன் வரதன்.

மறுநாள் மாலை ஐந்து மணியளவில் பெரியவருடன் வரதனும் மகுடபதியும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இரத்தம் கொடுத்தமைக்காக மகுடபதிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பெரியவர் பேசினர்.

அப்போது அங்கு அமர்ந்துள்ள அந்த மூவரும் வியப்படையும் படியாக அவசர அவசரமாக கையில் தினத்தாளுடன் உள்ளே நுழைந்தாள் செந்தாமரை. அவள் தன் தந்தையைக் கண்டதும், "அப்பா" என்று அலறிக் கொண்டே அவரைக் கட்டிப்பிடித்துக் கதறினள். ஒன்றும் புரியாமல் மகுடபதி திருதிருவென விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"என்னை விட்டுவிட்டு எங்கேயம்மா போய்விட்டாய்?" பெரியவரின் இதயத்தில் தேங்கிக்கிடந்த பாசம் கதறியது.

தந்தையும் மகளும் ஏககாலத்தில் மகுடபதியைப் பார்த்தார்கள். "இவர் தானம்மா எனக்கு உயிர் கொடுத்த உத்தமர். இவர் மட்டும் இரத்தம் கொடுக்காமலிருந்தால் நீ என்னை உயிருடன் பார்த்திருக்க முடியாது" என்றார்.

"அவர் கொடுத்த விளம்பரத்தால் தான் அப்பா நான் உங்கள் நிலையை அறிந்து கொள்ள முடிந்தது" என்றாள் செந்தாமரை.

"என்ன?" என்று புரியாமல் கேட்டான் மகுடபதி.

"பத்திரிகையில் விளம்பரம் வெளியிட்டது அடியேன் செய்த கைங்கரியம்" என்றான் வரதன்.

"மகுடபதி என்று பெயர் போட்டிருந்ததே" என்று கேட்டுவிட்டு வரதன் முகத்தைப் பார்த்தாள் செந்தாமரை.

"மகுடபதியின் பெயர் போடாவிட்டால் நீ இவ்வளவு விரைவாக உன் தந்தையைக் காண வந்திருப்பாயா?" என்று கேட்டுச் சிரித்தான் வரதன்.

"இவரை உனக்கு முன்பே தெரியுமா அம்மா?" என தன் மகளைக் கேட்டார் செந்தாமரையின் தந்தை.

"தெரியுமாவது. தந்தையையும் மகளையும் பிரித்து வைப்பதற்குக் காரணமாக இருந்ததே இவர்கள் இருவரும் விளையாடிய

காதல் விளையாட்டுத்தானே!" என்று கூறி மகுடபதியையும் செந்தாமரையையும் பார்த்தான் வரதன்.

பெரியவருக்கு எல்லாம் புரிந்து விட்டது. "அப்படியா?" என்று மட்டும் தான் கேட்டார்.

பிரிந்தவர்கள் கூடினால் பேசவும் முடியுமோ? செந்தாமரையும், மகுடபதியும் ஒருவரை யொருவர் விழிகளால் பார்த்துக் கொண்டனர்.

"நீ வாழ்க்கைத் துணைவராகத் தேர்ந்தெடுத்தவர் இவ்வளவு நல்லவர் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதம்மா!" என்று தழுதழுத்தக் குரலில் கூறினார் பெரியவர்.

"புரியாத போதும், புரிந்து கொள்ள முடியாத போதும் மனிதர்கள் மற்றவர்களைப் பற்றி மட்டமாக மதிப்பதுதான் உலக வழக்கமாயிற்றே!" என்றான் வரதன்.

"இப்போது தான் எல்லையில்லா மகிழ்வால் துள்ளிக் குதிக்கிறது என்னுள்ளம்." என்றார் பெரியவர்.

"என் மனம் மகிழவில்லையே அப்பா!" என்றாள் செந்தாமரை.

"மனம் போல் வாழ்வு கிடைக்கப் போகிறது என்பது அறிந்துமா மனம் மகிழ்ச்சியடையவில்லை" என்று கேட்டார் செந்தாமரையின் தந்தை. "தாங்கள் அந்தப் பாழும் குடியை நிறுத்தாமல் எனக்கு எப்படியப்பா மகிழ்ச்சி தோன்றும்?" என்று கேட்டு விட்டு முகத்தைப் பார்த்தாள் செந்தாமரை.

"இனிமேலும் அந்த மதுவைத் தொடுவேன் என்று எண்ணுகிறாயா அம்மா? என் அருமை மகள் செந்தாமரையின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், இனி ஒருபோதும் மதுவைத் தொட மாட்டேன். இது உறுதி!" என்று உணர்ச்சியுடன் பேசினார் பெரியவர்.

தந்தையின் பேச்சைக் கேட்டு செந்தாமரையின் முகம் மலர்ந்தது. புன்னகைத்தபடியே மகுடபதியை ஓரக்கண்ணால் பார்த்தாள். தங்களுக்குக் கிடைத்த "மனம் போல் வாழ்வு" பற்றி ஈரிரு விழிகளும் பேசிக் கொண்டன.

வரதன் சிரித்துக் கொண்டே அந்த இடத்திலிருந்து மெல்ல நழுவினான். பெரியவரும் அவனைப் பின் தொடர்ந்தார்.

தனிமையில் விடப்பட்ட காதலர் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர்.

❖ ❖ ❖

அடுத்த வாரம் செந்தாமரை—மகுடபதியின் திருமணம் சிறப்பான முறையில் நடந்தேறியது.

திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லாம் "மனம் போல் வாழ்வு பெற்றிடுவீர்களாக!" என்று கூறி மணமக்களை வாழ்த்தினர்.

முற்றும்.




நெடுங்கதை

★

மார்ச் இதழ் பிரேம ரத்னம்
இணைப்பு

அமைதியான ஓர் அரண்யம். அதன் நடுவே அந்தகாரம் சூழ்ந்து கிடக்கும் ஒரு ஓலை வேய்ந்த குடிசை அது தவயோகி கௌதம மகரிஷியின் ஆசிரமம். பொழுது இன்னும் விடியவில்லை! ஆசிரமக்கூரை உச்சியிலிருந்து கடைசிச் சாமக் கோழி ஒன்றுதன் இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொண்டு கூவியது. அந்த இறக்கைகளின் ஓசை இருண்ட வனமெங்கும் பயங்கரமாய் எதிரொலித்தது. புல் படுக்கையின் மீது சயனித்திருந்த அகல்யாவின் மெல்லிய நெஞ்சு தூக்கத்தில் விம்மித்தாழ்ந்தது.

கோழி கூவியதும் கௌதம மகரிஷியின் கண் விழித்தெழுந்து மந்திரங்கள் உச்சரித்துக் கொண்டே கங்கைநதி தீரத்துக்கு நீராடச் சென்றுவிட்டார். அவருடைய ஆசிரமத்திலிருந்து கங்கை நதிதீரம் வெகு தூரத்திலிருந்தது கோழி கூப்பிட்டதும் மை இருட்டில் எழுந்து புறப்பட்டால்தான் கௌதம மகரிஷி கங்கைக் கரையை அடைந்து நீராடிச் சூரிய நமஸ்காரம் செய்ய முடியும்!

அகல்யா கண் விழித்துப் பார்த்தாள். என்றும்போல் குடிசைக்குள் இருள் கவிந்திருந்தது. அது அவளுடைய யௌவன உள்ளத்தில் குவிந்திருந்த இருட்டைப் பிரதிபலிப்பது போன்ற பிரமை அவளுக்கு உண்டாயிற்று. அவ்வளவு பெரிய இருட்டை அகல்யாவின் நெஞ்சில் அப்பியது யார்? பெண்ணை மாயை என்று ஒதுக்கும் அவளுடைய கணவர் மகா முனி கௌதமரா? அகல்யா பெருமூச்செறிந்தாள். பதுமைபோல் அகல்யா புல் படுக்கையிலிருந்து எழுந்து சென்று மண்சுவர் மீது தொங்கிக் கொண்டிருந்த அகல் விளக்கை ஏற்றினாள். அப்போது அகல் விளக்கின் திரியிலிருந்து எழும்பிய தீச்சுடர் அவளுடைய கணவரின் கண்ணொளி வீசும் தாபத்தின் ஜுவாலையை நினைவுறுத்தியது. அகல்யாவின் பூப் போன்ற தேகம் புல்லரித்தது. அகல்யா குடிசையை ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்தாள். குடிசை வெறிச்சென்றிருந்தது. அவளருகில் விரித்திருந்த ஓலைப்பாயில் அவளுடைய கணவரைக் காணோம். அந்த மகரிஷி கங்கைக் கரைக்கு நீராடப் போய் விட்டார். இனி அவர் திரும்பிவரப் பல யுகங்கள் ஆகும். அகல்யாவின் கண்களில் நீர் ததும்பியது! அந்தக் கண்ணீர் யௌவன ஆசைத்தீயால் வெதும்பிய உள்ளத்தின் நீராவி என்று மகரிஷியின் ஞான திருஷ்டிக்குப் புலப்படவில்லையே! அகல்யாவின் மலர்ப் பாதங்களுக்கருகில் கௌதம மகரிஷியின் வேள்விப் பீடம் அவிந்து கிடந்தது. அதில் மல்லிபோல் வெண்ணிறச் சாம்பலின் குவியல். அதைப் பார்க்கும்போது அகல்யாவுக்குச் சாம்பலாய்ப் போன தன் பழங்காதல் நினைவுக்கு வந்தது. புரண்டெழும் துக்கத்தால் துடிக்கும் தன் மெல்லிய உதட்டை முல்லைப் பற்களால் கடித்து அடக்கிக் கொண்டு, தூண்டுகோலை எடுத்து அவிந்து கிடக்கும் சாம்பலின் குவியலைக் கிளறினாள். அவள் கண்முன் கழிந்துபோன நாட்களும் இளம் பருவத்துக் கனவுகளும், காஞறுகளின் அலைக

வில் மிதந்து வரும் கருகிப் போன காட்டுப் பூக்களைப்போல், ஒன்றன் பின் ஒன்றாக மெல்லச் சுருண்டு வந்தன...

அகல்யா பிரும்ம தேவனின் மானஸ புத்திரி. பிரும்மன் படைப்பிலே ஒரு பேரதிசயமாய்த் திகழ வேண்டுமென்று அழகையெல்லாம் ஒன்றுசேர்த்து திரட்டி உருவாக்கிய பெண் ஓவியம். அந்த அகண்ட இறப்பின் யுகயுகாந்திரமான கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் பிறகு பிறந்தவள்தான் அகல்யா. சின்னஞ்சிறு வயதில் அகல்யா வானவீதியெங்கும் கலகலவென்று புன்னகை முத்துக்களை அள்ளித் தூவிக் கொண்டே ஓடிவிளையாடுவாள். நீல நிற வானந்தான் அவளுடைய விளையாட்டு மைதானம். நாணிக் கண் புதைக்கும் நட்சத்திரப் பெண்கள்தான் அவளுடைய தோழிகள். வெண்மேகந்தான் அவளுடைய சப்ரகூட மஞ்சம். அவள் சிரித்தால் நட்சத்திரங்கள் மின்னும், ஓடிக்குதித்தால் வானத்தில் மின்னல் கொடிகள் பறியும்!

அகல்யா ஓயாமல் சிரிப்பாள். அந்த சிரிப்பின் நிழலில் சித்தர்களும் ஒருயுகம் சிந்தை தளர்ந்து நிற்பார்கள். அரும்பிப் பூவாத வயதிலேயே அகல்யா கண்விழிகளால் பார்ப்பவர் நெஞ்சைப் பம்பரமாய்ச் சுழற்றி விடுவாள். வானத்து அமரர்களும் அவளுடைய மேனிவண்ணத்திலும் புன்னகை வெள்ளத்திலும் கண்ணையும் நெஞ்சையும் பறிகொடுத்து விடுவார்கள். அமுதம் பிறவாத பாற்கடலை விரும்பிச் செல்லும் தேவர்களைப்போல உணர்ச்சிகள் பிறவாத அவளுடைய சின்ன உதட்டை எண்ணி ஏங்கிய தேவ குமாரர்கள் எத்தனைபேர்களோ! உதயசூரியன் உலகத்தைச் சுற்றிவரக் கிளம்பும்போது அகல்யாவின் நெற்றியில் நீண்டதோர் முத்தமிடுவான் அப்போது கீழ்க்கரைவானம் பொற்கலயமாக மாறும். பிறகு மேற்றிசை வானில் மறையும்போது அந்திச் சூரியன் அகண்ட தன் இரு கரங்களாலும் அகல்யாவை அள்ளி அணைப்பான். அப்போது மேற்கரை வானத்தில் இரு கிரணங்களின் சிவந்த ஒளிக் கீற்றுகள் படரும்.

பாக்கலயம் ஏந்தி நிற்கும் வானத்துச் சந்திரன் மட்டும் சும்மா இருப்பானா? அவனுடைய இருபத்தேழு பத்தினிகளும் கண்ணயரும்போது. அருகில் இருக்கும் ரோகிணி கண்ணிமை மூடும்போது, சந்திரன் அகல்யாவின் கூந்தலைப் பற்றி இழுத்து அவளுடைய வளம் படிந்த கழுத்தில் முத்தமிட்டு விடுவான். அப்போது கீழ் வானத்து நிலா சிவந்த வர்ணச்சட்டியாக மாறும். அகல்யாவோடு ஓடி விளையாடும் சிறு நட்சத்திரப் பெண்கள் முதல் வயதான வால் நட்சத்திரப் பெண்கள் வரை, கண்சிமிட்டி அகல்யாவை அள்ளியணைத்து அவளுடைய கன்னக் கதுப்பில் மாறி மாறி ஓயாமல் முத்தங்கள் பொழிந்தவாறு கிடப்பார்கள்.

இவ்வாறு அகல்யா அழகின் மோனக் கடலிலேயே பிறந்து அழகின் வானக்கடலிலே வளர்ந்து வரும்போது ஒருநாள்... வானத்து நிலா அரும்புவதற்கு முன் இரவு.

தேவேந்திரன் அகல்யாவை வான வீதியில் பார்த்து விட்டான். ஓங்கி வளர்ந்திருக்கும் பசுமை மாறாத கற்பக விருக்ஷம் போல் அகல்யா தேவேந்திரன் கண்களில் தென்பட்டாள். பூவாத பாரிஜாத மொட்டு தேவேந்திரன் கற்பனைக் கண்களில் வந்து நின்றது. மலர்ந்தது. அவள் நின்ற துடிப்பின் சாயல், கடிவாளத்தைப் பிடித்தான் வானவீதியில் கிர்ரென்று ஏறிப் பறக்கும் அவனுடைய பட்டத்து வெள்ளைக் குதிரையை ஞாபகம் மூட்டியது. தேவேந்திரன் சகல புவனங்களையும் மறந்தான். அவள் அழகிய யுவதியா, அறியாப்பேதையா. பூத்த பொன்பாரிஜாதமா, பூவாத செங்குதமா என்று கூட நினைக்கவில்லை அவளுடைய பூங்கரங்களைப் பற்றியிழுத்து, அவளுடைய கருங்கூந்தலை இளந்தென்றலிலே பறக்கவிட்டு. அவளுடைய மொக்குவாயை மலர வைத்து, அவளுடைய சின்ன உதட்டைச் சிவந்த ரோஜாவாக்கினான். அந்த ஒரு கண உதட்டின் போதை மயமான ஸ்பரிசத்தில் அகல்யா வான வீதியை அடியோடு மறந்தாள். அடிவானத்திற்கு அப்பால் உதயமாகும் சுரிப்பன புரியையும், நூதனமான திக்குத் தெரியாத ஒரு இன்பக் காட்டையும் கண்டாள் அந்த ஒரு கணத்தில் கண்ட உதட்டின் ஸ்பரிசம் அவளுக்கு மிகவும் நூதனமான அனுபவம், அகல்யா, உதயசூரியனிடம் பெற்ற நெற்றி முத்தம் தந்தையின் வாத்ஸல்ய உணர்ச்சி சேர்ந்து வரும் அந்திச் சூரியனின் அணைப்பு முதியவனின் தேய்ந்த ஆசை, வானத்துச் சந்திரனிடம் பெற்ற உதட்டின் உணர்ச்சியோ கண்கட்டு விளையாட்டு நட்சத்திரப் பெண்களிடம் பெற்ற தன் கன்னக் கதுப்பின் கலவை உணர்ச்சியோ யௌவனப் பெண்களின் பருவக் குறும்பு. ஆனால் தேவேந்திரனிடம் பெற்ற அந்த உதட்டின் ஸ்பரிசம்? பெண்மையைப் பூர்ணமாக்கும் காதலின் மலர்ச்சி! கருமேகங்களின் திரை தேவேந்திரனையும் அகல்யாவையும் ஒரு கணம் மறைத்தது. வான வீதி கவிழ்த்த செவ்வர்ணச் சட்டியாக மாறியது. அந்த ஒரு கணத்திற்குள் அகல்யாவின் பெண்மை பூர்ணமாயிற்று. அந்த ஒரு கணத்திற்குள் அகல்யா, ஆக்கிப் படைத்த ஒருவனையும் ஆளவரப் போகிற ஒருவனையும் மறந்து விட்டாள் இவ்வாறு தேவ பூமியின் ராஜாவும் அகல்யாவும் இதயம் கலந்த காதலோடு வான வீதியில் அடிக்கடி சந்தித்து வந்தார்கள். ஆனால் அவர்களுடைய காதல் யாருக்கும் தெரியாமல் பிரம்மரகஸ்யமாகவே இருந்து விட்டது திரிகாலமும் உணர்ந்த பிரும்மதேவனுக்கும் அகல்யாவின் இருதயத்துக்குள் மலர்ந்திருந்த காதலின் தேவரகஸ்யம் புலப்படவில்லை அகல்யா மணப் பருவமடைந்ததும். அழகின் சிகரமான அவளுக்கு ஏற்றதோர் கணவனைத் தேர்ந்தெடுக்க பிரும்மா திருமணப் போட்டியொன்று அமைத்தார். அதில் கலந்து கொள்வதற்காக சம்ஹார மூர்த்தியான மஹாதேவன் பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் முதல் சகல தேவர்களும் கந்தவர்களும் கிம்புருடர்களும் பூசுரர்களும் பூலோகத்து மன்னாதி மன்னர்களும் தவயோகிகளும் முற்றும் துறந்த முனிவர்களும் கூட வந்தி

ருந்தார்கள். பிரும்மா அவர்களை நோக்கி, ''சப்தலோகங்களையும்
அலங்கரிக்கும் மஹாபுருஷர்களே, தவஞானிகளே கல்ப கோடி
காலம் நான் கண்ட கனவுகளின் அற்புதமான அழகு சிருஷ்டி என்
அகல்யா. அகில அண்ட லோகங்களின் சௌந்தர்யங்களை யெல்
லாம் ஒன்றாய்த் திரட்டி அகல்யாவைச் சிருஷ்டித்தேன், அகில
சராசரங்களின் சௌந்தர்ய மனத்தையும் கரைகண்டு ரசிக்கத்
தக்கவனே என் அகல்யாவுக்கு ஏற்ற நாயகன். ஆதலின் யார்
இந்த அகிலாண்ட லோகங்களையும் முன்னதாகச் சுற்றி வருகி
றாரோ, அவருக்கு என் பிரிய குமாரி அகல்யாவைத் தாரை
வார்த்துக் கொடுப்பேன்'' என்றார்.

விநாடிக்கொரு விந்தை உலகைத் தாவிப் பறக்கும் வெள்ளைக்
குதிரைமீதேறி தேவேந்திரன் வான வீதியில் புறப்பட்டான் அவ
னுக்குப் போட்டியாக எவனும் பந்தயத்தில் கலந்து கொள்ள முன்
வரவில்லை. ஒரு மகரிஷியைத் தவிர! அவர் மண்ணுலகில் மாத
வம் புரியும் கௌதம முனிவர் அழகால் அடிமை கொள்ளும் அகல்
யாவை ஆசிரமத்தில் தன் குற்றேவல் புரியும் பணிப் பெண்ணாக
விரும்பி வந்தார் மகாஞானி! பிரும்மதேவன் உள்பட சகல தேவர்
களும் கௌதமரைப் பார்த்து நகைத்தார்கள். விண்ணையும்
மண்ணையும் தாவிச் சுற்றிவர இந்திரனைப்போல் மண்ணுலகத்து
கௌதமருக்கு வாகனமுண்டா என்று எண்ணி நகைத்தார்கள்.
ஆனால் மண்ணுலகத்து முனிவர்களுக்கு யுக்தி அதிகம் என்பது
அவர்களுக்குத் தெரியவில்லை. கௌதமர் பூனைபோல் கூனிக்
குறுகி வந்து பிரும்மாவுக்கு அருகே இருந்த காமதேனுவை மும்
முறை சுற்றிவந்து நமஸ்கரித்து விட்டு, ''ஹே, லோகபிதாவே
நீர் செய்த வேத வாக்குகளின்படி சகல அண்ட பிண்ட சராசரங்
களின் தத்துவங்களெல்லாம் ஒரு நான்கு கால் பசுவுக்குள் அடங்கி
யிருக்கிறது என்பது உண்மையானால் நான் போட்டியின் நிபந்த
னைப்படி அகிலத்தை முதலில் சுற்றிவந்தவனாவேன். ஆதலின்,
சத்திய நாயகா, உம் அகல்யாவை எனக்குக் கன்னிகாதானம்
செய்து கொடும்!'' என்று கேட்டார்.

அங்கிருந்த தேவர்கள் அனைவரும் திடுக்கிட்டார்கள். ஆறு
கோடி காலம் தவம் செய்தாலும் கிடைக்க முடியாத ஒரு
மனோஹர மங்கையை, மானிடத்து முனிவனொருவன் சூழ்ச்சி
யால் பெற்று விட்டானே என்று வருந்தினார்கள். காமதேனுவோ,
தான் ஒரு பெண் பிறவியாக இருந்தும் தன்னிடம் இந்த அகிலம்
அடங்கியிருக்கிறது. என்ற மர்மம் தெரியாமல் போய் விட்டதே,
தெரிந்திருந்தால் தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொண்டு
[illegible]குத் தெய்வம் அகல்யாவை அடைந்திருக்கலாமே என்று
உள்ளம் உருகியது! கௌதமர் போட்டியில் ஜெயித்து விட்டார்.
சொன்ன வாக்கைப் பிரும்ம தேவர் மீறமுடியுமா? காலம் முற்றுப்
[illegible] இமைக்காமல் கண்களால் அள்ளிப் பருகுவதற்கமைந்த அகல்
யாவை, காலம் முழுவதும் கண் இமை மூடி பரத்தியானத்தில்

ஆழ்ந்து கிடக்கும் கௌதம முனிவருக்குப் பிரம்ம தேவர் கன்னிகா தானம் செய்து கொடுத்தார். அகல்யாவின் காதல் கனவுகள் நூறாக உடைந்து சிதைந்தது. மண மந்திரங்கள் ஒவ்வொன்றும் அவளது மலர்க்கைகளில் எவனோ இதயம் தெரியாத ஒருவனது வாழ்வோடு பிணைக்கும் விதியின் விலங்குகளாக விழுந்தன. அப்போது அவள் கண்களில் துளிர்த்த நீர் திவலைகளை அந்தத் 'திவ்ய மண மண்டபத்தில் யாரும் அறியவில்லை. வேள்வித் தீயில் சாட்சியாக எழுந்த அக்கினியும் அகல்யாவின் கண்ணீரைக் கண்டு அவியவில்லை! வெந்து சாம்பலாகும் தேவராஜனின் கோபத்தைக் கண்டும் அணையவில்லை. மணப்படலம் முடிந்தது!

மாமுனிவர் மங்கையை மாநிலத்திற்கு தன் மகிமை பொருந்திய குடிசைக்கு அழைத்து வந்தார். புகையுண்ட ஓவியம் தன் ஓலைக் குடிசையை அலங்கரிக்கப் போதுமென்று! தேவேந்திரன் பதறினான், துடித்தான், பொங்கினான். பல நாள் வளர்த்த பாரிஜாத விருக்ஷத்தை, மலர் முகரத் தெரியாத ஒரு மாநிலத்து முனிவன் சூழ்ச்சியால் வேரோடு கெல்லிச்செல்வதை—

சில வருஷங்கள் கழிந்தன...

அகல்யாவின் பெண் உள்ளத்தில் முதன் முதலில் துளிர்த்த பழைய காதல் மாயவில்லை. அறியாப் பருவத்திலே ஆசையின் எதிரொலியைக் கண்ட அமரேசனின் நெஞ்சத்திலும் பழைய காதல் தேயவில்லை. அமுத பானம் ஆறாய் ஓடும் சுவர்க்க பூமியில் தேவேந்திரனும், அமைதி படரும் அழகிய பூலோக ஆரண்யத்தில் அகல்யாவும் ஓயாமல் உள்ளம் உருகிக் கொண்டிருந்தார்கள். அகல்யாவுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது மணந்த நாட்களில் மஹரிஷி தந்த ஒரே இன்ப இரவின் தெய்வீகச் சின்னம் அது. புத்திரனில்லா விட்டால் 'புர்' என்ற நரகில் விழ நேரிடுமே. என்றஞ்சி ஒரு சுபயோக சுபதினத்தில் கௌதமர் அகல்யாவுக்கு அன்புடன் அருளிய வரப் பிரஸாதம்! கன்னம் உப்பச் சிரிக்கும் அந்தச்குழந்தையால் அகல்யாவுக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட்டாலும் அவளுடைய நெஞ்சின் தாகம் தணியவில்லை குழந்தை பிறந்த பிறகு கௌதமரும் அகல்யாவும் ஒரே குடிசையில் வாழ்ந்தாலும் இருவரும் வெவ்வேறான இரண்டு உலகத்தைச் சேர்ந்தவர்கள் போலவே பழகினார்கள். கௌதமர் நிஷ்காம்யயோகி, மகாதபஸ்வி. பகல் ஒரு பொழுது பாலும் பழமும் புசித்து நாள் முழுவதும் தவம் செய்வார். ஓய்ந்த வேளைகளில் வேத சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்வார். இரவு நேரங்களில் அகல்யாவின் கைக்கு எட்டும் தூரத்தில், ஆனால் அவளுடைய நெஞ்சுக்கு எட்டாத வெகு தொலைவில், ஆசிரமத்தின் ஒரு மூலையில்: புலித்தோல் விரிப்பின் மீது அந்தராத்மா பரத்தியானத்தில் ஆழ்ந்து கிடக்க அயர்ந்து தூங்குவார். கடைசிச் சாமத்துக் கோழி குரல் கொடுத்ததும், கங்கை தீரத்துக்கு நீராடித் தபஸ் செய்யப் போய் விடுவார். இவைதான் அந்த நிஷ்காம்ய யோகியின் நித்திய கர்மானுஷ்டானங்கள். அகல்யாவுக்கோ, பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள்

கொய்துவருவது, கணவரின் தபசுக்குத் தேவையான புல் சமித்துக்கள் சேகரிப்பது, குடிசையைப் பெருக்கிக் கோலமிட்டு அந்தராத்மாக்களும் பரமாத்மாக்களும் குடி கொள்ள ஏற்றதாகச் செய்வது ஓய்ந்த நேரங்களில் குழந்தையை எடுத்துக் கொஞ்சி விளையாடுவது. இவைதான் அவளுடைய நித்யகர்மங்கள் அவளுக்கு மாங்கல்யக் கயிறு கற்பித்த பதிசேவைகள்.

அகல்யாவுக்கு சில சமயங்களில் யௌவனத்தின் வசந்த நினைவுகள் எழும். அப்போதெல்லாம் தன் யௌவனத்தின் பொலிவைத் தன் கணவரின் இதயத்தில் சமர்ப்பிக்கும் நோக்கோடு அவரை நெருங்குவாள். வைராக்கிய சித்தர் கௌதமரோ அந்த அளவற்ற யௌவனத்தின் சமர்ப்பணத்தை கடுநாகமெனத் தள்ளி விடுவார்.

“அகல்யா, மாயையின் மதிமயக்கத்திற்கு ஆளாகாதே, ஆசைகள் என்பவை நம் ஆத்மா எனும் ரோஜாவைச் சுற்றியுள்ள முட்கள். அளவற்ற நம் லட்சியப் மாலையினின்று அகற்றி விட வேண்டும்!” என்று நிஷ்காம்ய போதனை செய்வார். ஆனால் ஆசைகள் என்பவை ரோஜாவைச் சுற்றியுள்ள முட்களல்ல, ரோஜாவின் இதழ்கள் என்று அகல்யா எண்ணி ஏங்குவாள்.

இது மட்டுமா? அவள் வண்ண மலர் ஒன்றைப் பறித்து வாசம் முகர்ந்தாலும், “அகல்யா மலர்கள் பூஜைக்குரியவை, முகர்வதற்கல்ல!” என்று கௌதமர் கோபிப்பார். குழந்தையை எடுத்துக் கன்னத்தில் முத்தமிட்டுக் கொஞ்சினாலும், “அகல்யா, குழந்தையின் கன்னத்தில் பாவத்தைப் பதிக்காதே!” என்பார் அப்போதெல்லாம் அவளுடைய தாயுள்ளம் எப்படித் துடிக்கும்! இத்தகைய பாசபந்தங்கள் அறுத்த வைராக்கிய புருஷர் ஓயாமல் இன்பத்தின் மதுக் கடலில் நீந்தும் தேவன் ஒருவனுக்குரிய ரஸிக உள்ளம் படைத்தவளை ஏன் மணம் புரிந்தார்!” என்று அகல்யா உள்ளம் குமுறுவாள்.

சில சமயங்களில் கௌதமரின் தேஜஸ் மிகுந்த முகத்தையும் தவப் பெருமைகளையும் காணும் போது அவளுக்குக் கௌதமர் மீது அளவற்றதொரு மதிப்பு உண்டாகும். ஆனால் பாழ்ப்பட்டுப் போன தன் யௌவனத்தின் அவஸ்தைகளை எண்ணும் போதோ அவளுக்கு ஆத்திரம் உண்டாகும் அப்போதெல்லாம் மன ஆறுதலுக்காகக் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவாள். அந்தச் சமயங்களில் அவளுக்கு இந்திரனின் நினைவு வரும். அந்தக் குழந்தை இந்திரனுடையதாயிருந்தால்...! அவளருகில் இந்திரன் மட்டுமிருந்தால் அமைதியான அந்த ஓலை வேய்ந்த குடிசைக்குள்ளேயே எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் இன்பமாய்க் கழிக்கலாம்! ஆனால் இந்திரன் இல்லை... அந்த ஆரண்யம் அமைதியான குடிசை, அத்தனையும் பாழ்வெளி... தீக் கிடங்கு, இருண்ட சமாதி!

இவ்வாறு அகல்யா ஏக்கத்தாலும் யௌவனத்தின் துடிப்பாலும் உருமாறிக் கொண்டிருந்த போது ஒரு நாள்......

தேவேந்திரன் அகல்யாவின் கண் முன் தோன்றினான். அப்போது அவள் தன் கணவனின் பூஜைக்காப் பூக்கொய்து கொண்டிருந்தாள். அருகே சருகுகளின் ஓசை கேட்டு தலை நிமிர்ந்து பார்த்தாள். எதிரே தேவேந்திரன்! அவளுடைய பழங் காதலன்! வீணைக்கு நாதமும், பழத்திற்கு ருசியும், புஷ்பத்திற்கு மலர்ச்சியும், நீருக்குச் சுழற்சியும், உதட்டுக்கு உயிரும் தந்தவன்!

ஆசையும் பீதியும், காதலின் மயக்கமும் கற்பின் நிஷ்டூரமும் அகல்யாவின் முகத்தில் ஒருங்கே படர்ந்தன. அவளுடைய இருதயத்தில் சாம்பல் பூத்துப்போன ஆசையின் தணல் மறுபடி ஒரு கணம் கொழுந்து விட்டெரிந்தது.

"இந்திரா நீயா?" என்றாள் அகல்யா உணர்ச்சிகள் தடுமாற.

"நான்தான் அகல்யா! காலம்முழுவதும் காத்திருந்து கடைசிக் கணத்தில் புதையலைப் பறி கொடுத்தவன்! வானவீதியில் கண்டெடுத்த அழகின் பொக்கிஷத்தை வேத மோதும் கௌதமனின் சூழ்ச்சியால் கொள்ளை கொடுத்தவன்!"

"இங்கே ஏன் வந்தாய்?"

"அகல்யா! பல ஆயிரம் காதங்களுக்கு அப்பால், அமர பூமியில் நான் இருந்தாலும் உன் இதயத்தின் குரல் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தது, ஓடி வந்தேன்!"

"இந்திரா. என்ன முயன்றும் என் இதயத்தின் உணர்ச்சிகளை அழிக்க முடியவில்லை!"

"எப்படி மறக்க முடியும், தேவலோகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் உன் நினைவை எழுப்பும் போது! அகல்யா. இன்பம் தரும் அழகிய கற்பக விருக்ஷத்தின் நிழலை அடைந்தால், இனிமை தரும் உன்னுடைய அழகிய இருதயத்தின் குளிர்ச்சியைக் காண்பேன். வானத்து மின்னல்களைப் பார்த்தால் உன் கன்னங்களில் பறியும் புன்னகையின் கீறல்கள்தான் தென்படும் மெல்லிய இடிகளின் ஓசைகள் கேட்டால் உன்னுடைய கலகல வென்ற சிரிப்பின் ஓசைகள்தான் என் இதயத்தில் எதிரொலிக்கும்! அகல்யா. மலர்ந்து விரிந்திருக்கும் பாரிஜாதப் புஷ்பங்களில் உன்னுடைய மலர்ந்த முகமும், அந்திச் சூரியனின் சிவந்த அடிவானத்தில் உன்னுடைய செந்நிற உதடும் வானத்தின் கண் சிமிட்டும் நட்சத்திரங்களில் புன்னகை மின்னும் உன்னுடைய நீல விழிகளும் சுவர்க்க பூமியின் அமுத கலசங்களில் உன்னுடைய அழகிய வடிவமுந்தான் எனக்குத் தென்படும்! அகல்யா. நான் எப்படி உன்னை மறக்க முடியும் சொல்!"

"இந்திரா...!"

"அகல்யா, வா, நீ இல்லாமல் என்னுடைய தேவ பூமியே களையற்றுக் கிடக்கிறது! நீ இல்லாமல் ஊர்வசி ரம்பை முதலான அப்சரஸ்திரீகள் நடமாடும் தேவசபை பேய்க் கூடமாகக் காட்சியளிக்கிறது. வா என்னுடைய இந்திர லோகத்துக்குப் போய் விடுவோம். அங்கே அழிவில்லாமல் அமுத வெள்ளத்தில் கால

முழுவதும் நாம் இருவரும் இன்பமாய் நீந்திக் கொண்டிருக்கலாம்!"

"அது அதர்மம், இந்திரா. என்று எவர் ஒருவருக்கு பிரம சபையில் கன்னிகா தானம் செய்து கொடுக்கப்பட்டேனோ அன்று முதல் தானம் பெற்றவருக்குப் பணி விடை செய்து கிடக்க வேண்டிய அடிமை நான். அதுதான் என் சதி தர்மம், என் கடமை."

"அந்தத் தர்மமும் கடமையும் அழிவற்ற பூலோக வாசிகளுக்கு! அழிவற்ற அமரர்களான நமக்கல்ல"

"இந்திரா, நான் இப்போது பூலோகத்து வாசி. பூலோகத்துச் சம்பிரதாயங்களைப் புறக்கணிக்கவோ, பதித் துரோகம் செய்யவோ முடியாது. என் கணவரை வஞ்சித்து உன்னோடு வானுலகத்திற்கு வர மாட்டேன். உன்னோடு வந்து ஸ்வயம் பதிதை என்று தூற்ற என் பெயர் மாசு பட விட மாட்டேன்."

"அகல்யா, வஞ்சித்தவன் உன் கணவன். வஞ்சிக்கப்பட்டவர்கள் நாம். இதை ஒருபோதும் மறவாதே! அகல்யா, இந்த நிர்மானுஷ்யமான வனத்தில் நீயும் நானும் தனித்திருக்கிறோம். ஏமாறியவள் நீ. ஏமாற்றப்பட்டவன் நான். நம் இருவரையும் ஏமாற்றியவன் கங்கை தீர்த்தத்துக்கு நீராடப் போய் விட்டான். வா இந்தப் புதர்களுக்குப் பின்னால் நம்முடைய பல நாள் கனவை இன்று நம் இதயத்தால் பருகிடுவோம். நீ காலம் முழுதும் என்னோடு வாழ்ந்து உன் பெயரை மாசாக்கிக் கொள்ள விரும்பாவிட்டாலும் இன்று ஒரு நாள் ஒரு பொழுதாவது உன்னை மறப்போம். என்னுடைய நெஞ்சின் நெடுநாள் தாகம் தணிந்து விடும். அகல்யா, இந்த ரகஸ்ய பந்தம் எவர் கண்ணுக்கும் புலனாகாமல் இந்த இருண்ட வனத்துக்குள்ளே புதைந்து போகும்! நம்முடைய இதயத்தின் பெருமூச்சுக்கள் தென்றலோடு கலந்து மறைந்து விடும். நம் நெற்றியில் பொங்கும் வியர்வைகள் காலைக் கதிரவனின் பனி நீரோடு கரைந்து விடும். நம் இருவர் நெஞ்சிலும் எழும் இன்பத்தின் ஓசைகள் பக்ஷி ஜாலங்களின் கலகலப்போடு கலந்துவிடும். வா அகல்யா!"

"சே! இந்திரா. உன்னுடைய வாஞ்சை மயமான இருதயத்தில் இவ்வளவு பெரிய மிருகம் ஒளிந்திருக்குமென்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இந்திரா, இருண்ட வனமும் புதர்களும் நம் பேய்த்தனத்தை மறைத்து விடலாம். ஆனால் நம் ஆத்மா எந்நேரமும் விழித்துக் கொண்டிருக்கும். இந்திரா உன்னைக் கெஞ்சுகிறேன். உன் மீது கொண்ட காதலின் பேரால்! இந்திரா வியாழ பகவான் உனக்காக உருவாக்கிய உலகாயத வாதத்தைக் கூறி என் பேதை நெஞ்சைப் பாழாக்கி விடாதே. என் இருதயத்தின் அமிழ்ந்து சாம்பல் பூத்துப் போன பழைய ஆசைகளை எழுப்பி என்னைப் பாவப் பாழ் நரகில் தள்ளாதே. நீ தேவர்க்கு அரசன். தீய எண்ணங்களால் தேகம் தேய்ந்து மங்கையின் மானத்தைக்

குலைப்பது சரியல்ல. அவ்வாறு நீ செய்யத் துணிவாயானால், இனி சரீர சம்பந்தமான நினைவேபடு என்னை நெருங்கின் என் கற்பைக் குலைத்து விட்டால், என் உள்ளக் கோவிலில் காதலின் அழகு சிலை யாய் வைத்துக் கும்பிடும் உன் மாசு மறுவற்ற உருவம் உடைந்து போன கோர ரூபமாக மாறி விடும்!''

''அகல்யா, என்ன பிதற்றுகிறாய்?''

''இந்திரா, ஒரு காலத்தில் உன் முகத்தில் ஆசையோடு கொஞ்சி விளையாடிய இந்த அழகிய கைகள் இன்று பூதேவரின் பூஜைக்குப் பூ கொய்ய வேண்டியவை. ஒரு காலத்தில் உணர்ச்சி களை உவந்தளித்த இந்தப் பவள உதடுகள் இன்று வைணவரின் பவித்திரமான திருநாமங்களை உச்சரிக்க வேண்டியவை. ஒரு காலத்தில் பூங்காவின் மலர்களைப் போலப் புதுபுது அழகுகள் சொரிந்த இந்த அழகிய உடல் இன்று பூலோகத்தவரின் பூஜைக்கு உரியது. இந்திரா, நீ அன்று கண்ட அகல்யா வேறு. இன்று காணும் அகல்யா வேறு. இந்த அகல்யா தேவேந்திரனின் காதலி அல்ல கௌதமரின் தர்ம பத்தினி! இன்று இவள் முகத்தில் பிரகாசிப்பது யௌவனத்தின் களையல்ல, மகா முனிவர் தவதேஜ ஸின் பிரதி பிம்பம்! இந்திரா இன்று இவளுடைய ரம்யமான இருதயம் கௌதமரின் வேள்விப் பீடம். அதில் இவளுடையப் பழங் காலத்து நினைவுகள் உலர்ந்த சருகுகள் ஆகிவிட்டன. இந்திரா, இன்று என் இருதயம், உணர்ச்சிகள் மாய்ந்து போன ஒரு சமாதி!''

''பாவி, பாற்கடலில் பிறந்தவளின் யௌவன உணர்ச்சிகளைக் கௌதமன் பாழாக்கி விட்டான்!''

''இந்திரா! என்னை மறந்து விடு. மறுபடி என்றும் திரும்பி வராமல் இங்கிருந்து போய் விடு!''

''போவதா? அகல்யா இந்திரன் இச்சித்த பொருளை இந்த இருண்ட அரண்யத்திலே அடையாமல் போக மாட்டான். வாசவன் மார்பில் திகழ வேண்டிய வண்ண மலரை வஞ்சனை யால் கொள்ளை கொண்ட கௌதமனை வஞ்சிக்காமல் போகமாட் டான். அகல்யா. தேவலோகத்தில் பாரிஜாதம் தானாக மலர்க்க வில்லை பலாத்காரமாய்ப் பறித்து வந்தேன். இன்று நான் விரும்பியவாறு வண்ண மலர் தானாகவே வாசனை தரவில்லையென் றால் அதைக் கசக்கியாவது முகர்வேன்!''

''பாவி, நீ அழிந்து போவாய்!''

''அகல்யா, அமரர்கள் அழிவதில்லை. நான் அமரேசன்!''

''அவமானம் அடைவாய்''

''அகல்யா, கங்கையாடச் சென்ற கௌதமன் திரும்பி வரும் நேரமாயிற்று. மற்றொரு சமயம் வசந்தம் பூத்துச் சொரியும் போது வருகிறேன்.''

தேவேந்திரன் கானகத்து இருளில் மறைந்தான். அவன் கண்களில் தெறித்த சூழ்ச்சிப் பார்வை காரிகையின் நெஞ்சை விட்டு மறையவில்லை!

ஃ ஃ ஃ

வசந்த காலத்தில் ஒரு நாள்.

நடுச்சாமம்.

வானத்து நிலாவைக் கார்மேகங்கள் மறைந்திருந்தன. கானகமெங்கும் காரிருளின் கனத்த போர்வை எங்கும் ஓரே பேய்க் காட்டு அமைதி சாக்குருவிகள் கூட வாய் அடங்கிக் கிடந்தன. புதர்களுக்குப் பின்னர் கருநாகங்கள் கூட நெளியவில்லை.

கௌதமரின் குடிசைக் கருகில் உலர்ந்த சருகுகளின் சலசலப்பு கேட்டது. வஞ்ச இந்திரன் மோக வெறியோடு தள்ளாடிக் கொண்டு வந்தான். வானத்தின் பனி பெய்தது குளிர் பொறுக்க முடியவில்லை! குடிசைக்குள் தான் கதகதப்பு இருந்தது

இந்திரன் குடிசையின் ஓலைத் துவாரத்தின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். மண் சுவரின் சின்னஞ்சிறு அகல் விளக்கு ஒன்று லேசாக எரிந்து கொண்டிருந்தது. அதன் தீ நாக்குகள் நடுங்கின!

ஆசிரமத்தின் ஒரு மூலையில் பேதை அகல்யா கைக்குழந்தையை அணைத்தவாறு அயர்ந்து தூங்கினாள். மற்றொரு மூலையில் திரிகாலமும் உணர்ந்த மகாஞானி கௌதமர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்.

இந்திரன் கடைசி சாமத்துக் கோழி போல் உருமாறி ஆசிரமத்தின் கூரையிலிருந்து கூவினான். பொழுது விடியப் போகிறது என்று எண்ணிக் கௌதமரிஷி எழுந்து கங்கை தீரத்துக்கு நீராடச் சென்றார்.

இந்திரன் கௌதமரைப் போல உருமாறிக் குடிசைக்குள் நுழைந்தான்.

குடிசைக்குள் அகல்யா ஒன்றும் தெரியாத பேதையாய் மெய் மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய கை அணைப்புக்குள் அவளுடைய கைக்குழந்தை தூக்கத்தில் சிரித்துக் கொண்டிருந்தது.

இந்திரன் நடுங்கினான். அகல் விளக்கின் திரியும் நடுங்கித் தத்தளித்தது.

சூறுவளியொன்றை எழுப்பி மாடத்திலிருந்த சிறு அகல் விளக்கையும் அணைத்து விட்டான். இருட்டு தான் அவனுடன் பிறந்த மனச்சாட்சியைக் குருடாக்குமென்று நம்பி.

குடிசைக்குள் எங்கும் கனத்த இருட்டு அப்பிக் கிடந்தது. கருநாகம் போல் இந்திரன் ஊர்ந்து சென்று அகல்யாவின் மெல்லிய கைகளைப் பிடித்தான்.

அகல்யா புரண்டு படுத்தாள். அவள் தூக்கம் சரியாகக் கலையவில்லை.

"அகல்யா!" என்று இந்திரன் மெல்லக் கூப்பிட்டான். அவளுடைய பூரித்த கன்னங்களை வாஞ்சையோடு அழுத்திப்பிடித்தது.

"யாரது?" என்று கலவரமடைந்த குரலில் கேட்டவாறு கண் விழித்து உற்றுப் பார்த்தாள். நிலாத் துண்டின் ஒரு சிறு ஒளியில் அவளுடைய கணவர் கௌதமரின் தோற்றம் போல ஓர் உருவம் தென்பட்டது.

"பிரபோ! நீங்களா?" என்று பதிப்பிரேமையோடு கேட்டாள்.

"ஆமாம். வேறு யாருமில்லை! நான் தான்!"

அவர் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்க அகல்யா எழுந்திருக்க முயன்றாள்.

கௌதமரின் வஞ்ச உருவில் இருந்த இந்திரன் அவளை எழுந்திருக்க விடாமல் தடுத்து "அகலிகே, வீணாக எழுந்து உன் அழகிய உடலை அலட்டிக் கொள்ளாதே! படுத்திரு!" என்றான்

"பிராணபதி, இன்னும் கடைசிச் சாமம் ஆகவில்லையே? அதற்குள் தூங்கி எழுந்திருந்து விட்டீர்களா?"

"உஷ். மெல்லப் பேசு. தூங்கும் குழந்தையை எழுப்பி விடாதே!" என்று இந்திரன் தடுத்தான்.

அந்த மாயக் கள்வனை மணந்த தன் மணவாளன் என்று பரிபூர்ணமாக நம்பினாள் பேதை.

அவனிடமிருந்து எழுந்த மதி மயக்கத்தின் பெருமூச்சுக்கள் அகல்யாவை மெய் சிலிர்க்கச் செய்தன. என்றுமில்லாப் பித்து இன்று தன் கணவர் கொண்டாரே என்று உள்ளங் குதூகலித்தாள். ஆனால் ஏதோ ஒரு பயங்கரப் பிரமை அவள் உள்ளுணர்வில் தட்டியது.

"சுவாமி! நாளை மதியத்தில் நீங்கள் மகாயாகம் தொடங்கப் போகிறீர்கள். இன்று இரவு நாம் நிஷ்காம்யமாயிருக்க வேண்டாமா?" என்று அகல்யா ஏக்கத்தின் சோர்வோடு கேட்டாள்.

"அகல்யா, இந்தக் கணம் நான் எந்தவிதத் தர்க்கத்தையும் கேட்கும் நிலையில் இல்லை. சம்ஹார மூர்த்தியைப் போல் மன்மதனை எரிக்க எனக்கு மூன்றாவது கண் இல்லை!"

அகல்யா பதில் பேசவில்லை. அளவற்ற பதிப்பிரேமை அவளைப் பேசச் சக்தியற்றவளாக்கி விட்டது.

வஞ்ச இந்திரன் அவளுடைய வண்ண மலர்க்கரங்களைப் பற்றினான். அந்தக் கைகளின் போக்கு அவள் தன் கணவரிடம் என்றுங் காணாத புதுமையாகப்பட்டது. உலர்ந்த சருகுகளைத் தொடுவது போல் உணர்ச்சியற்ற கௌதமரின் கைகளா அவை? அவ்வீணையின் தந்திகளை மீட்டுவது போல் துடிக்கும் அந்தக் கைகள் அவளுடைய கணவருக்குரியவையா? இல்லவே இல்லை!

அகல்யா சந்தேகமுற்றவளாய் நிலாவின் சிறு ஒளியில் எதிரே தெரியும் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். கணவரின் அதே அகன்ற முகம், பஞ்சடைந்த தலை ரோமம், வெண்ணிறத் தாடி.

ஆனால் இவ்வளவு வாலிபம் எங்கிருந்து வந்தது? புலனடக்கம் மிகுந்த முனிவருக்கு இளைஞனைப் போல அவ்வளவு குறும்புகள் எங்கிருந்து வந்தன...!

பிறகு தென்றல் மாறி சூறாவளி ஆயிற்று. இடையிடையே அகலியாவின் மெல்லிய நெஞ்சில் புதுமையின் அதிர்ச்சிகள் விழும். அவை ஆத்மாவின் சிலிர்ப்பா?

அகலியா புதுமணத் தேனைப் பருகினாள். அவள் கண் முன் இன்பப் பாற் கடலின் நன்முத்துக்கள் சிதறிக் கொண்டிருந்தன. அப்போது...

வெற்றியின் எக்களிப்போடு மனோ ரம்யமான வெள்ளைக் குதிரை மீது விர்ரென்று ஏறி மனதின் உல்லாச வான வீதியில் பறந்து கொண்டிருந்த இந்திரன் ''அகலியா நான் யார் தெரியுமா?'' என்று கேட்டான்

அகலியா திடுக்கிட்டுப் போனாள்.

அந்தக் குரல் கணவரின் குரலல்ல.

அந்த குரலில் தொனித்த வேகம்?

ஐயோ, தேவேந்திரன்!

அகலியாவுக்கு இந்த பூமண்டலமே சுற்றுவது போல் இருந்தது. ஒருபுறம் இன்பத்தின் கவர்ச்சி. மற்றொருபுறம் மனோ தர்மத்தின் அலறல்.

''இந்திரா...தேவேந்திரா!... நான் அபலை... பேதை!... மாசு மருவற்ற மகாமுனிவர் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவள். என்னை மாசு படுத்தாதே...உன்னைக் கைகெடுத்துக் கும்பிடுகிறேன். இந்திரா. என்னை விட்டுவிடு!...விட்டுவிடு!'' என்று கண்களில் நீர் வடியக் கதறினாள்.

ஆனால் இருமருங்கும் கரையை உடைத்துக்கொண்டு பொங்கி வரும் காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்க முடியுமா? உச்சி மீது இடிந்து விழும் மலையின் குத்துக் கல்லை இரண்டு பூக்கரங்களால் தடுத்து நிறுத்தி விடத்தான் முடியுமா? காய்ந்த மூங்கில் காட்டில் தீப்பிடித்து எரியும் பிரளயத் தீ அபலையின் இரண்டு கண்ணீர்த் திவலைகளைப் பொருட்படுத்தவில்லை!

புலி வாயில் சிக்கியது மருண்ட மான். பூ நாகத்தின் விஷப் பல்லில் விழுந்தது தவளை. எலி வளைக்குள் புகுந்து கவ்வியது பூனை.

அகலியா செயலற்றுக் கிடந்தாள்! பல யுகங்களாகக் கற்பனை கண்டு கண்டு எதிர்பார்த்திருந்த இன்பக் கனவனைத்தையும், கிடைத்த ஒரே சந்தர்ப்பத்திற்குள் அனுபவித்து விடவேண்டும் என்ற வேகம் இந்திரனிடமிருந்தது. பொங்கி வரும் அலை கடல் முழுவதையும் ஒரே வாயில் அள்ளிப் பருகிவிட வேண்டுமென்ற வேகம் அவனிடமிருந்தது. இத்தனை நாளாக இன்பம் இன்னதென்று தெரியாதிருந்த மெல்லிய இருதயம் படைத்த அகலியாவால் அந்த வேகத்தைத் தாங்க முடியவில்லை. காட்டுத் தீயின் வேகத்தையும், சுழன்றடிக்கும் சூறாவளியின் போக்கையும் அவளால் தாங்க முடியவில்லை.

புயலில் சிக்கிய பூவானாள்! மூர்ச்சித்தாள்!

சூறாவளி அடங்கியது......

இந்திரன் உள்ளத்திலிருந்த பேய் அகன்றது. அகல் விளக்கை ஏற்றினான். அகல்யா மண் தரை மீது மூர்ச்சையாகிக் கிடந்தாள். வெளியே பயங்கரமான பேய்க் காற்று!

அப்போது ஆசிரம வாசல் தட்டியை யாரோ திறக்கும் சப்தம் கேட்டது. தேவேந்திரன் பயந்து நடுங்கிக் கொண்டே திரும்பிப் பார்த்தான்.

அங்கே அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் சுட்டெரிக்கும் ஊழித் தீ போல் கௌதம மகரிஷி நின்று கொண்டிருந்தார். தேவேந்திரன் பயத்தால் பூனை போலக் குறுகினான்.

கௌதமர் இந்திரனையும் அகல்யாவையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு அடக்க முடியாத கோபத்தோடு, "பாவி! நீ வானரசன் வையத்தியற்கையை அழித்து விட்டாய். கோழி போல் கூவி கொண்டு கணவனைப் பிரித்துக் குலமகளின் கற்பைப் பறித்து என்னை வஞ்சித்தாய்!" என்றார் கௌதமர்.

வஞ்சம் என்றதும் வெட்கித் தலை குனிந்து நின்ற இந்திரனுக்குச் சுருக்கென்று தைத்தது. "எது வஞ்சனை? பூவின் மெல்லிய இருதயம் படைத்தவளைக் கருங்கல்லின் கடின மனம் படைத்த ஒரு பூசுரன் குயுக்தியாய் பசுவொன்றைச் சுற்றி வந்து தானம் பெற்றானே அது வஞ்சனையா? அமிர்த மயமான யௌவன ஆசைகளின் மத்தியில் வாழ வேண்டியவளை ஆசைகளைப் புழுதியெனக் கருதும் ஒரு முனீஸ்வரன் மணம் புரிவதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்களே தேவர்கள், அது வஞ்சனையா? அபலையொருத்தியின் கண்ணீரைக் கண்டும் பொருந்தா மணத்திற்குச் சாட்சியாய் வேள்வித் தீயில் எழுந்த அக்கினி அணைந்து போகாமலிருந்தானே, அது வஞ்சனையா? எது வஞ்சனை, முனிவரே?" என்று கேட்டான் இந்திரன்.

"பாவி, உன் தீச்செயலுக்குச் சத்திய முத்திரை தேடாதே! இத்தனை வருஷங்களாக நான் இயற்றிய தவப் பெருமைகளை எல்லாம் குலைத்தாய் உன் புன் செயலால்! அகல்யாவின் மீது நீ கொண்ட அற்ப ஆசைக்குக் காரணமென்ன? பெண்ணின் சிவந்த உதடும், நீல விழியும், மூக்கும், கூந்தலும், ஊன் சதை பொதிந்த ஊத்தை உடலின் அலங்கோலத்தைக் கண்டு முப்பத்து முக்கோடி தேவர்களும் சிரிக்கட்டும்! என்று கௌதமர் இந்திரனை சபித்தார்.

"கௌதமரே, கோபத்தில் மதி இழந்து விட்டீர்! உம்முடைய சாபத்தால் என் உடலில் உண்டாகும் ஒவ்வொரு அலங்கோலத்திலும் உம்முடைய மனைவியின் அவமானக் கதையை எண்ணிச் சிரிக்கும் ஆயிரம் கண்கள் இருக்கும் என்பதை மறந்து விட்டீர்! அது மட்டுமல்ல! தேவருக் கதிபனான என் அலங்கோலத்தால் நீங்கள் தேடி வரும் தேவலோகத்தின் பெருமையே நசித்து விடும்!" என்றான் வஞ்ச இந்திரன்.

கௌதமர் தலை குனிந்தார்!

கொடுத்த சாபத்தை அழித்தெழுத முடியுமா? நீண்ட நேரம் யோசித்த பிறகு "வஞ்செஞ்சக் கள்வா. வாக்குச் சாதுரியத்தால் கௌதமனின் சாபத்தை அழித்தெழுதி விட முடியாது! ஆனால் சாபத்தின் உருவத்தை ஓரளவு மாற்றுகிறேன். உன் உடலில் உண்டாகும் அலங்கோலங்கள் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உன் கண்களுக்கு மட்டும் எந்நேரமும் புலனாகிக் கொண்டிருக்கட்டும். அதைப் பார்த்துப் பார்த்து மனம் சித்திரவதை அடைவாய் அதுதான் மனசாட்சி என்ற பேயாட்டம் இதை விட பயங்கரமான தண்டனை உனக்கு வேறில்லை." என்றார் கௌதமர்.

வானத்துக் கவிஞர்கள் வசைச்சொற்களால் திட்டிய தேவேந்திரனின் தேகம் அலங்கோலமாயிற்று.

கௌதமர் அகல்யாவை உற்றுப் பார்த்தார். அப்போதும் அந்தப் பேதை மூர்ச்சை தெளியாமல் கிடந்தாள்.

கௌதமர் அந்த அபலையை நோக்கி 'ஹா அகல்யா மணந்த கணவரின் ஸ்பரிசத்துக்கும் மாற்றான் ஒருவனின் ஸ்பரிசத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் பயிர்ப்பற்ற பேதையாய் இந்திரன் கைகளில் கல் போல் கிடந்தாய். நீ கருங் கல்லாகவே கிடந்து புனிதம் குன்றியவளே பல வருஷக் கடுந் தவத்திற்கும் பிறகு ஏக பத்தினி விரதனொருவனின் பாத ஸ்பரிசத்தால் புனிதவதியாக புனர் ஜன்மம் அடைவாயாக!" என்று சபித்தார்.

அப்போது இன்ப மூர்ச்சையால் ஆழ்ந்து கிடந்த அகல்யா, கருங்கற் சிலையானாள்!

முற்றிற்று.

---

## இந்த மாத புதிர்

காவல நிலையத்தினர், குற்றம் செய்திருப்பார்கள் என்று சந்தேகப் படும்படியான சூழ்நிலையில் உள்ள நால்வரை கைது செய்தனர். அவர்களில் ஒருவன்தான் குற்றம் செய்திருக்கிறான். என்பது தெரிந்து விட்ட அவர்கள் நால்வரையும் வரிசையாக விசாரித்த பொழுது அவர்கள் கொடுத்த வாக்குமூலம் பின் வருமாறு.

ரமேஷ் — நான் செய்யவில்லை.

மோகன் — ரமேஷ் பொய் சொல்கின்றான்.

விஜயன் — மோகன் பொய் சொல்கின்றான்.

சந்திரன் — மோகன் செய்தான்.

மேற் கண்ட நான்கு வாக்குமூலங்களில் ஒன்றுதான் உண்மை யென்றால் குற்றம் செய்தது யார்?

## PRESS & REGISTRATION OF BOOKS ACT

Registration of Newspapers (Central) Rules, 1956

FORM IV (See Rule 8)

Statement about ownership & other particulars about Newspaper பிரேம நந்தம்

1. Place of publication — 106-A, Arcot Road, Madras-24.
2. Periodicity of its publication — Monthly
3. Printer's Name — Rm Arunachalam
   Nationality — Indian
   Address — 106-A, Arcot Road,
4. Publisher's Name — Rama Kannan
   Nationality — Indian
   Address — 106-A, Arcot Road, Madras 600024.
5. Editor's Name — Rama Kannan
   Nationality — Indian
   Address — 106-A, Arcot Road, Madras-600024.
6. Name and address of the indvidual who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital. — Rm. Renganayagi — 106-A, Arcot Road, — Madras-600024.

I, Rama Kannan, heaeby declare that the partculars given above are true to the best of my knowledge and belief

(Sd) RAMA. KANNAN.
Signature of Publisher.

Dated, 1—3—1977.

---

Printed by Rm. Arunachalam at Prema Art Printers Madras 600024. Edited and Published by Rama. Kannan AT 106-A Arcot Road, Madras-600024.

PREMA RATHNAM MARCH 1977. Regd No. TN/MS (S) 92.




COVER PRINTED BY: SRI SHENBAGAM LITHO PRESS, SIVAKASI.